DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan, Broker
Joy H Selvanayagam, Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோர்ட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
$1.00
416-752-1524
416-752-6703
உதயம் 1298
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday February 19, 2021

# ஒட்டாவா கனடிய பாராளுமன்ற வளாகத்திற்கு முன்பாக சுமார் 150 வாகனங்களில் கனடா வாழ் தமிழ் மக்கள்குரல் எழுப்பினர்



நேற்று முன்தினம் புதன்கிழமை மதியத்திற்கு அப்பால் ஒட்டாவா மாநகரில் உள்ள கனடிய பாராளுமன்ற வளாகத்திற்கு முன்பாகவும் அனைச் சுற்றிய வீதிகளிலும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொடியான புலிக்கொடிகளை பறக்கவிட்ட வண்ணம் சுமார் 150 வாகனங்களில் கனடா வாழ் தமிழ் மக்கள் தங்கள் குரல்களை எழுப்பிய வண்ணம் இலங்கை அரசுக்கு எதிரான கோசங்களை சொல்லியபடி ஒன்று கூடி பேரணி நடத்தினர்.

இந்த பேரணியின் முக்கிய நோக்கமாக திகழ்ந்தது "இலங்கையில் 2009ம் ஆண்டு மற்றும் அதனைத் தொடர்ந்து இலங்கை அரசு நிகழ்த்திய தமிழ் மக்கள் மீதான படுகொலைகள், அவை தொடர்பான போர்க்குற்றம் ஆகியவற்றுக்க தண்டனை வழங்கும் வண்ணம், இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் முன் நிறுத்தி விசாரணைகளை நடத்த வேண்டும. இதற்கு கனடிய அரசு தனது ஆதரவை வழங்கவேண்டும்" என்பதே ஆகும். மேற்படி வாகனப் பேரணியில் பங்கெடுத்த 150 வாகனங்கள் ரொரன்ரோ, மொன்றியால் மற்றும் ஒட்டாவா ஆகிய நகரங்களில் இருந்து சென்று பங்கேற்றன.




புதன்கிழமை நடைபெற்ற வாகன பேரணியின் இறுதியில் அமைப்புக் குழுவினரால் தயாரிக்கப்பெற்ற மகஜர் ஒன்று தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஹரி ஆனந்தசங்கரியிடம் கையளிக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இறுதியில் கனடிய தலைநகரமான ஒட்டாவாவில் அமைந்துள்ள இலங்கை உயர் தூதரகத்திற்கு முன்பாகவும் அன்று அங்கு கூடியவர்களினால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பெற்றது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# மார்க்கம் மாநகரசபையின் முழுமையான ஆதரவுடன் 7ம் வட்டாரத்தில் இலங்கை அரசின் தமிழின அழிப்பு நினைவுத் தூபி

கடந்த வாரம் எமது பிரதான செய்திகளில் ஒன்றாக பிரம்டன் மாநகரசபைக்குச் சொந்தமான பூங்கா ஒன்றில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைப்பதற்கான சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பிரம்டன் மாநகரசபையின் மேயர் பெற்றிக் பிரவுண் அவர்களின் செய்தியை விபரங்களுடன் பிரசுரித்திருந்தோம்.

இதே போன்று மார்க்கம் நகரசபையின் 7ம் வாட்டார அங்கத்தவர் காலித் உஸ்மான் அவர்களது முயற்சியினால் மார்க்கம் நகரசபையின் முழுமையான அனுமதியோடு மாநகரசபையின் 7ம் வட்டாரத்தில் தமிழின நினைவுத்தூபி அமைக்கும் திட்டத்துக்கு நகரசபை அனுமதி வழங்கியுள்ளதாக மேற்படி வட்டாரத்தின் உறுப்பினர் காலித் உஸ்மான் அறிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக மேற்படி நகரசபை உறுப்பினர் விடுத்துள்ள அறிக்கையில் "இலங்கைத்தீவில் தமிழர்களின் அவல நிலை நிலையை குறிக்கும் வகையில் இந்த நினைவுத் தூபி மார்க்கம் நகரில் அமையும்" என்று தெரிவித்துள்ளார்.



INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
* North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட அனுபவம்
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 272 1222
905 794 4404


THE GUARDIAN
HOME REALTY INC.,BROKERAGE
Where life begins...
நட்பான எங்கள் விற்பனை நிறுவனத்தின் முகவர்கள் மூலம் தங்களது வீட்டின் பெறுமதியை சட்டபூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை (Appraisal) பெற்றுக்கொள்ளலாம்.
Are you interested in working in Real Estate?
Join our team!
Discover how our results producing motivation, coaching, marketing, and technical support will maximize your income as a sales professional.
Email us at info@theguardianhomes.com for more details.
80 Nashdene Rd, unit# F119
Scarborough, ON M1V 5E4
416 989 6565
www.theguardianhomes.com

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

**BASEMENT for RENT**

2 bedroom basement
with separate entrance
மற்றும் எல்லா வித வசதிகளுடனும்
வாடகைக்கு உண்டு.

குடும்பம் விரும்பதக்கது.

**Call:**
**(416) 821-2181**

**COMPUTER REPAIR**

Laptop computer repair,
virus removal, data recovery,
upgrading & any other
troubleshooting, network installation,
printer problems அனைத்து
விதமான computer திருத்த
வேலைகளும் நியாயமான
விலையில் உங்கள் வீட்டில் வந்து
திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN:**
**(416) 894-6244**

**புகையிலை விற்பனைக்கு**

யாழ்ப்பாணத்தில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
புகையிலை விற்பனைக்குண்டு.

உடன் தொடர்பு கொள்ளவும்.
அழையுங்கள்:
**(647) 629-9095**

**RESTAURANT for LEASE**

Well established
breakfast restaurant with
2 bedroom apartment
available for lease.

Turn Key Business.
25 min drive from Oshawa.

**Call:**
**(416) 888-5941**

## உதயன் கதிரோட்டம்

# ஒன்றாய் இணைய வேண்டிய புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள் மத்தியில் தொடர் ஆடு புலி ஆட்டம் எதற்கு?

எமது தாயகத்தில் 2009 மே மாதம் எதிர்பாராத வகையில் தமிழ் மக்கள் மீது உலக நாடுகள் ஒன்று சேர்ந்து தொடுத்த பாரிய தாக்குதல்கள் அந்த குறுநாட்டை குதறி எடுத்தன. தங்களுக்குள் மோதிக் கொண்ட பல நாடுகள் கூட விடுதலைப் புலிகள் இயக்கத்தை மட்டுமல்ல, ஒன்றும் அறியாத தமிழ் மக்களையும் அவர்களில் காணப்பட்ட குழந்தைகள் மற்றும் சிறுவர் சிறுமியர் ஆகியோரையும் கொன்றழித்த அந்த நாட்கள் மறக்க முடியாதவை. அதனிலும் கொடியவை முள்ளிவாய்க்கால் என்னும் ஒரு மூலையில் முடிக்கப்பட்ட எமது மக்களுக்கும் இனத்திற்கும் எதிரான யுத்தம்.

அன்றிலிருந்து இன்றுவரை மேலும் இறப்புக்கள், இழப்புக்கள் என எமது தமிழினம் அனுபவிக்கும் கொடுமைகள் ஏராளம். இவ்வாறான அழிவிற்குள் தள்ளப்பட்ட எமது மக்களுக்கு நீதி கேட்டு போராடுவோம் என்று புறப்பட்டவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள். அமைப்புக்கள் ஆலோசனைக் குழுக்கள் என பலரும் பயணித்து உலகெங்கும் கருத்தரங்குகளை நடத்தினார்கள்.

இவ்வாறாக செயற்பட்டவர்கள் ஐக்கிய நாடுகளை சபையிலும் தங்கள் கோரிக்கைகளை முன்வைத்து வார்த்தைகளால் போராடினார்கள். இலங்கையிலிருந்து தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட பயணித்து வந்தார்கள். போனார்கள். ஆனால் இன்றுவரை 11 வருடங்களுக்கு மேலாக கடந்தும் எதைச் சாதித்தார் என்று பார்த்தால், அதற்கு பதில் பூச்சியம் தான். காலத்தைக் கடத்தினார்கள் சிலர். கோடரிக் காம்புகளாக மறைந்திருந்து செயற்பட்டார்கள் சிலர். புலம் பெயர் நாடுகளிலில் முன்வந்து பணியாற்றி வேண்டிய பல அமைப்புக்கள் தங்களை மறைத்துக்கொண்டார்கள் சிலர். அவர்கள் மௌனமாக இருப்பது தங்களுக்கு நலலது என்று அடங்கியிருந்தார்கள்.

ஆனால் மறுபக்கத்தில் பாதிக்கப்பட்டவர்கள் முன்னாள் போராளிகள், அவர்தம் குடும்பங்கள், இலங்கை அரசினால் காணாமால் ஆக்கப்பட்டவர்கள், அவர்களின் குடும்பங்கள், மக்கள் நலனுக்காக உழைத்த பெருமக்கள். இவ்வாறானவர்கள் அனைவரும் ஏமாற்றப்பட்டவர்களாக தொடர்ந்து துன்பத்திலும் மன அழுத்தத்திலும் மூழ்கிப் போனவர்களாக..

ஆனால் உலக நாடுகளில் தோன்றிய பல அமைப்புக்கள் அறிக்கைகளை வெளியிட்ட வண்ணம் செயற்பட்டார்கள், ஆனால் ஓரிரு அமைப்புக்கள் மெதுவாக தங்கள் முகங்களை தமிழர்கள் பக்கம் காட்டிய வண்ணம் நகர்ந்து தமிழர்களுக்கு பாதகமான முடிவுகள் கிட்டும் வகையில் செயற்படத் தொடங்கினார்கள். முன்னைய மைத்திரி-ரணில் ஆட்சியில் சில தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் காட்டிய வழியில் சென்று இலங்கை அரசிற்கு இரக்கம் காட்டுபவர்களாக மறைமுகமாகச் செயற்பட்டார்.

இவ்வாறான பாதகமான பாதையில் பயணித்தவர்கள், இலங்கை அரசின் போர்க்குற்ற விசாரணைகள் பின்தள்ளிப் போவதற்கு துணையாக நின்றார்கள். இன்றும் அந்த பாதகம் செய்யும் பணியைத் தொடர்ந்த வண்ணமே உள்ளார்கள் அவர்கள்.

ஆனால் தாயகம் மற்றும் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் திடீரென எழுந்து நின்று கேள்விகள் கேட்கின்றார்கள். " எமது புலம் பெயர் அமைப்புக்கள் இத்தனை நாட்கள் எதைச் சாதித்தன?" என்று.

ஆனால் அவர்களுக்கு பதில்களை கிடைத்ததோ? அன்றி மறுக்கப்பட்டதோ? அது தெரியாத நிலையில் சில உண்மைகள் வெளியாகி உள்ளன.

இங்கிலாந்தில் "தமிழர்களின் அரசியல் நலன்களைக் கவனிக்கின்றோம்" என்று புறப்பட்ட புவுகு என்னும் உலகத் தமிழர் பேரவை அமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் சிலர், நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணங்கள் நிறைவேறுவதற்கு தடையாகச் செயற்பட்டார்கள். மைத்திரி-ரணில் ஆட்சியில் அந்த அரசின் விருந்தினர்களாக இலங்கையின் தலைநகருக்கு அழைக்கப்பட்டார்கள்.விருந்துண்டார்கள். இதனால், பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகள் குறைந்த பட்சம் கேட்கப்பட வேண்டிய சபைகளில் அல்லது கூட்டங்களில் கேட்கப்படவில்லை. அவர்களுக்கு கிட்ட வேண்டிய நீதி கிட்டவே இல்லை.

இந்த செயற்பாடுகளை சாதாரண மக்கள் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் எமது மக்களின் தூரதிஸ்டம் எதுவென்றால் இவ்வாறாக எமது மக்களின் குரல்கள் மற்றும் கதைகள் கேட்கப்பட வேண்டிய இடங்களில் இன்னும் கேட்கப்படவில்லை. புல தமிழ் அமைப்புக்கள் கூட இந்த விடயங்களில் தடையாக இருக்கின்றன என்பதே கவலைக் குரிய விடயமாகும். எனவே மக்கள் விழித்தெழ வேண்டிய நேரம் வந்துள்ள. அடுத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபைக் கூட்டத்தில் இனிமேலாவது பாதிக்கப்பட்ட மக்களின் குரல்களும் அவர்களின் "கதை"களும் கேட்கப்பட வேண்டும்.

# 'வில்லங்களைச் சந்திக்கவுள்ள' விமல் வீரவன்ச

இலங்கையில் ஜேவிபி என்று தன்னை அடையாளப்படுத்தி இடதுசாரிக் கொள்கைகளை கடைப்பிடித்து அரசியலுக்கு வந்து பின்னாளில் தமிழர் விரோத மற்றும் இந்திய விரோத அரசியல்வாதியாக தோற்றம் பெற்ற அமைச்சர் விமல் வீரவன்ச தற்போது பல நெருக்கடிகளை சநதிப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.



விமல் வீரவன்ச முன்னைய அரசாங்கங்களில் அமைச்சராக பதவி வகித்தபோது பல குற்றச்சாட்டுக்களைச் சந்தித்தவர். அவர் தற்போது ஆளும் கட்சி உறுப்பினர்களின் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஊடக சந்திப்புக்களை நடத்தும்படி ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது. அதற்கமைய, எதிர்வரும் சில தினங்களில் அமைச்சர் விமல் பற்றி கடும் விமர்சனம், எதிர்ப்பு கருத்துக்களை முன்வைத்து ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடத்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் மற்றும் எம்.பிக்கள் தயாராகி வருவதாகவும் இதனால் அவர் பல நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிவரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுஜன பெரமுனவின் தலைமைப்பதவியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிற்கு வழங்கவேண்டும் என தெரிவித்த கருத்தால் ஆளும் கட்சிக்குள் கடுமையான விமர்சனத்திற்குள்ளாகியுள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ச.

அவர் தனது கருத்து தொடர்பில் பகிரங்க மன்னிப்பு கோரவேண்டுமென விடாப்பிடியாக உள்ளார் முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம். எனினும் தான் ஒருபோதும் மன்னிப்பு கோரமாட்டேன் என அடம்பிடிக்கிறார் அமைச்சர் விமல்.

# ஸ்காபுறோவில் கென்னடி-எக்ளிங்கடன் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள சங்கர் அன் கோ நிறுவனம்



ஸ்காபுறோவில் கென்னடி-எக்ளிங்கடன் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள சங்கர் அன் கோ நிறுவனத்தில் தற்போது உயர்ந்த தரத்தைக் கொண்ட கரம் விளையாட்டு ஆடும் பலகையான **CARROM BOARD** அதிக கையிருப்பில் விற்பனைக்கு வந்துள்ளன.

சங்கர் அன்கோவின் -தொலைபேசி எண்கள்: 416 759 5100 - 416 759 4916

அத்துடன் இங்கு விசேட வலம்புரிச் சங்குகள்
பிராமணர்களுக்கு தானம் வழங்கும் விசேட பொருட்கள்
பாலர் பாடப் புத்தகங்கள்
விசேட வாசனைத் திரவியங்கள்
விசேட சவர்க்கார வகைகள்
மிக்சி, கிரைன்டர்கள் றைஸ் குக்கர்கள் பிரசர் குக்கர்கள் ஆகியன திருத்திக் கொடுக்கப்படும்
விசேட நறுமணம் கொண்ட சாம்பிராணிகள்
வெண் குங்கிலியம் மற்றும் கருப்புக் குங்கிலியம்
ஆகாசக் கிழங்கு ஆகியவும் கிடைக்கின்றன.

**தொலைபேசி எண்கள்: 416 759 5100 - 416 759 4916**

# கிளிநொச்சி இலவசக் கணினி பயிற்சி நிலையம் புதன் கிழமை திறந்து வைக்கப்பட்டது



கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டைளையின் இலவசக் கணினி பயிற்சி நிலையம் நேற்று முன்தினம் புதன் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

லண்டன் ரட்ணம் பவுண்டேசன் அமைப்பின் நிதி அனுசரணையில் கல்வி வளர்ச்சிஅறக்கட்டயால் கிளிநொச்சி கரடி போக்கு விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைகழகத்தின் பொறியியல் பீட பீடாதிபதி அ. அற்புதராஜா, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி. கமலராஜன் ஆகியோர் உத்தியோகபூர்வமாக திறந்து மாணவர்களிடம் கையளித்துள்ளனர். 20 கணினிகளுடன் இந் நிலையம் மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சிகளை வழங்கவுள்ளது.

கல்வி வளர்ச்சி அறகட்டளையின் உப தலைவரும் அதிபருமான அ.பங்கையற்ச்செல்வன் தலைமையில் இடம்பெற்றஇந்த நிகழ்வில் ஆங்கில பாட உதவிக் பணிப்பாளர் திரு. சுதர்சன், பொறியியற்பீட விரிவுரையாளர் கலாநிதி கதிர்காமநாதன் கல்வி வளர்ச்சி அறகட்டகளையின் உறுப்பினர்கள். பணியாளர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

## காதலுக்குத் தடை:

## * சொந்த குடும்பத்தையே தீர்த்துக் கட்டிய ஆசிரியைக்கு மரண தண்டனை...

## * சுதந்திர இந்தியாவில் தூக்கில் போடப்படும் முதல் பெண் குற்றவாளி...

காதலித்தவரை மணமுடிக்க தடையாக இருந்த தன் குடும்பத்தினர் ஏழு பேரை கொலை செய்த வழக்கில் ஆசிரியைக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனை விரைவில் நிறைவேற்றப்படவுள்ளது. சுதந்திர இந்தியாவில் தூக்கில் போடப்படும் முதல் பெண் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.



உத்தரப் பிரதேச மாநிலம் அம்ரோஹா மாவட்டம் பவங்கேதி கிராமத்தைச் சேர்ந்தவர், ஷப்னம். எம்.ஏ. (ஆங்கிலம்) பட்டதாரியான இவர் அம்மாவட்டத்தின் தொடக்கப்பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து வந்தார். 2008ம் ஆண்டில் ஷப்னம் வீட்டின் அருகே மரம் அறுக்கும் வேலை செய்து வந்த சலீமுக்கும், அவருக்கு காதல் மலர்ந்தது. ஆனால், அவர்களின் காதலுக்கு பெண்ணின் குடும்பத்தினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனால் காதலுக்கு இடையூறாக இருந்த தனது குடும்பத்தைக் கொலை செய்ய முடிவு எடுத்த ஷப்னம் குடும்பத்தினர் அனைவருக்கும் பாலில் மயக்க மருந்து கலந்து கொடுத்தார். அதை அருந்திய அவர்கள் மயக்கத்தில் இருந்த நிலையில், ஷப்னமும், அவருடைய காதலன் சலீமும் சேர்ந்து, ஷப்னமின் தாய், தந்தை, இரண்டு சகோதரர்கள், அவர்களின் மனைவியர், பத்து மாத கைக் குழந்தை ஆகிய 7 பேரை கொடூரமாக கொலை செய்தனர்.

இதுதொடர்பான வழக்கில் ஷப்னம், சலீம் ஆகியோர் கைது செய்யப்பட்டு, அம்ரோஹா மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை நடந்தது. விசாரணை முடிவில் அவர்களுக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்த தண்டனை மேல் கோர்ட்டுகளிலும் உறுதி செய்யப்பட்டது. சலீம், ஆக்ரா சிறைச் சாலையிலும் ஷப்னம், ராம்பூர் மாவட்ட சிறைச்சாலையிலும் அடைக்கப்பட்டனர். இவர்கள், மாநில ஆளுநருக்கும் குடியரசுத் தலைவருக்கும் கருணை மனு அனுப்பினர். அம்மனு நிராகரிக்கப்பட்டு விட்டது.

சிறை தண்டனை விதிக்கப்பட்டபோது ஷப்னம் 2 மாத கர்ப்பமாக இருந்த நிலையில் அவருக்கு சிறையில் பிறந்த ஆண் குழந்தை ஷப்னத்தின் நண்பர் ஒருவரின் வீட்டில் வளர்ந்து வந்தான். தற்போது 12 வயதாகும் அந்த சிறுவன் தன் தாய்க்கு தூக்கு தண்டனை அளிக்க வேண்டாம் என வேண்டுகோள் விடுத்துள்ளான்.

ஆனால் குடியரசு தலைவருக்கு அனுப்பப்பட்ட கருணை மனு நிராகரிக்கப்பட்ட நிலையில் ஷப்னம் விரைவில் தூக்கிலிடப்பட உள்ளார். 'ப்னத்திற்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுமானால், இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு தூக்கிலிடப்படும் முதல் பெண் குற்றவாளி ஷப்னமாகத்தான் இருப்பார்.

**- மணிராஜ், திருநெல்வேலி**

# மன்னார் கடலில் காணாமல் போன மீனவர்களில் ஒருவர் மாலைதீவில் உயிருடன் மீட்பு-ஒருவர் உயிரிழப்பு



மன்னாரில் மீன் பிடிக்காகச் சென்று கடலில் காணாமல் போன 3 மீனவர்களில் ஒருவர் மாலைதீவில் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளதோடு, ஒருவர் உயிரிழந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேலும் ஒருவர் காணாமல் போயுள்ளதாக தெரிய வருகின்றது.

கடந்த மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை (30.01.2021) மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொண்ணையான் குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த செபஸ்ரியான் கொட்வின் (வயது-31) மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்ணன் (வயது-51), பாண்டியன் (வயது 23) ஆகிய மூவரும் ஒரு படகில் வழமை போன்று மன்னார் தென்கடல் பரப்பில் தூண்டில் மூலம் மீன் பிடிக்காக ஓலைத்தொடுவாய் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்றுள்ளனர்.

இவர்கள் அடுத்த தினம் கடலில் இருந்து தங்களின் படகில் எரிபொருள் தீர்ந்து விட்டதாகவும் கடலில் நங்கூரம் இட்டும் அது பலன் கொடுக்காத நிலையில் தாங்கள் கடலில் படகுடன் செல்வதாக கரையிலிருந்த தங்கள் உறவினர்களுக்கு கையடக்க தொலைபேசியூடாக தகவல் வழங்க உள்ளனர்.

இது தொடர்பாக காணாமல் போனவர்களின் உறவினர்கள் மன்னார் கடற்தொழில் திணைக்களம், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர்களிடம் முறையீடு செய்ததைத் தொடர்ந்து இவர்களை மீட்பதற்கான உதவிகளை கடற்படையினரிடம் கோரி இருந்தனர்.

ஆனால் இவர்கள் காணாமல் போய் 15 தினங்கள் கடந்தும் இவர்களை கண்டு பிடிக்கப்படவில்லை. இந்த நிலையில் கடந்த 16 ஆம் திகதி மாலைதீவு கடற்படையினரால் கண்ணன் என அழைக்கப்படும் ஏ.சிவதாஸ் (வயது-53) என்பவர் மீட்கப்பட்டார். எனினும் பாண்டியன் என அழைக்கப்படும் செல்வராசா ஜெயராம் (வயது-23) என்பவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிர் தப்பிய கண்ணன் என அழைக்கப்படும் ஏ.சிவதாஸ் (வயது-53) மற்றும் சடலமாக மீட்கப்பட்ட பாண்டியன் என அழைக்கப்படும் செல்வராசா ஜெயராம் (வயது-23) ஆகிய இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்.

எனினும் மன்னார் கொண்ணையான் குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த செபஸ்ரியான் கொட்வின் (வயது-31) என்பவர் கடலில் காணமல் போயுள்ளார். தற்போது உயிருடன் மீட்கப்பட்ட ஏ.சிவதாஸ் (வயது-53) என்பவர் மாலைதீவு தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட உள்ளதோடு, மீட்கப்பட்ட சடலம் மாலைதீவு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காணாமல் போன மன்னார் கொண்ணையான் குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த செபஸ்ரியான் கொட்வின் (வயது-31) தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.இவர்கள் தொடர்பில் மாலைதீவு தமிழ் நண்பர்கள் முகநூல் ஊடாக வெளியிட்டுள்ளனர்.

**(எமது மன்னார் நிருபர்)**

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# தமிழ் மக்கள் வாக்களிக்கும் கட்சிகள் இரண்டு முக்கியமான பிரிவுகளாகப் பிரிந்து நிற்கின்றன



## பாராளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன்

*(மன்னார் நிருபர்)*

சுவிற்சர்லாந்து தூதுவருடனான சந்திப்பு தொடர்பாக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், நீதியரசருமான க.வி.விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் புதன்கிழமைம மாலை ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

-குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,,,

இன்று இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் டொமினிக் ஃபேர்கலருடன் முதற் செயலாளர், அரசியல், சிடோனியா கேபிரியல் அத்துடன் நிகழ்ச்சிகள் இணைப்பாளர் சுசந்தி கோபாலகிருஸ்ணன் மூவரும் என்னை வந்து சந்தித்தார்கள். புதிய சுவிஸ் தூதுவரின் வடக்கை நோக்கிய முதற் பயணம் இதுவாகும். வவுனியாவில் தரித்து நின்று, இன்று மாலை இங்கு வந்து என்னைச் சந்தித்த பின்னர் நல்லூர்க் கந்தனைத் தரிசிக்கச் செல்கின்றார்கள்.

எங்களுடைய சரித்திரம் பற்றியும் தற்கால பிரச்சினைகள் பற்றியும் பல கேள்விகளை அவர் கேட்டிருந்தார். முக்கியமாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்களின் எழுச்சிப் பவனி சகலரையும் ஒன்று சேர்த்தது என்று கூறி இவ்வாறான ஒற்றுமை வருங்காலத்தில் நிலைக்குமா என்று கேட்டார். அதற்குப் பதில் அளித்த நான் 2004 டிசெம்பர் மாதத்தில் சுனாமி வந்த போது உக்கிரமாகப் போரில் ஈடுபட்டிருந்த இலங்கை இராணுவமும் விடுதலைப் புலிகளும் மனிதாபிமான முறையில் ஒன்று சேர்ந்து, பாதிப்புக்குள்ளான மக்களுக்கு மூன்று நாட்கள் வரையில் உதவி செய்தார்கள்.

அதே போன்று இன்று தமிழர், முஸ்லீம்கள், மலையகத் தமிழர், கத்தோலிக்கர்கள் போன்ற அனைவரும் இன்றைய ஜனாதிபதியின் தவறான முடிவுகளால் கொள்கைகளால் பாதிப்புற்றிருக்கின்றார்கள். சிறுபான்மையினர் அனைவருக்கும் எதிராக சிங்கள பௌத்தம் என்ற ஆயுதத்தை ஓய்வுபெற்ற இராணுவத்தினருடனும் சேவையில் இருக்கும் படையணியினருடனும் சேர்ந்து பிரயோகிக்கும் போது பாதிப்புறும் சகல மக்களும் ஒன்றிணைகின்றார்கள்.
தற்போதைய ஐக்கியம் அரசாங்கத்தின் பிழையான செயற்பாடுகளால் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவர்களின் பிழையான செயற்பாடு தொடரும் வரையில் வடக்கும் கிழக்கும் மலையகமும் சேர்வன. தமிழரும் முஸ்லீம்களும் சேர்வர். வடக்கும் கிழக்கும் இணைவன. ஆகவே அரசாங்கத்தின் நடவடிக்கைகளிலே தான் எமது ஐக்கியம் தங்கியிருக்கின்றது என்றேன்.

உங்கள் அரசியல் கட்சிகள் பலவாகப் பிரிந்து நிற்கும் போது அவர்கள் இடையே ஒரு ஒற்றுமையை ஏற்படுத்த முடியுமா என்று கேட்டார். அதற்கு நான் கட்சிகள் ஒவ்வொன்றிற்கும் தங்கள் தங்களது கொள்கைகள் சம்பந்தமாகப் பூரண புரிதல் ஏற்பட்டால் முடியும் என்றேன். அதன் அர்த்தம் என்ன என்று கேட்டார். தமிழ் மக்கள் வாக்களிக்கும் கட்சிகள் இரண்டு முக்கியமான பிரிவுகளாகப் பிரிந்து நிற்கின்றன.
ஒரு சாரார் தமிழ் மக்களின் வருங்காலத்தைப் பற்றிய சிந்தனையில் தமது கொள்கைகளை வகுத்திருக்கின்றார்கள். மறு சாரார் அரசாங்கத்திடம் இருந்து இன்று எதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நிலையில் செயற்படுகின்றார்கள். பறங்கியர்களுக்கு நடந்தது போன்று அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் வருங்காலத்தில் தமிழ் மக்களின் தொகையையும் வதிவையும் குறைத்துக் குறைத்து வடக்கு கிழக்கை பௌத்த சிங்கள மயமாக்கக் கூடும் என்ற பயத்திலேயே ஒரு சாரார் தமது அரசியலை நடத்துகின்றார்கள்.
மறுசாரார் பின்னர் என்ன நடந்தாலும் எமக்குக் கவலையில்லை, இன்று எமது மக்கள் குனிந்து பணிந்தேனும் அரசாங்கத்திடமிருந்து எதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற சிந்தனையிலேயே அரசியல் நடத்துகின்றார்கள். பின்னையோர் வருங்காலத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். முன்னையவர்கள் நிகழ்காலத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

அரசியல் தீர்வும் பொருளாதார அபிவிருத்தியும் தேவை என்று இருசாராரும் பயணிக்க வேண்டும். இவற்றை விட தனிப்பட்ட ரீதியிலே அரசியல் பிரமுகர்கள் இடையில் கோபதாபங்கள் மற்றும் முரண்பாடுகள் இருப்பதையும் அவதானிக்கலாம். புரிந்துணர்வு ஏற்பட்டால் எமது கட்சிகள் யாவும் ஒருமித்து செயல்பட முடியுமென்றே நான் கருதுகின்றேன்.
பொது வாக்கெடுப்பை வேண்டி உங்களுடைய கட்சி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்தது. அவ்வாறெனின் என்னவாறான கேள்விகளை நீங்கள் பொது வாக்கெடுப்பின் போது மக்களிடம் கேட்கப் போகின்றீர்கள் என்று கேட்டார். முதலிலே பொது வாக்கெடுப்புக்கு ஐ.நா அனுமதியைத் தரட்டும் கேள்விகளைப் பின்னர் பார்க்கலாம் என்றேன்.

பல சிங்கள புத்திஜீவிகள் இந்தப் பொது வாக்கெடுப்பின் மூலமாக தமிழ்த் தலைவர்கள் நாட்டைப் பிரிக்கப் பார்க்கின்றார்கள் என்றும் பிரிவினைக்கு வித்திடுவதற்கே பொது வாக்கெடுப்பை தமிழ் அரசியல்வாதிகள் கோருகின்றார்கள் என்று நினைக்கின்றார்கள் என்று கூறினார். அதற்குப் பதிலளித்த நான் ஒற்றையாட்சியா அல்லது சம்'டியா என்று கேள்விகளை நாம் முன் வைத்தால் ஒற்றையாட்சியா பிரிவினையா என்ற கேள்விக்கு இடமில்லை அல்லவா என்று நான் கேட்டேன்.
தமிழ் மக்களின் பாரம்பரியம் பற்றியும் சிங்கள பௌத்த மயமாக்குதல் பற்றியும் பல விடயங்களை நாங்கள் பேசிக்கொண்டோம். திரும்பவும் வந்து சந்திப்பதாக கூறி அவர்கள் விடைபெற்றார்கள்.

ஒரு நகைச்சுவை நிகழ்வும் நடந்தது. பழக்கத்தின் நிமித்தம் நான் தூதுவருக்கு கைலாகு கொடுத்த போது அவர் தமது இரு கைகளையும் கூப்பி வணக்கம் தெரிவித்தார். அப்பொழுது நான் நீங்கள் வணக்கத்திற்காக கிழக்கு முறையைத் தற்போது பின்பற்றத் தொடங்கி விட்டீர்கள். நாங்கள் இன்னமும் மேற்கிடம் இருந்து படித்தவற்றை வைத்துக் கொண்டிருக்கின்றோம் என்று கூறினேன். 'கொரோனாவால் ஏற்பட்ட மாற்றம் இது' என்றார்.

# கடந்த ஆண்டு கனடாவில் அளவிற்கு அதிகமான போதை வஸ்த்து காரணமான மரணங்கள் 5000க்கும் அதிகம்




தற்போதைய கோவிட்-19 நோய்த்தொற்று காரணமாக மரணங்கள் தினமும் சம்பவிக்கின்றன. கனடாவின் பிரதமரும் மற்றும் மாகாணங்களின் முதல்வர்களும் மருத்துவ அதிகாரிகளும் நகரங்களின் நகர பிதாக்களும் தினமும் இந்த மரணங்கள் தொடர்பாக அறிக்கைகளை வெளியிட்ட வண்ணம் உள்ளார்கள். ஆனால் கோவிட்-19 அகன்று செல்வதாகத் தெரியவில்லை.

ஆனால் இன்னொரு பக்கத்தில் கடந்த கால் அரைநூற்றாண்டுகளுக்கு மேலாக உலகெங்கும் போதை வஸ்த்து பாவனை அதிகரித்து தினமும் உலகெங்கும் இளைஞர்களும் யுவதிகளும் மரணித்த வண்ணம் உள்ளார்கள்.

இவ்வாறானவர்கள் எங்கே மரணிக்கின்றார்கள் என்றால், இருட்டில் தான். அவர்கள் போதை வஸ்த்துக்கு அடிமையாகிய சில நாட்களில் தனிமைப் பட்டுப் போயிவிடுகின்றார்கள். போதை வஸ்த்து பாவனை உள்ள சிலரை நண்பர்களாக ஏற்றுக்கொள்கின்றார்கள். அதனால் இவர்களுடைய மரணங்கள் கூட இருட்டிலேயே சம்பவிக்கின்றன என்று எழுதியுள்ளது, கனடாவின் தேசிய பத்திரிகைகளில் ஒன்றான "The Globe and Mail".

கடந்த ஆண்டு கனடாவில் அளவிற்கு அதிகமான போதை வஸ்த்து பாவனையால் மரணத்தை தழுவியவர்கள் எண்ணிக்கை 5000 இற்கும் அதிகம் என்று கனடாவின் முன்னணி தேசிய ஆங்கில தினசரியான "The Globe and Mail" முன்பக்கச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியில் தாங்கள் சேகரித்த 100 பேரின் புகைப்படங்கள் மற்றும் அவர்கள் பற்றிய விபரங்கள் ஆகியவற்றையும் குறிப்பிட்டுள்ளது.

இந்த 100 பேரில் பலர் படித்தவர்களாகவும், நல்ல பணிகளில் அமர்ந்திருந்தவர்கள் என்றும், சிலர் பாடகர்கள் மற்றும் கலைஞர்களாக இருந்தார்கள் என்பதும் தெளிவாகியுள்ளது. இந்தச் செய்தியில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் இவ்வாறு அளவிற்கு மிஞ்சிய போதை வஸ்த்து பாவனை காரணமாக மரணித்த சில தமிழ் இளைஞர்களின் பெயர்களும் இந்த பட்டியலில் அடங்கியுள்ளன என்பதே.


இவ்வாறான இந்த அளவிற்கு மிஞ்சிய போதை வஸ்த்து பாவனையால் மரணமடைவதற்கான காரணங்களையும் இந்த பத்திரிகை எழுதியுள்ளது. அதில் இந்த போதை வஸ்த்துக்கள் அதிகளவில் வீதி ஓரங்களிலேயே விற்கப்படுகின்றன என்றும் இவ்வாறான போதைப் பொருள் பாவனையின விளைவாக 2016ம் ஆண்டு ஜனவரி முதல் 15,000 கனேடியர்கள் இறந்துவிட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அந்த இறப்புகளில் மூன்றில் ஒரு பங்கு - 5,000க்கும் அதிகமானவை - கனடாவில் அதிகளவு இந்தியர்களும் கனடிய மூத்த குடியினரும் வாழும் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தில் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதைத் தவிர மேற்படி மாகாணத்தில் கடந்த ஜூலை மாதத்தில் / பெண்டானைல் என்னும் போதை மருந்து பயன்பாட்டிற்கு அடிமையானர்களினாலும் இந்த மாகாணம் அதன் மிக மோசமான பாதிப்புக்களைச் சந்தித்தது என்றும் கூறப்படுகின்றது.

ஆனால் போதைப்பொருளைச் சுற்றியுள்ள பாதிப்புக்களே அதனைப் பாவிப்பவர்களை மிகவும் பாதிக்கின்றுது என்றும் இதனால் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை சமூகம் ஒதுக்கி வைப்பதும் ஆனால் அவர்கள் போதைப்பொருட்களை ஒருபோதும் ஒதுக்கி வைக்க முன்வருவதில்லை என்றும் மேற்படி பத்திரிகை தனது செய்திக் குறிப்பில் எழுதியுள்ளது.

இந்த போதைப் பொருள் பாவனையாளர்களை குறை சொல்லுவது மற்றவர்களுக்கு எளிதாக்குகிறது ஆனால் அது தொடர்டபான சரியான செய்தியைப் பெறுவது கடினமானது என்றும் இதனாலே அவர்கள் மிக விரைவாக மரணத்தை தழுவுகின்றார்கள் என்றும் கனடாவின் மனநல மருத்துவரும் இளைஞர் போதை மருந்து நிபுணருமான டாக்டர் பூயா அசார் மேற்படி பத்திரிகையாளருக்கு தெரிவித்தார்.

போதைப் பொருட்களுக்கு அடிமையானவரை நாம் எப்படி காப்பாற்ற முடியும் அல்லது எவ்வாறு அவர்களை சமூகத்திற்கு மீண்டும் கொண்டு வருவது என்பதை நாம் ஆராய வேண்டும். அப்போது தான் அவர்களை நாம் மரணத்திலிருந்து காப்பாற்றலாம். "உங்களுக்கு முன்னால் இருக்கும் இளைஞரைப் பற்றி அறிந்து கொள்வது மிகவும் முக்கியம், மேலும் அவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வது அவர்களின் வாழ்க்கை சிக்கலானது... சில சமயங்களில் நாங்கள் அதை எளிமைப்படுத்தி அவர்கள் ஒரு இளைஞன் என்று கூறுகிறோம்," என்று அவர் கூறினார். அறிகுறிகளுக்கு சிகிச்சையளிப்பது மட்டுமல்லாமல், மூல காரணங்களை நிவர்த்தி செய்வதன் மூலமும் மேற்படி மோசமான பழக்கத்திற்கு உள்ளானவர்களை மரணத்திலிருந்து காப்பாற்றலாம் என்று அந்த மருத்துவர் கூறியுள்ளார்.



"ஆனால் நீங்கள் நம்பிக்கையை வளர்ப்பதற்கும் நல்லுறவை உருவாக்குவதற்கும் நேரம் ஒதுக்கும்போது, நாங்கள் கருத்தில் கொள்ளாத உண்மையான பாதிப்புக்கள் அடிமையானவர்களுக்கு இருக்கலாம் என்பதை நாங்கள் அடிக்கடி உணர்கிறோம் ... கடைசியாக எனக்கு முன்னால் ஒரு இளைஞன் இருந்தான். அவன் போதை வஸ்த்து அடிமையானதை நான் நேரில் கண்டேன். ஆனால் அவனை என்னால் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதே என்று நாம் பின்னர் கவலைப்படுவதிலும் பார்க்க இன்றே அல்லது நாளை அந்த இளைஞனை காப்பாற்றும் அல்லது அந்த போதை மருந்து பயன்படுத்தும் நிலையிலிருந்து விடுவித்துக் கொள்ள நாம் தனியாகவோ அன்றி குழுவாகவோ பணியாற்ற வேண்டும் என்றும் சில மருத்துவர்கள் கூறியுள்ளார்கள்.

# ஆஸ்திரேலியாவில் இலங்கைக்கு நாடு கடத்தப்படவிருந்த தமிழ்க் குடும்பம் நடத்திய சட்டப் போராட்டம் வெற்றி!

இலங்கைக்கு நாடு கடத்தப்படுவதை எதிர்த்து ஒரு தமிழ்க் குடும்பம் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும் ஆஸ்திரேலியாவிலேயே தொடர்ந்து தங்கலாம் என்று ஆஸ்திரேலிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஈழத் தமிழர் நடேசலிங்கம், அவரின் மனைவி பிரியா இருவரும் கடந்த 2012 மற்றும் 2013-ம் ஆண்டில் தனித்தனியாக ஆஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் அகதியாக வந்தனர். இவர்கள் இருவரும் மெல்போர்னில் உள்ள அகதிகள் முகாமில் தங்கி இருந்தபோது காதலித்துத் திருமணம் செய்து கொண்டனர். இதில் நடேசலிங்கத்துக்கும், பிரியாவுக்கும் ஆஸ்திரேலியாவில் இரு பெண் குழந்தைகள் பிறந்தன. மூத்த மகளான கோபிகாவுக்கு தற்போது 6 வயதும், 2-வது மகளான தருணிகாவுக்கு 4 வயதும் ஆகிறது. இந்நிலையில், இந்த ஈழத் தமிழ்க் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட தற்காலிகமான விசா காலம் முடிந்துவிட்டதால், அவர்களை மீண்டும் இலங்கைக்கு நாடு கடத்த ஆஸ்திரேலியாவின் கன்சர்வேட்டிவ் அரசு முடிவு செய்து கடந்த 2019-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் உத்தரவிட்டது.




இதையடுத்து மெல்போர்ன் நகரில் உள்ள அகதிகள் முகாமில் இருந்து நடேசன் குடும்பத்தை விமானம் மூலம் இலங்கைக்கு ஆஸ்திரேலிய அரசு அனுப்ப முடிவு செய்தது. ஆனால், இலங்கையில் பிறந்த நடேசலிங்கத்துக்கும், அவரின் மனைவி பிரியாவுக்கும் மட்டுமே குடியுரிமை இருக்கிறது. ஆஸ்திரேலியாவில் பிறந்த அவர்களின் இரு குழந்தைகளான கோபிகா, தருணிகா இருவருக்கும் இலங்கை அரசு குடியுரிமை வழங்காது. ஆஸ்திரேலய அரசும் குடியுரிமை வழங்காது. இலங்கைக்குத் தங்கள் பெற்றோருடன் சென்றாலும் இந்த இரு குழந்தைகளும் நாடற்றவர்களாகவே இருக்க வேண்டி வரும் என்ற சூழல் இருந்தது. இதுகுறித்து ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழர்கள் சார்பில் நீதிமன்றத்தில் கடந்த 2019-ம் ஆண்டு ஆகஸ்ட் 29-ம் தேதி முறையிடப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஹீதர் ரிலே, ஈழத் தமிழர் குடும்பத்தை இலங்கைக்கு நாடு கடத்தத் தடை விதித்தார். ஆனால், அவர் இந்த உத்தரவு பிறப்பிக்கும்போது, விமானம் ஆஸ்திரேலியாவின் டார்வின் நகரை விட்டு இலங்கை நோக்கிப் புறப்பட்டு வானில் பறந்து கொண்டிருந்தது. இதுகுறித்து நீதிபதி ஹீதரிடம் அதிகாரிகள் விமானம் புறப்பட்டுச் சென்றுவிட்டதாகத் தெரிவித்தனர்.

ஆனால், நீதிபதி ஹீதர் அதற்குச் சம்மதிக்காமல் விமான நிலையத்துக்குத் தொலைபேசிய-ில் பேசி விமானத்தை உடனடியாகத் தரையிறங்க உத்தரவிட்டார். அதன்பின் தரையிறங்கிய விமானத்தில் இருந்து நடேசன் குடும்பத்தினர் மெல்போர்ன் நகரில் தங்கவைக்கப்பட்டனர். தமிழ்க் குடும்பத்தை நாடு கடத்தக் கூடாது எனக் கோரி மெல்போர்ன் நகரில் ஆஸ்திரேலிய மக்கள் மிகப்பெரிய அளவில் பேரணியும், போராட்டமும் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 2019-ம் ஆண்டிலிருந்து ஆஸ்திரேலியாவில் அகதிகள் வசிக்கும் கிறிஸ்துவமஸ் தீவில் நடேசன், பிரியா குடும்பத்தினர் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் தங்களை ஆஸ்திரேலியாவில் இருந்து நாடு கடத்தத் தடைவிதிக்கக் கோரி நடேசன் குடும்பத்தினர் ஆஸ்திரேலிய பெடரல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். ஆனால், இந்த மனுவை எதிர்த்து ஆஸ்திரேலிய அரசும் வழக்குத் தொடர்ந்தது. பெடரல் நீதிமன்றத்தில் 3 நீ-திபதிகள் அடங்கிய அமர்வு இந்த வழக்கை விசாரித்தது. இந்த வழக்கை விசாரித்த 3 நீதிபதிகள் அமர்வு இன்று தீர்ப்பளித்தது. அதில், "தமிழ்க் குடும்பத்தினர் தொடர்ந்து ஆஸ்திரேலியாவில் தங்கலாம். ஆஸ்திரேலியாவில் பிறந்த இரு குழந்தைகளுக்கு விசா வழங்க மறுக்கக் கூடாது.


தமிழ்க் குடும்பத்தினர் தங்கள் மகள்களுக்கு விசாவுக்கு விண்ணப்பித்து விசா பெறலாம். நடேசன் குடும்பத்தினர் தொடர்ந்து ஆஸ்திரேலியாவில் தங்குவதற்கு அரசு அனுமதிக்க வேண்டும்" என தீர்ப்பளித்தனர். இந்தத் தீர்ப்பை எதிர்த்து ஆஸ்திரேலிய அரசு உயர் நீதிமன்றம் சென்றாலும் மேல்முறையீடு ஏற்கப்படுமா என்பது சந்தேகம்தான். ஆதலால், ஆஸ்திரேலியாவில் ஆஸ்திரேலிய அரசுக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்தி தமிழ்க் குடும்பத்தினர் வென்று அங்கேயே தங்க உள்ளனர்.



# “புலிகளுக்கு உதவி” கைது செய்யப்பட்ட 16 தமிழ் இளைஞர்களைக் ‘காணவில்லை’

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)**

“அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்” என்பது போலுள்ளது இலங்கை பொலிசாரின் நடவடிக்கை. மழையோ வெயிலோ தமிழ் இளைஞர்களைக் கைது செய்வதும் பிறகு அவர்களின் குடும்பம் அல்லாடுவதும் போர்க்காலத்தில் இலங்கையில் சர்வசாதாரணமான ஒன்றாக இருந்தது.



Receipt of Arrest

A 397605

Police Station

Name of Arrestee

Address

Male / Female

Date, Time & Place of Arrest

L.T.T.E

Reason for Arrest

Arresting Officer/s

Place of Detention

Court of Jurisdiction

Signature of Arresting Officer

Date 20.06.17

நாட்டில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது, இனி மக்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாழலாம் என்று போர் வெற்றி குறித்து அறிவித்ததை யாரும் இன்னும் மறக்கவில்லை.

ஆனால் விடுதலைப் புலிகள் குறித்த அச்சத்திலிருந்து இலங்கை அரசு இன்னும் மீளவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது.

அவ்வகையில் விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப முயன்றனர் எனும் குற்றச்சாட்டின் வடக்கு இலங்கையில் கைது செய்யப்பட்ட 30 தமிழ் இளைஞர்களின் 16 பேரின் நிலை என்னவாயிற்று என்பது பற்றிய கவலைகள் மேலோங்கியுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து 30 தமிழ் இளைஞர்கள் விசாரணைக்கு என்று பொலிசரால் அழைக்கப்பட்டு, கைதாகி கொழும்பு பயங்கரவாதப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அதிர்ச்சியளிக்கும் இந்தச் சம்பவம் பெரியளவில் வெளியே தெரியாமலேயே இருந்தது.

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் மிகவும் எழுச்சியுடன் நடைபெற்ற “பொத்துவில் முதல் பொலிகண்டி” வரையிலான அமைதிப் பேரணியின் போது செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் அவர்களின் குடும்பத்தார் நடத்திய போராட்டத்தை வெளியுலகிற்கு கொண்டு வந்தனர்.

கிளிநொச்சி கந்தஸ்வாமி கோவில் முன்னால் தற்காலிக பந்தல் ஒன்றை அமைத்து விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட 14 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தொடர்ச்சியகப் போராடி வருகின்றனர்.

ஏற்கனவே காணாமல் போனவர்களின் உறவுகள் அவர்களைத் தேடி 1500 நாட்களுக்கும் மேலாகத் தொடர்ந்து போராடி வரும் நிலையில் வடக்கு இலங்கையிலிருந்து மேலும் 30 பேர் விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டுள்ளது கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.



கோத்தாபய ராஜபக்ஷ அரசு பதவியேற்ற பின்னரான காலத்தில் விசாரணைக்கென்று அழைத்துச் செல்லப்பட்டவர்களின் பெரும் தொகுதியினர் இதுவே என்று கருதப்படுகிறது.

இலங்கை பயங்கரவாத பொலிசாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட 14 பேரும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு உதவியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாக அவர்களுக்கு வழங்கப்பட்ட “துண்டில்” குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டிக் கொரோனா தொற்றுப் பரவல் தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையில், தமது பிள்ளைகளின் நிலை குறித்து உறவினர்கள் கவலை கொண்டுள்ளனர். கிளிநொச்சியில் தொடர்ந்து போராடும் 14 பேரின் உறவினர்கள் தமது பிள்ளைகள் உடனடியாக வீடு திரும்ப வேண்டும் என்று வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபடும் வேளை, இதர 16 பேரின் நிலை குறித்த மர்மம் நீடிக்கிறது. அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது தெளிவில்லாமல் உள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து வெடி பொருட்கள் மீட்கப்பட்டன என்று இலங்கை பொலிசார் கூறுகின்றனர். ஆனால் எப்படியன வெடி பொருட்கள், என்ன அளவிலனாவை கைப்பற்றப்பட்டன என்பது குறித்து ஒரு விளக்கமும் இலை.

வட மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்து கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களுக்கு வழங்கப்பட்ட “துண்டுச் சீட்டில்” கொழும்பு நகரமே இதற்கான “நீதிமன்ற எல்லை” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கைதுகள் கடந்த ஆண்டு ஜுன் மற்றும் ஜுலை மாதம் நடந்தாலும் இதுவரை அவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று உறவினர்கள் கூறுகின்றனர்.




“விடுதலைப் புலிகள் முற்றாக அழித்தொழிக்கப்பட்டனர்” என்று அரசு தொடர்ந்து கூறும் நிலையில், அவர்களுக்கு ஆதரவளித்ததான புகாரில் ஏனிந்த கைதுகள் என்று கேள்விகள் எழுந்துள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள தனது மகன் செல்வநாயகம் சசிதரன் குறித்து அவரது தாய் கோசலாதேவை செல்வநாயகம் கவலையடைந்துள்ளார்.

“அரசு புலிகளை அழித்துவிட்டதாகக் கூறும் போது, எனது மகன் எப்படி அதை மீண்டும் உருவாக்க உதவ முடியும்? இந்தப் பிள்ளைகள் அப்பாவிகள். அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் போராடுகிறோம்”. (கோசலாதேவி செல்வநாயகம்)

இவரது மகன் சசிதரனை ஒரு நாள் விசாரணைக்கு என்று அழைத்துச் சென்ற பொலிசார் அவரை முதலில் கிளிநொச்சியின் வைத்து கைது செய்தனர். செய்யப்பட்டுள்ளார். அங்கு 27 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் வவுனியாவுக்கு கொண்டு சென்று 30 நாட்கள் தடுத்து வைத்த பிறகு, இறுதியாக விசாரணைக்கென்று கொழும்பு “பயங்கரவாத தடுப்புப் பிரிவுக்கு” கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அவரிடம் பேசுவதற்குக் கூட தங்களை டிஐடி பொலிசார் அனுமதிக்கவில்லை என்கிறார் தாய் கோசலாதேவி.

இதனிடையே தமது பிள்ளைகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று போராடி வருபவர்கள் புலனாய்வுப் பிரிவினரால் அச்சுறுத்தப்படுவதாகக் கூறுகின்றனர்.

அவர்கள் தொடர்ந்து போராடினால் கைது செய்யப்படுவார்கள் என்று



இலங்கை பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன எச்சரித்துள்ளார்.

“கிளிநொச்சிப் போராட்டத்தில் ஈடுபடும் தாய்மார் மற்றும் பிள்ளைகள் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, தனி நாடு அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டால், அவர்கள் கைது செய்யப்படுவார்கள்”.

கைது செய்யப்பட்டுள்ளவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்கம் செய்ய முயன்றதால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து கையெறி குண்டுகள், வெடி பொருட்கள், சில ஆவணங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ள என்று கூறும் பொலிஸ் பேச்சாளர், “அவர்கள் எவ்வித குற்றமும் செய்யவில்லை என்று கூறுவது முற்றாக உண்மைக்குப் புறம்பானது” என்கிறார்.

இலங்கையின் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிசார் “ஆட்களை கொடுமை செய்வதற்காக” நன்கு அறியப்பட்டவர்கள் என்று ஐ நா மனித உரிமைகள் ஆணையம் தெட்டத் தெளிவாக கூறியுள்ள நிலையில், இந்தக் கைதுகள் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இலங்கை தொடர்பான விவாதம் ஐநா மனித உரிமைகள் ஆணையத்தில் மீண்டும் விவாதம் வரவுள்ள நிலையில், கொடுத்த வாக்குறுதிகளுக்கு மாறாக அரசு நடந்து கொள்கிறது எனும் குற்றச்சாட்டுக்கு இது மேலுமொரு சன்றாகவுள்ளது.

கடந்த 2016 ஐக்கிய நாடுகளின் சித்திரவதைக்கு எதிரான குழு (UN-CAT) விசாரணையின் போது இலங்கை பெரும் அவமானத்தைச் சந்தித்தது. அரசின் புலனாய்வுத்துறைத் தலைவர் சிசிர மெண்டிஸ் தமிழர்கள் டிஐடி மற்றும் சிஐடியான் விசாரணைக்கு அழைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவது தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்க இயலாமல் திணறினார்.

அதன் பிறகு நீறு பூத்த நெருப்பாக இருந்த “டிஐடி விசாரணை” பிரச்சனை இப்போது மீண்டும் தலை தூக்கியுள்ளது. போர் முடிந்த பிறகு அரசிடம் கையளிக்கப்பட்ட மற்றும் சரணடைந்த ஆயிரக்கணக்கான நபர்களுக்கு என்னவாயிற்று என்பது தெரியாத சூழலில், விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டுள்ள இந்த 30 பேரின் எதிர்காலம் குறித்து கவலைகள் மேலோங்கியுள்ளன.

தமது பிள்ளைகளை மீட்டுத்தர சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என்று கோசலாதேவி உட்பட கைது செய்யப்பட்டுள்ளவர்களின் குடும்பத்தார் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# தமிழ்க்கட்சிகளும் தமிழ்ச்சிவில் சமூகங்களும் இணைந்துருவாக்க வேண்டிய ஒரு கட்டமைப்பு

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

கடந்த இரு மாதங்களுக்குள் நிகழ்ந்த மூன்று நிகழ்ச்சிகளை தொகுத்துப் பார்க்கும்பொழுது தமிழ் அரசியலின் போக்கை மதிப்பிடக்கூடியதாக இருக்கும். அம்மூன்று நிகழ்வுகளாவன முதலாவது மூன்று தமிழ்த்தேசிய கட்சிகள் இணைந்து ஐநாவுக்கு ஒரு பொது கோரிக்கையை முன்வைத்தமை.

இரண்டாவது யாழ் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் உடைக்கப்பட்டமையும் அதற்கு எதிராக ஏற்பட்ட கொந்தளிப்பின் விளைவாக சின்னத்தை மறுபடியும் கட்டுவது என்று பல்கலைக்கழக நிர்வாகம் முடிவெடுத்தமையும். மூன்றாவது தமிழ் சிவில் சமூகங்களும் மூன்று தேசிய கட்சிகளும் இணைந்து முன்னெடுத்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான ஒரு பேரணி.

இம்மூன்று நிகழ்வுகளையும் தொகுத்துப்பார்த்தால் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு வெளியே தமிழ் சிவில் சமூகங்களும் மாணவர்களும் புலம் பெயர்ந்த தமிழ்மக்களும் இணைந்து மேற்படி வெற்றிகளை சாதித்திருக்கிறார்கள் அதைச் சற்று விரிவாக பார்க்கலாம்.

முதலாவது ஐநாவுக்கு அனுப்பிய ஒரு பொதுக்கோரிக்கை. இதில் தமிழ் சிவில் சமூகங்களின் ஈடுபாடு அதிகமாக இருந்தது. மூன்று கட்சிகளையும் ஒரு இடத்துக்கு கூட்டிக்கொண்டுவந்து ஒரு பொது ஆவணத்தை தயாரிக்கும் வேலையை தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கமும் சிவில் செயற்பாட்டாளர்களும் முன்னெடுத்தனர். முடிவில் மூன்று கட்சிகளோடு இணைந்து அந்த ஆவணத்தில் சிவில் அமைப்புகள் கையெழுத்திட்டன. இது தமிழ்க்கட்சிகளின் மீது சிவில் சமூகங்கள் செல்வாக்கு செலுத்தும் ஒரு வளர்ச்சியை காட்டுகிறது.

அதேசமயம் அந்த ஆவணம் ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்ட கையோடு ஏற்பட்ட சர்ச்சைகள் மூன்று கட்சிகளும் தங்களுக்கிடையே ஐகியப்ப்படுவதற்கு இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டி இருக்கிறது என்பதையும் காட்டியது. அந்த ஆவணத்தில் யார் கையெழுத்திடுவது என்பதில் தொடங்கி யார் துரோகி யார் தியாகி என்பது வரையிலும் விவாதங்கள் தொடர்ந்தன. இந்த மூன்று கட்சிகளுமா இணைந்து அப்படி ஒரு கோரிக்கையை முன் வைத்தன என்று ஒரு வெளிப் பார்வையாளர் ஐயப்படும் அளவுக்கு அந்த மூன்று கட்சிகளும் தங்களுக்கிடையே மோசமாக மோதிக்கொண்டன. அதுமட்டுமல்ல அந்த ஆவணத்தை தயாரிப்பதில் முன்னின்று உழைத்த சிவில் சமூகங்களின் மீதும் விமர்சனங்களை முன்வைத்தன.

மூன்று கட்சிகளையும் ஒருங்கிணைத்து ஒரு பொதுக் கோரிக்கையை தயாரிப்பதில் உதவிய மூன்று அனுசரணையாளர்கள் ஊடகங்கள் முன் தோன்றி தமது நிலைப்பாட்டை தெரிவிப்பதற்கு விரும்பவில்லை. திரைமறைவில் இருந்தார்கள். அதேசமயம் சந்திப்புக்களை ஒழுங்குபடுத்திய மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சிவகரனையும் அதில் சம்பந்தப்பட்ட மூன்று கட்சிகளின் தலைவர்களையும் பேச விட்டுவிட்டு அந்த அனுசரணையாளர்கள் ஊடகங்கள் முன் தோன்றுவதை தவித்தார்கள். ஆனால் இக்கட்சிகள் தங்களுக்கிடையே மோதிக்கொண்டு அனுசரணையாளர்களைப் பெயர் சொல்லிக் குறிப்பிட்டுப் பதில் கூறுமாறு கேட்டன. எது சரி? எது பிழை? என்பதை பொதுவெளியில் தெரிவிக்குமாறு கேட்டன. முடிவில் மூன்று அனுசரணையாளர்களும் ஊடகங்கள் முன் தோன்ற வேண்டியதாயிற்று. இது எதைக் காட்டுகிறது? ஒரு பொது ஆவணத்தை தயாரிக்கும் அளவுக்கு கட்சிகளை ஒருங்கிணைத்தமை என்பது சிவில் சமூகங்கள் பெற்ற வெற்றி. அதேசமயம் அதற்குப் பின் நிகழ்ந்த விமர்சனங்களும் உரையாடல்களும் தமிழ் கட்சிகளின் முதிர்ச்சியற்ற பண்பையே வெளிப்படுத்தியது. ஒரு தற்காலிக தந்திரோபாய கூட்டை நோக்கிச் செல்வதில் இருக்கக்கூடிய வரையறைகளையும் அது உணர்த்தியது எனலாம். இது முதலாவது நிகழ்வு.

இரண்டாவது நிகழ்வு-யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம். அது உலகம் முழுவதிலும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. தமிழ்ப்பரப்பில் குறிப்பாக தமிழகத்திலும் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் தமிழ் உணர்வுகள் நொதிக்கத்தொடங்கின. தமிழகத்தின் பெரும்பாலான கட்சித் தலைவர்கள் அது தொடர்பில் கருத்து தெரிவித்தார்கள். தமிழகத்தில் இது தேர்தல் காலம் என்பதால் விடயம் மேலும் சூடாகியது. புலம்பெயர்ந்த தமிழ்ப்பரப்பில் அங்குள்ள வெள்ளைக்கார அரசியல்வாதிகள் இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்தார்கள். தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் பரவலாக எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. எல்லாவற்றினதும் விளைவாக ஒரு கட்டத்தில் பல்கலைக்கழக நிர்வாகம் இறங்கி வந்தது. அது போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி.அதேசமயம் சமரசத்துக்கு தயாராக இருந்த நிர்வாகத்தோடு மாணவர்கள் ஒரு உடன்பாட்டுக்கு வந்த விதம் விமர்சனத்துக்குரியது.

அகால வேளையில் நள்ளிரவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மாணவ ஒன்றியப் பிரதிநிதிகளை கைபேசியில் அழைத்து உண்ணாவிரதம் இருக்கும் இடத்தில் வேறு யாரும் இல்லையா என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே திடுதிப்பென்று வந்து உண்ணாவிரதத்தை நள்ளிரவில் முடித்துவைத்தார். அதுபோலவே அதிகாலையில் புதிய சின்னத்துக்கான அடிக்கல்லையும் நாட்டிவைத்தார். இது விடயத்தில் அந்தப் போராட்டத்துக்குள்ள முக்கியத்துவத்தையும் ஆழமான அரசியல் அடிப்படைகளையும் அனைத்துலக பரிமாணத்தையும் மாணவர்கள் பொருத்தமான விதங்களில் விளங்கிக் கொள்ளவில்லை என்றே தெரிகிறது. ஏனெனில் மாணவர்கள் போராட்டத்தை நள்ளிரவில் முடித்துக் கொண்ட பின்னரே தமிழகமும் புலம்பெயர் தமிழ் மக்களும் போராடத் தொடங்கினார்கள். மாணவர்கள் இங்கே போராட்டத்தை முடித்துக் கொண்டார்கள் ஆனால் அவர்களுக்காக உலகம் முழுவதும் தமிழர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள்.

வெளியுலகில் மட்டுமில்லை உள்நாட்டிலும் அடுத்த நாள் கடையடைப்பு என்று அறிவித்துவிட்டு அதிகாலையிலேயே மாணவர்கள் போராட்டத்தை முடித்துக்கொண்டார்கள். ஆனால் பொங்கலுக்கு மூன்று நாட்களே இருந்த நிலையில் தமது கடைகளை மூடச்சம்மதித்த வர்த்தகர்களையும் அன்றாடங்காய்ச்சிகளையும் சந்தித்து தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த மாணவர்கள் முயற்சிக்கவில்லை. அதை தங்களுடைய போராட்டமாக மட்டும் அவர்கள் குறுக்கி யோசித்தார்கள். அது தங்களுடைய கைகளை கடந்து மக்கள் மயப்பட்டு விட்டதையும் அனைத்துலக மயப்பட்டுவிட்டதையும் அவர்கள் கவனத்தில் எடுக்கவில்லை. இது தொடர்பில் தங்களுக்காக போராடும் மக்களையும் அமைப்புகளையும் கேட்காமலேயே நள்ளிரவில் முடிவை எடுத்தார்கள் அதிகாலையில் அடிக்கல் நாட்டினார்கள்.

இது எதைக் காட்டுகிறது? மாணவர்கள் போராடத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அதன் அரசியல் பரிமாணங்களை விளங்கி அவர்களை வழிநடத்த ஓர் அரசியல் இயக்கம் இல்லை என்பதைத்தான். அரசியல் இயக்கம்தான் வேண்டாம் குறைந்தபட்சம் எந்த ஒரு கட்சிக்காவது மாணவர்கள் மத்தியில் அமைப்புகள் உண்டா? இதுதான் பிரச்சினை. பல்கலைக்கழக மாணவர்கள் ஓர் அமைப்பாக இருப்பதே அவர்களின் பலம். ஆனால் அது படிப்பதற்கான அமைப்பு. போராடுவதற்கான அமைப்பு அல்ல. போராடுவதற்கான அமைப்பு மாணவர்களுக்கு வெளியே ஒரு கட்சியாகவோ அல்லது அரசியல் இயக்கமாகவோ இருக்கலாம். அந்த இயக்கம்தான் மாணவர்களை வழி நடத்த வேண்டும். அப்படி ஒரு இயக்கம் அல்லது கட்சி இல்லாத வெற்றிடத்தில்தான் மாணவர்கள் தங்கள் பாட்டில் முடிவுகளை எடுத்தார்கள். இது தமிழ் அரசியலின் இயலாமையை காட்டுகிறது.

நினைவுச் சின்னத்துக்கான போராட்டம் என்பது நினைவு கூருதலுக்கான கூட்டுரிமைக்குரிய ஒரு போராட்டத்தின் ஒரு பகுதியே. இந்த விளக்கத்தின் அடிப்படையில் கூட்டுரிமைக்கான ஒரு போராட்டத்தின் ஒரு பகுதியாக அந்த போராட்டத்தை வழி நடத்தியிருக்க வேண்டியது கட்சிகள்தான். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. இது இரண்டாவது. மூன்றாவது - பொத்துவிலில் தொடங்கி பொலிகண்டி வரை.

சில நாட்களுக்குள் உருவாக்கப்பட்ட ஒரு சிவில் அமைப்பு வெற்றிகரமாக ஒரு பேரணியை நடத்தி முடித்திருக்கிறது. இது எப்படிச் சாத்தியமாகியது? நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கும் தமிழ் மக்கள் போராடத் தயாராக இருப்பதும் போராட்டங்களுக்கு ஆதரவாக இருப்பதும்தான் அடிப்படைக் காரணம்.மக்கள் போராடத் தயார் ஆனால் தலைமை தாங்க பொருத்தமான அமைப்புக்கள் இல்லை என்பதே இங்குள்ள வெற்றிடம். ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்த்திராத ஒரு வெற்றியை மக்கள் பெற்றுக் கொடுத்தார்கள். அதன் விளைவாக ஏற்பாட்டாளர்கள் அந்தப் பேரணியின் பெயராலேயே ஒரு மக்கள் எழுச்சி இயக்கத்தை தொடங்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். அதை தனியாகப் பார்க்கலாம்.

ஆனால் பேரணிக்குப் பின் தமிழ்க்கட்சிகள் மோதிக்கொண்ட விதம் எதைக் காட்டுகிறது? பேரணியில் ஒற்றுமையாக நின்ற கட்சிகள் பேரணியின் வெற்றிக்கு உரிமை கோருவதிலும் பேரணியின் பிரகடனத்தை வியாக்கியானம் செய்வதிலும் தங்களுக்கிடையே மோதிக் கொண்டன. அதுமட்டுமல்ல குறிப்பாக சுமந்திரன் அந்த பேரணிக்கு பெருமளவுக்கு உரிமை கோரினார். யு.டிவிவிக்கு வழங்கிய பேட்டியில் அதைத் தெளிவாகச் சொல்லுகிறார். சாணக்கியனின் தானும் இல்லையென்றால் அந்தப்பேரணி அப்படி ஒரு வெற்றியை பெற்றிருக்காது என்றும் அவர் கூறுகிறார். அவர் இவ்வாறு பேரணியை தத்தெடுக்கக்கூடிய நிலைமைகளை அனுமானித்து ஏற்பாட்டுக்குழு திருகோணமலையை பேரணி அடைந்த பொழுது பகிரங்கமாக சில கருத்துக்களை தெரிவித்திருந்தது. அதனால் அரசியல்வாதிகளுக்கும் ஏற்பாட்டு குழுவுக்கும் இடையே வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. எனினும் அரசியல்வாதிகள் பேரணியை ஹைஜாக் பண்ணுவதை ஏற்பாட்டு குழுவால் முழுமையாக தடுத்து நிறுத்த முடியவில்லை என்பதே உண்மை.

பேரணியானது சில விடயங்களை தெளிவாக காட்டுகிறது. முதலாவது - சில நாட்களுக்குள் உருவாக்கப்பட்ட ஒரு சிவில் அமைப்பு இப்படி ஒரு பேரணியை நடத்தியது என்பது மக்கள் போராடத் தயாராக இருப்பதை காட்டுகிறது. இரண்டாவது-சிவில் அமைப்புகள் போராட முன்வந்தால் கட்சிகள் பின்னேவரும் என்பது தெளிவாகத் தெரிகிறது. மூன்றாவது-இக்கட்டுரைக்கு இதுதான் முக்கியமானது. சிவில் அமைப்புகளுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையே ஒரு பொருத்தமான பொறிமுறை இல்லை என்பது. அப்படி ஒரு பொருத்தமான பொறிமுறை இருந்திருந்தால் ஒவ்வொருவரும் தங்களுக்குரிய வகிபாகத்தை உணர்ந்து ஆளுக்காள் போட்டி போடாமல் மேலும் வெற்றிகரமாக பேரணியை முன்னெடுத்து இருந்திருக்கலாம்.

இது தமிழ் சிவில் சமூகங்கள் தமிழ் அரசியலில் முன்கை எடுக்க வேண்டிய தேவையைக் காட்டுகிறது. இன்னொருபுறம் தமிழ் சிவில் சமூகங்கள் தங்களுடைய போராட்டங்களை அரசியல் கட்சிகள் ஹைஜாக் பண்ணி விடாதபடி மேலும் தம்மைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையை காட்டுகிறது.பேரணிக்கு பின் மோதிக் கொண்ட கட்சிகள் ஏற்பாட்டாளர்களை நோக்கி விமர்சனங்களை முன்வைத்தன. ஏற்பாட்டாளர்கள் பொதுவெளிக்கு வந்து பதில் கூற வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தின.

கட்சிகள் தங்களுக்கிடையே உள்ள முரண்பாடுகளை பொது வெளியில் தீர்த்துக் கொள்வது வேறு விடயம். தமிழ்ப் பரப்பில் மூன்று கட்சிகள் உண்டு என்றால் அதன் பொருள் மூன்று வேறு நிலைப்பாடுகள் உண்டு என்பதுதான். எனவே அவர்கள் தங்களுடைய முரண்பாடுகளை பொதுவெளியில் கொட்டித் தீர்க்கட்டும். ஆனால் தங்களை ஐக்கியப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட அல்லது தங்களை பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட சிவில் சமூகங்களை நோக்கி குற்றச்சாட்டுகளை முன்வைப்பதும் தங்களுக்கிடையிலான மோதல்களில் சரி பிழை கூறுமாறு சிவில் சமூகங்களை அழைப்பதும் எதைக் காட்டுகிறது?

முதலாவதாக தமிழ் கட்சிகள் ஒரு பொருத்தமான ஐக்கியத்துக்குக்குப் போகும் பக்குவத்தை இனிமேல்தான் அடைய வேண்டி இருக்கிறது என்பதனை காட்டுகிறது. இரண்டாவதாக தமிழ் கட்சிகள் விவகாரங்களை கட்சி அடிப்படையில்தான் சிந்திக்கின்றன. ஒரு தேசத்தை கட்டியெழுப்புவது என்ற அடிப்படையில் சிந்திக்கவில்லை. எல்லாருமே கட்சிகளைத்தான் கட்டி எழுப்புகிறார்கள். தேசத்தை அல்ல. நாட்டில் கட்சி நிர்மாணிகள்தான் உண்டு. தேச நிர்மாணிகள் அல்ல.

எனவே மேற்சொன்ன மூன்று நிகழ்வுகளையும் தொகுத்து பார்த்தால் அது தமிழ் அரசியலின் இயலாமையையும் காட்டுகிறது. அதேசமயம் தமிழ் அரசியலை எந்த அடிப்படையில் பலப்படுத்த வேண்டும் என்பதையும் அது காட்டுகிறது. தமிழ் அரசியலை எந்த அடிப்படையில் பலப்படுத்துவது? கட்சிகளை ஒற்றுமைப்படுத்த வேண்டும். ஆனால் அது ஒரு பொதுக் கொள்கையின் அடிப்படையிலேயே இருக்கவேண்டும். ஒவ்வொரு கட்சியும் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்கு சிவில் சமூகங்களைப் பயன்படுத்த விடக்கூடாது.சிவில் சமூகங்கள் கட்சிகளை ஒருங்கிணைப்பது என்பது கட்சிகளுக்கு வெள்ளை அடிப்பது அல்ல. அல்லது தேர்தல் தோல்விகளிலிருந்து கட்சிகள் மீண்டுவருதற்கு உதவுவதும் அல்ல. சிவில் சமூகங்களின் வேலை கட்சிகளைக் கட்டி எழுப்புவது அல்ல சமூகத்தைக் கட்டியெழுப்புவதே.

இந்த அடிப்படையில் சிந்தித்து தேசத்தை நிர்மாணிப்பது என்று முடிவெடுத்து கட்சிகள் ஏனைய அமைப்புக்கள் புலம்பெயர் தமிழ்ச் சமூகம் தமிழகம் ஆகிய எல்லாத் தரப்புக்களையும் ஒருங்கிணைத்து சிவில் சமூகங்கள் தங்களை பலப்படுத்த வேண்டும். கீழிருந்து மேல் நோக்கிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். உத்திகளை கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது சிவில் சமூகங்களால் மட்டும் கையாளத் தக்க ஓர் அரசியல் அல்ல இது. மாறாக தமிழ் மக்களுக்கு ஒரு தமிழ் தேசிய இயக்கம் தேவை என்ற பாடத்தை கற்றுத் தந்த மூன்று நிகழ்வுகள் இவை.

# புதுச்சேரி அரசை வரும் 22ம் தேதி மாலைக்குள் பெரும்பான்மையை நிரூபிக்க உத்தரவு

## முதல்வரிடம் நேரடியாகத் தெரிவித்த ஆளுநர் தமிழிசை

புதுச்சேரி அரசை வரும் 22ம் தேதி மாலை 5 மணிக்குள் பெரும்பான்மையை சட்டப்பேரவையில் நிரூபிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. ராஜ்நிவாஸ் வந்த முதல்வரிடம் நேரடியாக இத்தகவல் துணைநிலை ஆளுநர் தமிழிசை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைகளை உயர்த்துவதன் மூலம் வாக்கெடுப்பு நடக்கும். வீடியோ பதிவு செய்யப்பட உள்ளது.புதுவை காங்கிரஸ் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த நமச்சிவாயம், மல்லாடி கிருஷ்ணாராவ், எம்எல்ஏக்கள் தீப்பாய்ந்தான், ஜான்குமார் ஆகியோர் அடுத்தடுத்து தங்கள் பதவியை ராஜினாமா செய்தனர். இதையடுத்து, காங்கிரஸ் அரசு பெரும்பான்மையை இழந்தது.

இதனால், புதுவை சட்டப்பேரவை யில் காங்கிரஸ் எம்எல்ஏக்கள் பலம் 10 ஆகவும், அரசை ஆதரிக்கும் திமுக 3, சுயேச்சை ஒருவர் என 14 எம்எல்ஏக்கள் பலம் மட்டுமே உள்ளது. எதிர்க்கட்சிகளான என்.ஆர்.காங்கிரஸ் 7, அதிமுக 4, பாரதிய ஜனதா 3 என 14 எம்எல்ஏக்கள் பலம் உள்ளது. சபாநாயகருடன் சேர்த்து ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் சம பலம் உள்ளது. தற்போது சட்டப்பேரவையில் மொத்த எம்எல்ஏக்கள் 28 பேர் உள்ளனர். இதில், 15 எம்எல்ஏக்கள் பலம் இருந்தால்தான் 'மெஜாரிட்டி' கிடைக்கும். ஆளும் காங்கிரஸ் அரசுக்கு 14 எம்எல்ஏக்கள் மட்டுமே உள்ளனர்.நாராயணசாமி தார்மீக அடிப்படையில் முதல்வர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்



என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. அதோடு, ஆளுநர் மாளிகையில், நாராயணசாமி அரசை பெரும்பான்மையை நிரூபிக்கக் கோரி எதிர்க்கட்சிகள் மனுவும் அளித்தன. இந்த மனு மீது புதிதாக இன்று (பிப்.18) பதவியேற்ற துணைநிலை ஆளுநர் (பொறுப்பு) தமிழிசை சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்க இருப்பதாகக் கூறியிருந்தார்.இந்நிலையில், துணைநிலை ஆளுநர் தமிழிசையை எதிர்க்கட்சிகள் மீண்டும் கூட்டாகச் சென்று சந்தித்து இக்கருத்தை மீண்டும் வலியுறுத்தினர்.அதைத்தொடர்ந்து, உயர் அதிகாரிகளுடன் தமிழிசை கலந்து ஆலோசித்தார்.

அதைத் தொடர்ந்து ராஜ்நிவாஸ் இன்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:"புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர் ரங்கசாமி உட்பட 14 எம்எல்ஏக்கள் 17ம் தேதி ராஜ்நிவாஸ் வந்து அனைவரும் கையெழுத்திட்ட மனு தந்திருந்தனர். தற்போதைய புதுச்சேரி அரசு பெரும்பான்மையை இழந்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தனர். சட்டப்பேரவையில் அரசானது பெரும்பான்மையை நிரூபிக்க உத்தரவிடக் கோரியுள்ளனர். அதே கோரிக்கையை இன்றும் துணைநிலை ஆளுநரைச் சந்தித்து வலியுறுத்தியுள்ளனர்.தற்போது புதுச்சேரி அரசில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி ஆகியவற்றில் உள்ள எம்எல்ஏக்கள் தலா 14 பேர் உள்ளதை ஆளுநர் கேட்டறிந்தார். சட்டவிதிகள் மற்றும் நீதிமன்ற உத்தரவுகளைக் கலந்து ஆலோசித்தார். அதைத் தொடர்ந்து, எடுக்கப்பட்ட முடிவுகளை ராஜ்நிவாஸ் வந்த முதல்வர் நாராயணசாமியிடம் தெரிவித்துள்ளார்.

அதன்படி, புதுச்சேரி சட்டப்பேரவை வரும் 22ம் தேதி கூட்டப்பட வேண்டும். இக்கூட்டத்தில், ஒரேயொரு நிகழ்ச்சி நிரலாக, அரசானது பெரும்பான்மையுடன் உள்ளதா என்பதற்கான வாக்களிப்பு கைகளைக் காண்பிப்பது மூலம் நடத்தப்படும். இந்நிகழ்வு முழுக்க வீடியோ பதிவாக்கப்பட வேண்டும். பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பானது வரும் 22ம் தேதி மாலை 5 மணிக்குள் நிறைவடைய வேண்டும். எக்காரணம் கொண்டும் இந்நிகழ்வைத் தள்ளிவைக்கவோ, தாமதப்படுத்தவோ, நிறுத்தி வைக்கவோ கூடாது. சட்டப்படியும் அமைதியான முறையிலும் வாக்களிப்பு நடப்பதை சட்டப்பேரவைச் செயலாளர் உறுதி செய்ய வேண்டும்". இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அதிமுக பொதுக்குழுவுக்கு எதிராக சசிகலா வழக்கு: மார்ச் 15ல் விசாரணை



2017ம் ஆண்டில் நடந்த அதிமுக பொதுக் குழு கூட்டத்தைச் செல்லாது என அறிவிக்கக் கோரி சசிகலா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மார்ச் 15ம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக சென்னை சிவில் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அதிமுக பொதுச் செயலாளராக இருந்த ஜெ.ஜெயலலிதா உடல்நலக் குறைவு காரணமாக சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த நிலையில் 75 நாட்களுக்குப் பிறகு சிகிச்சை பலனளிக்காமல் 2016 ம் ஆண்டு டிசம்பர் 5ம் தேதி காலமானார். அதன் பின்னர் பொதுச் செயலாளராக சசிகலா தேர்வு செய்யப்பட்டார். பொதுக்குழுவில் ஒருமனதாக அனைவரும் தேர்வு செய்யப்பட்டனர். பின்னர் துணைப் பொதுச் செயலாளராக டிடிவி தினகரனை சசிகலா நியமித்தார்.

அதன்பின்னர் சொத்துக்குவிப்பு வழக்கில் சசிகலா நான்காண்டு தண்டனை விதிக்கப்பட்டு பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டார். அவர் சிறையில் இருந்த சமயத்தில் 2017ம் ஆண்டு செப்டம்பர் 12ம் தேதி அதிமுக பொதுக்குழு சென்னையில் நடைபெற்றது. அந்தப் பொதுக்குழுவில் அதிமுக நிர்வாகிகள் சசிகலா, தினகரன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டது செல்லாது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனால் அதிமுகவின் பொதுக்குழுக் கூட்டம் செல்லாது என அறிவிக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் சசிகலா மற்றும் டிடிவி தினகரன் ஆகியோர் வழக்குத் தொடர்ந்தனர்.

அதில், அதிமுக பொதுச் செயலாளராக சசிகலா உள்ள நிலையில், கட்சி விரோதமான செயல்பாடுகளை முதல்வர் எடப்பாடி பழனிசாமியும், துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அமைச்சர்களும் மேற்கொண்டு வருவதாகக் குற்றம் சாட்டியிருந்தனர். பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 12 தீர்மானங்கள் செல்லாது என அறிவிக்க வேண்டும் எனவும், குறிப்பாக தங்களைக் கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் துணைப் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கியது செல்லாது என அறிவிக்க வேண்டும் எனவும் மனுவில் கோரியிருந்தனர். இந்த வழக்கில் வழக்குக் கட்டணமாக 25 லட்ச ரூபாய் செலுத்தப்பட்டிருந்தது.

அப்போது இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சி.வி.கார்த்திகேயன், கட்சியின் வங்கிக் கணக்குகள் குறித்த விவரங்களையும், கட்சி தொடர்பான அனைத்து ஆவணங்களையும், அதிமுக தலைமைக் கழக மேலாளர் மகாலிங்கம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டார். இதையடுத்து, வங்கிகளின் மேலாளர்கள் வங்கிக் கணக்குகளை சசிகலா மற்றும் டிடிவி தினகரன் தரப்பினருக்கு வழங்கினர். இந்த வழக்கில் தற்போதைய நிலையே நீடிக்க வேண்டும் என நீதிபதி இடைக்கால உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்நிலையில் நீதிமன்றக் கட்டணமாக ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலுத்தும் வழக்குகளை மட்டுமே உயர் நீதிமன்றம் விசாரிக்க வேண்டுமென விதிகளில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து சசிகலா, தினகரன் ஆகியோர் தொடர்ந்த வழக்கு சென்னை நகர சிவில் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. அங்கு மாற்றப்பட்ட பிறகும் வழக்கு பட்டியலிடப்படாமல் இருந்ததாகக் கூறப்படுகிறது.தண்டனை முடிந்து சென்னை திரும்பிய பின்னர் சசிகலா ஆலோசனையின்படி, அவரது வழக்கறிஞர் ராஜா செந்தூர்பாண்டியன் சிவில் சென்னை நான்காவது நகர உரிமையியல் நீதிமன்றத்தில் முறையிட்டார்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் இந்த வழக்கு விசாரிக்கப்படாமல் இருந்தால் அரசியல் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்றும், வழக்கை உடனே விசாரிக்கவேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார். இதையடுத்து இந்த வழக்கு மார்ச் 15ம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக நீதிபதி அறிவித்துள்ளார். மார்ச் 15 அன்று விசாரணைக்கு வரும் வழக்கு காரணமாகத் தமிழக அரசியலில் பல்வேறு திருப்பங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

## தமிழகத்தில் படிப்படியாக பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும்: அரசுக்கு உயர் நீதிமன்றம் அறிவுறுத்தல்



தமிழகத்தில் பெண்கள், குழந்தைகளின் கண்ணீரைத் துடைக்கும் வகையில் படிப்படியாக பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.மதுரை தட்டான்குளத்தில் மேலூர் சாலையில் உள்ள டாஸ்மாக் மதுக் கடையை அகற்றக் கோரி உயர் நீதிமன்றக் கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதிகள் என்.கிருபாகரன், பி.புகழேந்தி அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது பிப்.28க்குள் கடையை வேறு இடத்துக்கு மாற்றுவதாக டாஸ்மாக் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது. பின்னர் நீதிபதிகள் பிறப்பித்தஉத்தரவு: தமிழகம் மதுவில் மூழ்கியுள்ளது. இது குறித்து யாரும் கவலை கொள்வதில்லை. பெண்கள், குழந்தைகளின் கண்ணீரைத் துடைக்கும் வகையில் தமிழகத்தில் படிப்படியாக பூரணமதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என அரசுக்கு நீதிமன்றம்அறிவுறுத்துகிறது.

மது விற்பனையால் தமிழக அரசுக்கு ஆண்டுக்கு ரூ.30 ஆயிரம்கோடி வருவாய் கிடைக்கிறது.அதே நேரத்தில் பொது சுகாதாரத்துக்கு ரூ.90 ஆயிரம் கோடி செலவிடப்படுகிறது.தமிழக ஆறுகளில் தண்ணீர் ஓடுகிறதோ, இல்லையோ மூலைமுடுக்கெல்லாம் மதுபானம் ஆறாக ஓடுகிறது. இதை நீதிமன்றத்தின் வலியுறுத்தலாகப் பார்க்காமல் ஒட்டுமொத்த சமூகத்தின் குரலாக அரசு பார்க்க வேண்டும். மதுவிலக்கால் பல்வேறு நன்மைகள் ஏற்படும். குற்றங்கள் குறையும், தனி நபர் வருமானம் உயரும், குடிகாரர்களின் உடல்நிலை மேம்படும். இதனால் தமிழகத்தில் படிப்படியாக பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்றனர்.

# 'தனி' ஈழம் உருவாக வேண்டும் என்பது அனைவரதும் ஆசை' என்கிறார் இயக்குநர் விக்ரமன்



தொடர்ந்து சூப்பர் ஹிட் பாடல்களைக் கொடுத்து தமிழ் சினிமாவில் தனக்கென தனி அடையாளத்தை உருவாக்கி வைத்திருப்பவர் இசையமைப்பாளர் எஸ்.ஏ. ராஜ்குமார். அவர் சில வருடங்களுக்குப் பிறகு மனதுக்கு இனிய பாடல்களைக் கொடுத்திருக்கும் படம் "வா பகண்டையா." உண்மைச் சம்பவம் ஒன்றை மையமாக வைத்து இந்த படத்துக்கு கதை திரைக்கதை வசனம் எழுதி இயக்கி தனது "ஒளி ரெவிலேஷன்" நிறுவனம் சார்பில் தயாரித்தும் இருக்கிறார் ப.ஜெயகுமார். புதுமுக நடிகர்கள் விஜய தினேஷ் ஹீரோவாகவும், நிழன் வில்லனாகவும், அறிமுக நடிகை ஆர்த்திகா ஹீரோயினாகவும் நடித்திருக்கும் இந்த படத்தில், ஏற்கனவே பல படங்களில் நடித்துள்ள யோகி ராம் இன்னொரு வில்லனாக நடிக்கிறார். இவர்களோடு ஆர்.சுந்தர்ராஜன், நிழல்கள் ரவி, மீரா கிருஷ்ணன், "வெண்ணிலா கபடி குழு" நிதிஷ் வீரா, "பவர் ஸ்டார்" சீனிவாசன், மனோபாலா, "காதல்" சுகுமார், பிளாக் பாண்டி, போண்டா மணி உள்ளிட்ட பலர் நடிக்கிறார்கள். கதை விழுப்புரம் மாவட்டத்திலுள்ள பகண்டையா என்ற கிராமத்தில் நடப்பதுபோல் அமைந்துள்ளதாம். இந்த படத்தின் பாடல் வெளியீட்டு விழா 17.2.2021 அன்று சென்னையில் நடந்தது. விழாவில் நாயகன் நாயகி வில்லன் இயக்குநர் உள்ளிட்ட படக்குழுவினருடன், தயாரிப்பாளர் சங்கத் தலைவர் "தேனாண்டாள் பிலிம்ஸ்" முரளி ராமசாமி, "பெப்சி" தலைவர் ஆர்.கே. செல்வமணி, இயக்குநர் விக்ரமன், இயக்குநர் பேரரசு, இசையமைப்பாளர் தினா, "ஸ்டண்ட் யூனியன்" தலைவர் தவசி ராஜ், பி.ஆர்.ஓ. சங்கத் தலைவர் விஜயமுரளி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

விழாவில் இயக்குநரும், "பெப்சி" அமைப்பின் தலைவருமான ஆர்.கே. செல்வமணி பேசும்போது, ""முப்பது வரு'த்துக்கு முன்னே நான் இயக்கிய "புலன் விசாரணை" படம் ரிலீஸானப்போ என்னால தியேட்டருக்குள்ளே போக முடியலை. அப்படியொரு கூட்டம். அந்தளவு கூட்டத்தை இன்னைக்கு இந்த விழாவுல பார்க்க முடியுது. எப்படி புலன் விசாரணை 100 நாள் ஓடி வெற்றி பெற்றுச்சோ அப்படி இந்த படமும் பெரியளவுல வெற்றி பெறணும்னு வாழ்த்தறேன். புலன் விசாரணையில எப்படி விஜய்காந்தோ அதே பழைய விஜய்காந்த் மாதிரி இந்த படத்தோட ஹீரோ தமிழ் சினிமாவுக்கு கிடைச்சிருக்கார். ஒரு தமிழ்ப் பொண்ணை ஹீரோயினா அறிமுகப்படுத்திருக்காங்க. அதையெல்லாம் வெச்சுப் பார்க்கிறப்போ நல்ல தமிழ்ப் படமா வந்திருக்கும்கிற நம்பிக்கை வருது. டிரெய்லர் பார்க்கிறப்போ, படம் சமூக அக்கறையை மையமா வெச்சு எடுக்கப்பட்டிருக்குன்னு புரிஞ்ச்சுக்க முடிஞ்சுது. இனத்தால, மதத்தால நாட்டை துண்டாடுறவங்களுக்கு எதிரான வசனமும் இருக்கு. அது எல்லாமே சரியானதுதான். அந்த வகையில இயக்குநர் நல்ல படத்தை எடுத்திருக்கார்"" என்று குறிப்பிட்டுப் பாராட்டினார்.

இயக்குநர் பேரரசு பேசும்போது, ""என்னோட படங்களுக்கு ஊர் பெயர்களைத்தான் தலைப்பா வைப்பேன். அதே மாதிரி இந்த படத்தோட இயக்குநர் அவரோட பகண்டையா"ங்ககிற ஊர்ப் பெயரை தலைப்பா வெச்சிருக்கார். இயக்குநருக்கு ஊர்ப்பற்று மட்டுமில்லை தேசப்பற்றும் இருக்கு. அதனாலதான், நாட்டுல இன உணர்வைத் தூண்டி, மத உணர்வைத் தூண்டி ஆதாயம் பார்க்க, அரசியல் பண்ணா நினைக்கிறவங்களை செருப்பால அடிக்கிற மாதிரி வசனம் வெச்சிருக்கார். யாருக்கு ஊர்ப்பற்றும் தேசப்பற்றும் இருக்கோ அவங்க நல்ல கலைஞன். அவங்கதான் உண்மையான மனிதன். அப்படி பார்க்கிறப்போ இந்த படத்தோட இயக்குநரை உண்மையான மனிதன்னு சொல்லலாம். டிரெய்லர் பார்த்தப்போ "சாதிங்கிறது மாம்பழக் கொட்டைக்குள்ள இருக்கிற வண்டு மாதிரி"ன்னு ஒரு வசனம் வந்துச்சு. மாம்பழத்தை ஏன் இழுத்திருக்கார்னு படத்தை பார்த்தாதான் புரியும். பார்க்கணும். அடுத்ததா, படத்தோட ஹீரோ பேரு விஜய தினேஷாம். விஜய்னாலே வெற்றிதான். ஹீரோவை பார்த்து ஆர்.கே. செல்வமணி, விஜய்காந்தை பார்த்த மாதிரி இருக்குன்னார். விஜய்காந்தை மட்டுமில்லை விஜய்ய பார்த்த மாதிரியும் இருக்கார்"" என்று படக்குழுவினர் உற்சாகத்தில் மிதக்கும்படி சிலாகித்துப் பாராட்டினார்.



இயக்குநர் விக்ரமன் பேசும்போது, ""என்னோட பல படங்களுக்கு இசையமைச்ச நண்பர் எஸ்.ஏ. ராஜ்குமார் இந்த படத்துக்கு இசையமைச்சிருக்கிறது மகிழ்ச்சியா இருக்கு. சமூக அக்கறையை மையமா வெச்சு உருவாகியிருக்கிற இந்த படத்தோட ஒரு பாட்டுல "தமிழர்களோட சினத்தால் தனி ஈழம் உருவெடுக்கும்"கிற மாதிரி ஒரு வரி வருது. இயக்குநரோட அந்த கனவு நனவாகணும். அதுதான் நம் எல்லோருடைய விருப்பமும் ஆசையும்கூட"" என பெருமிதப்பட்டார்.

இசையமைப்பாளர் தினா பேசும்போது, ""இந்த நிகழ்ச்சில கலந்துக்கிட்டிருக்கிற, இயக்குநரோட சொந்த ஊரான விழுப்புரத்துல இருந்து வந்திருக்கிற ரசிகர்களோட உற்சாகத்தைப் பார்த்தா படம் விழுப்புரத்துல 175 நாள் ஓடி வெள்ளிவிழா காணும்கிறது உறுதியா தெரியுது. அங்கே மட்டுமில்லாம் எல்லா இடத்துலயும் படம் பெருசா ஓட ரசிகர்கள் ஆதரவு தரணும்"" என்றார்.



எஸ்.பி.பி. பாடிய பாடல் இடம்பெற்ற கடைசித் திரைப்படம் என்ற பெருமை பெற்றுள்ள இந்த படத்துக்கு, ஆரி ஆர்.ஜே.ராஜன் ஒளிப்பதிவு செய்ய, சுரேஷ் அர்ஸ் படத்தொகுப்பு செய்கிறார். சிவசங்கர்,

அக்ஷை ஆனந்த், விஜி ஆகியோர் நடனம் அமைக்க, இடி மின்னல் இளங்கோ சண்டைக்காட்சிகளை வடிவமைக்கிறார். மக்கள் தொடர்பாளராக கோவிந்தராஜ் பணியாற்றுகிறார்.

- மக்கள் தொடர்பு: கோவிந்தராஜ்




# இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கு முன் நிறுத்த வேண்டும் என்பதற்காக கனடாவில் ஒரு 'கையெழுத்து வேட்டை'

கனடா வாழ் தமிழ் மக்கள் அனைவரும் இந்த கையெழுத்து இடும் திட்டத்டதில் பங்கெடுத்து, இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கு முன்பாக நிறுத்துவதற்கு கனடிய அரசிற்கு வேண்டுகோள் விடுக்க வேண்டும். எமது கையெழுத்துக்களின் பலம் மூலமாகவே இந்த முயற்சி சாத்தியமாகும் என்பதே நிச்சயம்.




நீங்கள் கையொப்பமிட்டதும், உங்கள் மின்னஞ்சல் முகவரியை உறுதிப்படுத்த கணினி உருவாக்கிய மின்னஞ்சலுக்கு பதிலளிக்க கூடுதல் படியை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும். கையொப்பமிட்டு உறுதிசெய்த பிறகு, இந்த மனுவை ஆதரிக்க உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்கள், உறவினர்கள், சக ஊழியர்கள், தொழில் வல்லுநர்கள் ஆகியோரின் வட்டத்தை பரவலாகக் கேளுங்கள்.

**Petition to the Government of Canada**

**WHEREAS:**

- Since Sri Lanka's Independence on February 4, 1948 from British rule, through the amalgamation of two distinct nations, one being the Tamil nation;
- Sri Lanka has accessed and Canada has signed the UN Convention on the Prevention and Punishment of the Crime of Genocide;
- Sri Lanka has numerous documented cases of genocidal activities as outlined in Article II of the aforementioned act;
- The Government of Sri Lankan (GoSL) and Forces have avoided prosecution of those who committed acts of genocide;
- The GoSL continues to oppress the basic human rights of Tamils to this present day, continuing to perpetuate the structural genocide of the Indigenous Tamil people of Eelam.

**WE, THE UNDERSIGNED CITIZENS AND RESIDENTS OF CANADA, CALL UPON THE GOVERNMENT OF CANADA TO:**

1. Refer Sri Lanka to the International Criminal Court (ICC);
2. Submit for trial to the ICC members of the GoSL and its Forces who are significant contributors to the genocidal activities as outlined in Article III and Article IV;
3. Request Canada to sanction travel bans and asset freezes on the identified war criminals in Sri Lanka to advance accountability and justice in following suit with the U.S. Department of State's travel ban on Shavendra Silva;
4. Impose economic sanctions on Sri Lanka;
5. Petition the United Nations to conduct an international, impartial and independent mechanism (IIIM) into the conduct of the GoSL and its Forces;
6. Ensure the new resolution mandates stopping the ongoing genocide against Tamils and proposes a referendum with international monitors and victims' participation, to ensure Tamils' Rights to Self-Determination.





# 'என்னைப் பழி வாங்க தன் பிள்ளையைக் கொன்றவர் என்னையே கொன்றிருக்கலாம்'

## தன் ஒரே மகளை தந்தையின் துப்பாக்கிச் சன்னத்திற்கு இரை கொடுத்த தாயின் துயரம் இரு வருடங்கள் கடந்தும் தொடர்கிறது

கனடாவில் இரண்டு வருடங்கள் முன்னர் தன் ஒரே மகளை தன் கணவரின் கரங்களுக்குள் ஒப்படைத்து சில மணி நேரத்திற்கும் அவளை அதே தந்தையே சுட்டுக் கொன்ற சோகம் தாங்காது இன்னும் கண்ணீர் வடிக்கும் ஒரு பெண்ணின் கதை இது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் தனது மகள் தந்தையால் சுட்டுக்கொலைசெய்யப்பட்ட இதே நாளான பெப்ரவரி 8ம் திகதி தான் தனது மகளது பாடசாலை அருகே வழமையாக சென்று அமர்ந்திருந்து மகிழும் அதே வாங்கொன்றில் தான் பறிகொடுத்த தனது மகளின் புகைப்படத்தை வைத்துக் கொண்டு கணணீர் வடிக்கின்றார் தயார் பிரியா. தன்னிடம் பேசுவதற்கு வந்த ஒரு பத்திரிகையாளரிடம் பிரியா தன் கதையைக் கூறத் தொடங்குகின்றார்.

”நான் எனது ரியாவைப் பறிகொடுத்த பின்னர், ஒருவரிடமும் இந்தக் சம்பவங்கள் பற்றிக் கூறவில்லை. எனக்குள் அழுத வண்ணம் காலத்தைக் கழித்து வருகின்றேன். ஆனால் இன்று நான் கூறுவதற்குக் காரணம், எனக்கு நடந்தது போன்று வேறு பெண்களுக்கோ அன்றி தாய்மார்களுக்கோ மனதை வருத்தும் சம்பவங்கள் நடந்து விடக் கூடாது என்பதற்காகத் தான்” என்றார்.

கனடாவின் மிசிசாகா நகரில் கடந்த 2019ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ம் திகதி ஒரு 11 வயது சிறுமி தனது தந்தையால் கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றாள் என்ற செய்தி ஒவ்வொருவர் கைத்தொலைபேசியிலும் “அபாய அறிவிப்பாக“ ஒலியெழுப்பியது. அந்த குறுஞ்செய்தியைப் படித்தவர்கள், தந்தையே கடத்திச் சென்றாரா? என்ன காரணம்? என்று எண்ணிய வண்ணம் தங்கள் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினார்கள்.

ஆனால் 42 வயதுடைய தாய்க்கு மட்டும் மனது கனத்தது. சில மணி நேரத்திற்கு முன்னர் ஒரு பெற்றோல் நிரப்பும் நிலையத்தின் வாகனத் தரிபபிடத்தில் தனது காரிலிருந்து மகிழ்ச்சியுடன் ஓடிச் சென்று தந்தையின் காரில் உற்சாகத்துடன் ஏறிச் சென்ற ரியா என்னும் சிறுமி தான் இவ்வாறு கடத்தப்பட்டிருக்கின்றாள் என்று. அதற்கு காரணம் இருந்தது.

கயானா நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டு ராஜ்குமார்-பிரியா தம்பதி தமது மகள் ரியாவுடன் வாழ்ந்து வந்த போது, கணவன்-மனைவி இருவருக்கும் சிறு சிறு சச்சரவுகள் ஏற்பட்டு பின்னர் அது விரிவடைந்து தோன்றிய குடும்பப் பிரச்சனை காரணமாக இரண்டு வருடங்களாகப் பிரிந்து வாழத் தொடங்கினார்கள்.

மகள் ரியா தாயாரான பிரியாவுடன் சென்று வாழ, தந்தை ராஜ்குமார் வே-றொரு வீட்டில் தனியாக வாழ்ந்து வந்தார். ஆனால் நீதி மன்றம் வரைக்கும் சென்ற இவர்களது குடும்பப் பிரச்சனையால், நீதி மன்றத் தீர்ப்பின் பிரகாரம் மாதத்தில் சில மணித்தியாலங்கள் ரியா என்னும் அந்த சிறுமி தனது தந்தையோடு சென்று தங்கியிருந்து அவரோ உணவருந்தி வரும் வழக்கம் தொடர்ந்து கொண்டிருந்தது.

சில நாட்களில் தொலைபேசியில் பிரியாவை அழைக்கும் ராஜ்குமார், ”நான் இனிமேல் உனக்கு கஸ்டங்கள் தரமாட்டேன். மகளோடு வந்து விடு, சேர்ந்து வாழ்வோம்” என்ற அழைத்த போதும், அவரால் தனக்கு ஏற்பட்ட அவமானங்கள் மற்றும் கொடுமைகள் காரணமாக அந்த அழைப்பை புறக்கணித்து வந்த பிரியா மகள் ரியாவின் சிறந்த எதிர்காலத்திற்காக தன் நேரத்தின் பெரும்பகுதியைச் செலவழித்தார்.



2019ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ம் திகதி. ரியாவின் 11வது பிறந்த நாளான அன்றைய தினம் தாயார் பிரியாமிகுந்த மகிழ்ச்சியோ ரியாவின் பிறந்த நாளை தொடர்பாக என்னென்ன செய்ய வேண்டும் என்று திட்டமிட்டார்.

அதே நேரத்தில் மகள் ரியாவின் விருப்பத்தின் பேரில் நண்பிகள் சிலரோ சில நிமிடங்கள் செலவழிக்க வேண்டும். பின்னர் தந்தையோ சென்று அவரோ சில மணி நேரங்களைக் கழித்து அவரை மகிழ்விக்க வேண்டும். பின்னர் தாயாருர் தனக்குப் பிடித்த உணவகம் ஒன்றிற்கு சென்று இரவு அருந்த வேண்டும். இவை தான் 11வயது ரியாவின் விருப்பதிற்குரிய சந்திப்புக்களாக இருந்தன.

மாலை நேரம் நெருங்க, தந்தை ராஜ்குமார் தொலைபேசியில் அழைத்து தான் மகள் ரியாவை அழைத்துச் செல்ல குறிப்பிட்ட ஒரு பெற்றோல் நிரப்பும் நிலையத்தில் காத்திருப்பதாகக் கூறுகின்றார். உடனே தாயார் பிரியா மகள் ரியாவை அழைத்துக் கொண்டு காரில் அந்த பெற்றோல் நிரப்பும் நிலையத்தை நோக்கிச் செல்கிறார்.

அங்கே தந்தையின் காரைக் கண்டவுடன் மிகுந்த உற்சாகத்தில் தாயாருக்கு “போய்வருகின்றேன்” என்று கூடச் சொல்லாமல் ஓடிச்சென்று தந்தை ராஜ்குமாரின் காரில் ஏறிக்கொள்கின்றார் ரியா. அதன் பின்னர் வீடு சென்ற பிரியா, சில வேலைகளைக் கவனித்த வண்ணம், தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவருக்கு ராஜ்குமாரின் தொலைபேசியிலிருந்து அழைப்பு வந்தது.

ரியாவை தன்னிடம் ஒப்படைப்பதற்காகவே அவரது அழைப்பு வருகின்றது என்று எண்ணிய பிரியா ”ஹலோ” என்கின்றார். மறு பக்கத்தில் ராஜ்குமாரின் குரல் பதட்டமும் கோபமும் கலந்ததாக ஒலித்தது. ”மகள் ரியா இனிமேல் உன்னிடம் வர மாட்டாள். அவளை இனிமேல் நீ பார்க்கவே மாட்டாய்” என்று சொல்லிட்டு அழைப்பை துண்டிததார் ராஜ்குமார். என்ன நடந்து விட்டது என்று அறிந்து கொள்ள முடியாதவராக பதட்டமும் பயமும் கொண்டவராக பொலிசாருக்கு அழைத்து விபரங்களைச் சொல்லுகின்றார் பிரியா.

சில மணி நேரங்களின் பின்னர் மற்றவர்களுக்கு வந்தது போன்று அந்த “அபாய அறிவிப்பு“ ஒலி பிரியாவின் தொலைபேசிக்கும் வருகின்றது. தனது பிள்ளைக்கு ஏதோ நடந்து விட்டது என்று அலறிய வண்ணம் அருகிலிருந்த பொலிஸ் நிலையத்திற்குச் சென்றார் பிரியா. பிரியாவிற்கு நெஞ்சு வெடித்துவிடும் போன்று இருந்தது. இதற்கு முன்னர் கூட பல தடவைகள் ராஜ்குமார் தன்னிடம் எச்சரிக்கை செய்த வசனங்கள் ஞாபகத்திற்கு வந்தன.

”உன்னையும் உனது பிள்ளையையும் பிரித்து விடுவேன். உன்னை மகிழ்ச்சியாக இருக்கவே விடமாட்டேன்” என்ற அந்த வார்த்தைகளை மீட்டுப் பார்த்தபோது பிரியாவின் உடல் நடுங்கியது.




பொலிஸ் நிலையத்தில் இருந்த அதிகாரிகள் அவரை அழைத்துக்கொண்டு ராஜ்குமாரின் வீட்டுக்குச் சென்றார்கள். வீடு பூட்டிக்கிடந்தது. கதவைப் உடைத்துப் பார்ப்போமா? என்று அதிகாரிகள் கேட்க பிரியா சம்மதித்தார்.

உள்ளே சென்றபொது வீட்டில் ராஜ்குமார் இருப்பதற்கான அறிகுறிகள் இல்லை. அறைகள் சிலவற்றை பார்த்தபோது ரியா ஒரு அறையிலிருந்த கட்டில் ஒன்றில் உயிரற்ற சடலமாகக் கிடந்தாள். பொலிசார் அருகில் சென்று பார்த்தபோது,ரியாவின் பிடறியில் துப்பாக்கிச் சூட்டுக்காயத்திலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

மயக்கத்தில் நிலத்தில் சரிந்து விழுந்த பிரியாவை பொலிஸார் அம்புலன்ஸ் வாகத்திற்கு அழைத்து வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தார்கள். பின்னர் கொலையாளி என்று சந்தேகப்பட்ட தந்தை ராஜ்குமாரைத் தேடி வலை வீசினார்கள் பொலிசார்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர் அங்கிருந்து சுமார் 130 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள ஒரு இடத்தில் தனது வாகனத்திற்குள்ளேயே தன்னைத் தானே சுட்டுக் தற்கொலை செய்த அவரது சடலத்தைக் கைப்பற்றினார்கள் பொலிசார். தனது மனைவில் மீண்டும் தன்னோடு வந்து வாழ மறுத்தற்கு பழி தீர்க்கும் முகமாக தனது செல்லக் குழந்தையும் கொன்று தன்னையும் அழித்துக்கொண்டார் ராஜ்குமார்.

ஆனால் தனித்து விடப்பட்டவராகவும், தனது செல்வ மகளை தந்தையின் கரங்களுக்கு இரைகொடுத்த கொடுமை, தனியாக விடப்பட்ட சோகம் இவற்றின் மத்தியில் தனது மகள் ரியாவிற்காக அவரது பிறந்த நாளன்று ரியாவின் புகைப்படமொன்றுடன் அமர்ந்த வண்ணம் அவளது நினைவுகளை துயரத்துடன் பகிர்ந்து கொள்கின்றார் பிரியா.

***இங்கே காண்பபடும் படங்களில் ரியாவின் தந்தை கொலையாளி ராஜ்குமார், தாயார் பிரியா 9ம் வயதில் தனது தந்தையின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாகிய அழகிய சிறுமி ரியா ஆகியோர்.***

உடல் எடையை / பருமனை உடன் குறைக்க வேண்டுமா






★ இந்தத் தயாரிப்பானது உங்கள் உடலில் உள்ள கொழுப்பைக் குறைத்து அணுக்களை புதுப்பித்து உடலை இறுக்கப்படுத்தி அழகுடன் புத்துணர்ச்சி பெறுவதை 3 நாட்களில் நீங்கள் உணர்வீர்கள்.

★ பக்க விளைவுகளை ஏற்படுத்தாத இயற்கை தானியங்களினால் தயாரிக்கப்பட்டவை (விற்றமின்ஸ் - Based on science). இதனைப் பாவிப்பதன் மூலம் இடை குறைந்து அழகுறப் பெற்று உடல் எடையும் குறைந்து இளமைத் தோற்றத்தைப் பெறுவீர்.

★ இத்தயாரிப்பானது 100% இயற்கையானதும் பாதுகாப்பானதும். மேலும் மனித உணவுப் பொருட்களில் பயன்படுத்த அரசாங்கம் ஒப்புதல் அழித்துள்ளது. இதனைப் பாவிப்பதன் மூலம் நீங்கள் மூட்டுவலி, முகப்பரு, ஒற்றைத் தலைவலி மற்றும் தலைவலி போன்ற ஏனைய நோய்களிலிருந்தும் விடுபடுவீர்கள்.



This product helped naturally to remove all fat and replace the cell and tight your body you can see the change in your body within 3 days, it will enhance your energy. Additionally, all of the flavor components are 100% natural safe, and government approved for use in human food products BY doing this weight loss, you will also heal all other diseases, JOIN PAIN, ACNE. migraine/ Headache.

மேலும் விளக்கம் தேவைப்படின் அழையுங்கள்

416-875-1340

www.Gr2.control.com www.Gr2.control.com

# பரவுவதைத் தடுக்கவும்.

## கோவிட்-19 மிகவும் ஆபத்தானது.

## வீட்டிலேயே இருக்கவும்.

## உயிர்களைக் காப்பாற்றுங்கள்.



**ontario.ca/coronavirus**
இணையத்துக்கு வருகை தாருங்கள்
ஒன்ராறியோ அரசுக்காக ஒன்ராறியோ அரசினால் வழங்கப்பட்டது.

Ontario

# தென்கிழக்கு மார்க்கம் பகுதிக்கு கோவிட் - 19 சம்பந்தமான அதிமுக்கியத்துவமான சமூகச் செயற்பாடுகள்

Carefirst SENIORS & COMMUNITY SERVICES ASSOCIATION

நீங்கள் கோவிட் - 19 நோயினால் பாதிக்கப்பட்டிருந்து, உங்களுக்குச் சமூக ஆதரவு தேவைப்பட்டால் எங்களை அழையுங்கள்.

**Carefirst** இனது சமூக ஆதரவு சேவைகள் உள்வாங்கல் தொடர்பு எண்:

**416 646 5108** (திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை, முற்பகல் **9. 00** மணியிலிருந்து பிற்பகல் **5. 00** மணிவரை)

எமது பணியாளர்களால் கீழ்வரும் மொழிகளில் உங்களுக்கு உதவ முடியும்:
ஆங்கிலம், கன்ரனீஸ், மன்டறின், ஹிந்தி, பஞ்சாபி, தமிழ், உருது

## கிடைக்கக்கூடிய சேவைகள்:

- உணவுப் பாதுகாப்பு
- போக்குவரத்து
- மளிகைப் பொருள் கொள்வனவு
- குழந்தைப் பராமரிப்பு, தன்னார்வத் தனிமைப்படுத்தல் மையம், தங்குமிடம், வருமான உதவி ஆகியவற்றிற்கான சமூக வளங்கள்
- உளரீதியான ஆதரவு, ஆதரவுக்கான ஆலோசனை (மெய்நிகர் வழியாக)
- மருந்து / அத்தியாவசியப் பொருள் விநியோகம்
- பராமரிப்பு ஒருங்கிணைப்பு

***தகுதியானவர்களுக்கு மானியங்கள் கிடைக்கின்றன**.

## ஏனைய வளங்கள்:

**ஒன்ராரியோ தொலைபேசிச் சுகாதார சேவை உங்களுக்கு நோய்க்குரிய அறிகுறிகள்** காணப்பட்டால் அழைக்க வேண்டியது:
Tel: 1-866-797-0000

**ஒன்ராரியோ 211 / சமூகம் மற்றும் சமூக சேவைகள் உதவித் தொடர்பு:**
211ontario.ca

யோர்க் பிராந்திய கோவிட் - 19 தன்னார்வத் தனிமைப்படுத்தல் நிலையம்
**York Region COVID-19 Voluntary Isolation Centre**
1-877-464-9675
york.ca/isolationcentre

**யோர்க் பிராந்தியப் பொதுச் சுகாதாரப் பிரிவு**
1-800-361-5653

Carefirst **முதியோர், சமூக சேவை இணையம் மற்றும் கீழ்வரும் சேவைப் பங்காளர்களினால் இது எடுத்துவரப்படுகிறது**:

Carefirst Family Health Team
Centre for Immigrant and Community Services
Community & Home Assistance to Seniors (CHATS)
City of Markham
EYRND Ontario Health Team
Health Common Solutions
Health for All Family Health Team
Hong Fook Mental Health Association
Islamic Society of Markham - Jam'e Masjid Markham
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
Markham Wesley Centre
Social Services Network
Tamil Civic Action
The Cross-cultural Community Services Association
YMCA of Greater Toronto (Markham)
York Region Community and Health Services
York Region Public Health
105 Gibson Centre
360° Kids Support Services

**Funded by: Ontario Health and Central LHIN**

Updated on February 5, 2021

# திருகோணமலை வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட் அடையாள வேலைநிறுத்தம்



திருகோணமலை பொது வைத்தியசாலை சிற்றூழியர்கள் கடந்த பல வருடங்களாக போராடி வருவதாகவும் முந்தைய அரசாங்கம் தற்போதைய அரசாங்கமும் எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக கூறினாலும் இது வரை ஒரு கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை எனவும் மிக விரைவில் எமது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு அரசாங்கம் மிக விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். பத்து கோரிக்கைகளை முன்வைத்து அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலை வளாகத்தில் நேற்றுமுன்தினம் (17) காலை 9 மணி தொடக்கம்10.30 மணி வரை இந்த அடையாள வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்பட்டது.

ஒன்றிணைந்த சுகாதார ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

வாரத்தில் மேலதிக 8 மணி நேரத்திற்கு சம்பளத்தில் 180 நாட்களை நிறைவு செய்த சகல சுகாதார சிற்றூழியர்கள் சமயாசமய ஊழியர்கள் உடனடியாக நிரந்தரமாக்கிக் கொள்ளல்.

சீருடை கொடுப்பனவை பதினையாயிரம் ரூபாவாக மற்றும் சக ஊழியர்களுக்கும் விசேட அனர்த்த கொடுப்பனவை பெற்றுக்கொள்ளல், மேலதிக நேர வேலையை பெற்றுக் கொள்ளல், சிற்றூழியர்கள் குறையை நிவர்த்தி செய்தல், முகாமைத்துவ சேவை பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள் நியமன பெற்றுக் கொள்ளலும், 45 வயதிற்கு மேற்பட்டவர்களின் ஓய்வூதிய உரிமையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 20ம் திகதி சனிக்கிழமை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நடத்த திட்டமிட்டுள்ள தீச்சட்டி போராட்டம்

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நாளை 20ஆம் திகதி சனிக்கிழமை நடத்த திட்டமிட்டுள்ள தீச்சட்டி போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர். கிளிநொச்சியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர். ஊடகவியலாளர் சந்திப்பு கிளிநொச்சி ஊடக அமையத்தில் நடைபெற்றது.

வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர் கவன ஈர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து 20ஆம் திகதி 04 ஆண்டுகள் நிறைவடைகிறது. அன்றைய தினம் தீச்சட்டி போராட்டமாக முன்னெடுக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது, இப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

சங்கத்தின் தலைவி கனகரஞ்சினி மேலும் தெரிவிக்கையில்,

உண்மைக்கும் நீதிக்குமான இப் போராட்டம் சர்வதேசத்தின் ஊடாக நீதியை பெற்றுக்கொள்வதற்காக தொடர் போராட்டத்தை ஆரம்பித்திருந்தோம். எங்களுடைய உறவுகள் எமக்கு கிடைக்கும் வரையும், அவர்களுக்கான நீதி கிடைக்கும் வரையிலும் போராட்டத்தை கைவிடப் போவதில்லை. நாளை 20 ஆம் திகதி வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் உறவுகளும் எமக்கு பலம் சேர்க்க வேண்டும். அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிராம மட்ட அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், போக்குவரத்து கழகங்கள், அரசியல் பேதமின்றி அனைத்து அரசியல்வாதிகளும் நாளைய தினம் நடைபெறவுள்ள தீச்சட்டி பேரணியில் கலந்துகொண்டு எங்களுக்கான நீதி கிடைக்க வலு சேர்க்குமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த தீச்சட்டி பேரணி கிளிநொச்சி பிள்ளையார் ஆலய முன்றலிலிருந்து கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலை சென்றடையும். இந்த போராட்டம் எமக்கான நீதியை சர்வதேசம் பெற்று தருவதற்காக சர்வதேசத்திலுள்ள அனைவரினது நெஞ்சங்களிலும் பதியப்பட வேண்டும்.

எமது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வந்தவர்களும், எமக்கு நீதி கிடைக்க வேண்டுமென்று எண்ணுகின்ற அனைவரும் 20ஆம் திகதி காலை 09 மணிக்கு ஆரம்பமாகவுள்ள பேரணியில் கலந்து கொண்டு எமக்கு வலுச் சேர்க்க வேண்டும் என அவர் இதன்போது கேட்டுக்கொண்டார்.


Carefirst
SENIORS & COMMUNITY SERVICES ASSOCIATION

**கோவிட் -19**
**POP-UP சோதனை**

**உங்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் இருந்தால், அல்லது நீங்கள் COVID-19 உடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்று நினைத்தால், தயவுசெய்து ஒரு சந்திப்பை பதிவு செய்து சோதனை செய்யுங்கள்.**

எல்லாம் வரவேற்கத்தக்கது, வயது வரம்பு இல்லை. உங்கள் **OHIP** சுகாதார அட்டையை கொண்டு வாருங்கள். உங்களிடம் **OHIP** அட்டை இல்லையென்றால், தயவுசெய்து 1 துண்டு ஐடியைக் கொண்டு வாருங்கள்.

* தயவுசெய்து கவனிக்கவும், சர்வதேச பயண அனுமதிக்கு **COVID-19** சோதனை கோரும் நபர்கள் பொதுவில் நிதியளிக்கப்பட்ட **COVID-19** சோதனைக்கு தகுதியற்றவர்கள்

**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd, Scarborough ON M1V 0G2 (Midland & McNicoll)**
ஒவ்வொரு வியாழக்கிழமை. தொடக்க தேதி: ஜனவரி 14
**2:00 p.m. - 6:30 p.m.**

**YMCA**
**101 YMCA Blvd, Markham ON L6G 0A1 (Kennedy & Hwy 407)**
ஒவ்வொரு புதன் & வெள்ளி. தொடக்க தேதி: ஜனவரி 30
**9:30 a.m. - 2:30 p.m.**

**Markham Chinese Presbyterian Church**
**2250 Denison St, Markham ON L3S 1E9 (McCowan & Denison)**
ஒவ்வொரு செவ்வாய் & புதன். தொடக்க திகதி: பிப்ரவரி 2
**9:30 a.m. - 2:30 p.m.**

உங்கள் சோதனை சந்திப்பை முன்பதிவு செய்யுங்கள்
**www.carefirstontario.ca**
**Walk-In** ஆனால் காத்திருப்பு நேரம் மாறுபடலாம்

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் **www.carefirstontario.ca** அல்லது அழைக்கவும் **416-646-5108**

**உங்களிடம் கொண்டு வரப்பட்டது: Carefirst Seniors and Community Services Association**
Carefirst Family Health Team
Health for All Family Health Team
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
YMCA of Greater Toronto

Updated on January 27, 2021

# கனடா உதயன் வெள்ளி விழா ஆண்டு 2021

உலகளாவிய மாணவர்களுக்கான இணையவழி ஊடான

# பேச்சுப் போட்டி

## நான் விரும்பும் அரசியல் தலைவர்


POWERED BY
VIBRANT HOSPITALITY GROUP
OVER 25 YEARS IN THE HOSPITALITY INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES

Shankar Nallathamby, CHA
Director
shankar@vhgcanada.com
www.vibranthospitalitygroup.com


இங்கு காணப்படும் தமிழ்த் தலைவர்களிலிருந்து தங்களுக்கு பிடித்தமான ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரைப் பற்றி **5 நிமிடங்களுக்கு** மேற்படாமல் பேச வேண்டும். போட்டி ZOOM செயலியூடாக **பெப்ரவரி 27, 28 தினங்களில்** நடைபெறும். கனடா, இந்தியா, அமெரிக்கா, மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நடுவர்கள் வெற்றியாளர்களை தேர்ந்தெடுப்பார்கள். இவர்களோடு கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் சேர்ந்து எடுக்கும் இறுதி முடிவிற்கு ஏற்பவே பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.



### நிபந்தனைகள்

1. உலகின் எப்பாகத்திலும் வாழும் 20 வயதிற்கு உட்பட்ட தமிழ் பேசும் மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம் (வயதை உறுதிப்படுத்தும் பத்திரம் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்).

2. இங்கு காணப்படும் தலைவர்களில் தாம் விரும்பும் ஒருவரைப் பற்றி மட்டும் ஐந்து நிமிடத்திற்கு மேற்படாமல் பேசவேண்டும்

3. போட்டிக்கான உரையை அவர்களாகவோ அன்றி மற்றவர்களின் உதவியுடனோ தயாரிக்கலாம்.

4. இறுதிப் போட்டிக்கு முன்பதாக தேவையேற்படின் முதற்சுற்றுப் ரோபட்டியில் பங்குபற்றவும் தயாராக இருக்க வேண்டும்.

5. போட்டி இடம்பெறும் இரண்டு நாட்களில் ஏதாவது ஒரு நாளில் போட்டியில் பங்கு பற்ற தயாராக இருக்க வேண்டும்.

6. பேச்சுப் போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் பின்வரும் விபரங்களை uthayannews@yahoo.com என்னும் மின்னஞ்சலுக்கோ அன்றி 1 (416) 732 1608 / 1 (416) 587 0552 என்னும் இலக்கத்தில் WhatsApp இற்கோ அனுப்பி வைக்க வேண்டும்.
மாணவரின் முழுப் பெயர், மாணவரின் வயது, கல்வி கற்கும் பாடசாலை அல்லது பல்கலைக் கழகம், தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம், தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் விலாசம்:-
(பெற்றோர் அல்லது பாதுகாவலர் விபரங்களும் இணைக்கப்படலாம்)

7. விபரங்கள் எமக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் பெப்ரவரி 12, 2021 வெள்ளிக்கிழமையாகும். அந்த திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. பரிசு பெறும் மாணவர்களுக்கு பணத்தொகையும் சான்றிதழ்களும் நேரிலோ, தபால் மூலமாகவோ அல்லது வங்கி கணக்கு ஊடாகவோ அனுப்பி வைக்கப்படும்.

### பரிசுகள்

| 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு | ஐந்து ஆறுதல் பரிசுகள் |
|---|---|---|---|
| 300 கனடிய டொலர்கள் | 200 கனடிய டொலர்கள் | 100 கனடிய டொலர்கள் | 50 கனடிய டொலர்கள் |

**ZOOM பெப்ரவரி 27, 2021 சனிக்கிழமை**

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30
ஐரோப்பா - மாலை 3:00 | அவுஸ்ரேலியா - அதிகாலை 1:00
**Meeting ID: 812 3636 6126 | Passcode: 962261**

**ZOOM பெப்ரவரி 28, 2021 ஞாயிற்றுக்கிழமை**

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30
ஐரோப்பா - மாலை 3:00 | அவுஸ்ரேலியா - அதிகாலை 1:00
**Meeting ID: 827 6566 9766 | Passcode: 892482**

### நடுவர்கள்:

பேராசிரியர் சங்கர நாராயணன் (தமிழ்நாடு) | வழக்கறிஞர் தி. இராமகிருஷ்ணன் (தமிழ்நாடு)
கலாநிதி நல்லையா குமரகுருபரன் (இலங்கை) | திரு. ஆர். சர்வேஸ்வரா (இலங்கை)
திரு. குயின்ரஸ் துரைசிங்கம் (கனடா) | திரு. நிமால் விநாயகமூர்த்தி (கனடா)
திரு. வீணைமைந்தன் சண்முகராஜா (மொன்றியல் - கனடா)

சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதி :
பெப்ரவரி 12, 2021
E-mail: uthayannews@yahoo.com
WhatsApp : +1 416 732 1608
+1 416 587 0552


Our Media Partners
அனலை எக்ஸ்பிரஸ் Analai Express HD TV
East FM 102.7 தமிழ்
உலகத்தமிழர்
ஈழநாடு
ஈழமுரசு
Roobam FM Toronto Digital Radio
Easy 24 News
Veet TV
yugam radio
MONதமிழ்



PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
www.santha.ca 416-200-5470
FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha Electical,Plumbing and drainage service Residential Commercial and industrial All Repairs & Renovations

Santha Plumbing and drainage service
Tel : 416 200 5470
info@santha.ca
www.santha.ca
Santha Panchalingam

CAMSONICS SECURITY SYSTEMS.INC
NO.1 NORTH AMERICAN PROFESSIONAL SECURITY COMPANY
WE ONLY DO PROFESSIONAL INSTALLATIONS AND CONCEAL WIRES IN THE ATTIC OR BEHIND THE WALLS

FULL HD
PROTECT YOUR HOME AND BUSINESS ANY TIME ANY WHERE IN THE WORLD
Rajeev Sebarasha :- 647.302. 5748
Web: www.camsonics.com E-Mail: camsonics@gmail.com

FRUITS HABY
மொன்றியல் மாநகரில் பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு புகழ்பெற்ற தமிழர் பலசரக்கு மாளிகை
5925 Victoria Ave, Montreal, QC H3W 2R9

HOMELIFE TODAY REALTY LTD., BROKERAGE*

For all your Real Estate needs...
Buyers and Sellers - I will pay your Lawyer Fees and Moving Charges!"
VALLIKKANNAN MARUTHAPPAN Sales Representative
Direct: 416-880-6051 Bus: 416-298-3200
www.mvkhome.ca

வீடு விற்க! வாங்க
Award winning Agents will give you Professional, Reliable and Friendly Services
We can arrange Mortgage, Second Mortgage and Refinance.

TEAM ROYALAN
" Our clients are our value"
Ragu Thillainathan 416-629-5800
Kailain Thillainathan 647-668-8276
kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com

வீடு வாங்க விற்க
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
RE/MAX ACE REALTY INC. BROKERAGE

Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

# திருக்கேதீஸ்வர சிவராத்திரி விழாவிற்கு வெளி மாவட்டத்திலிருந்து வருகை தருகின்றவர்களுக்கு தடை

## கொரோனா தொற்றை கருத்தில் கொண்டு தீர்மானம்



மன்னார் திருக்கேதீஸ்வர மஹா சிவராத்திரி விழாவின் போது கொரோனா தொற்றை கருத்தில் கொண்டு வெளி மாவட்டத்தில் இருந்து வருகை தருகின்றவர்களை தவிர்த்து மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்களின் பங்களிப்புடன் மஹா சிவராத்திரி விழாவை கொண்டாட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

- மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று (15) திங்கட்கிழமை மாலை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தலைமையில் மன்னார் திருக்கேதீஸ்வர மஹா சிவராத்திரி விழா தொடர்பாக விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.

- இதன் போது பல்வேறு விடையங்கள் குறித்து ஆராயப்பட்டது.

எதிர் வரும் மார்ச் மாதம் 11 ஆம் திகதி இடம் பெற உள்ள மன்னார் திருக்கேதீஸ்வர மஹா சிவராத்திரி விழாவினை சுகாதார முறையினை கடைப்பிடித்து எவ்வாறு சிறப்பாக நமத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது. இதன் போது பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.



வெளி மாவட்டத்தில் இருந்து வருகை தருகின்றவர்களை தவிர்த்து மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்களின் பங்களிப்புடன் மஹா சிவராத்திரி விழாவை கொண்டாட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

- குறிப்பாக கொரோனா தொற்றில் இருந்து மக்களை பாதுகாத்துக் கொள்ளும் வகையில் ஆலைய பகுதிகளில் மக்கள் நடந்து கொள்ள வேண்டிய அறிவுறுத்தல்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.



- குறிப்பாக வெளி மாவட்டத்தில் இருந்து இம்முறை வருகை தர உள்ள மக்கள் தமது மாவட்டங்களிலே சிவராத்திரி நிகழ்வை அனுஸ்ரிக்குமாறு கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

- கோரோனா தொற்றின் பரவலை தடுக்கும் வகையில் திருக்கேதீஸ்வர மஹா சிவராத்திரி விழாவின் போது பாலாவி தீர்த்தக்காவடி நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே திருக்கேதீஸ்வரத்திற்கு வருகின்றவர்கள் சுகாதார நடை முறைகளை உரிய வகையில் பின் பற்றிக்கொள்ள வேண்டும்.என தீர்மானிக்கப்பட்டது. குறித்த கலந்துரையாடலின் போது திணைக்கள தலைவர்கள், திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குருக்கள், ஆலய நிர்வாக சபையினர், பொலிஸார், சுகாதார துறையினர் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்** (16-02-2021)

# இலங்கை அரசியலில் தலையிடும் நோக்கத்துடன் பாரதிய ஜனதா கட்சி ஆரம்பிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது

அரசியல் நோக்கங்களுடன் இலங்கையில் பாரதிய ஜனதா கட்சியின் கிளையை ஸ்தாபிக்க முயற்சிக்கப்படுமாயின் அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையென சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்தார்.

பாரதிய ஜனதா கட்சியின் அறிவிப்பு தொடர்பில் வினவிய போது அவர் மேலும் கூறியதாவது, இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதா கட்சி அரசியல் நோக்கங்களுடன் இலங்கையில் அதன் கிளையொன்றை ஸ்தாபிக்க முடியாது. அதற்கு நாம் முழுமையான எதிர்ப்பை வெளியிடும் அதேவேளை, அத்தகைய செயற்பாடு இடம்பெறும் பட்சத்தில் நாட்டின் சுயாதீனத்தன்மையும் இறையாண்மையும் வெகுவாகப் பாதிப்படையும்.

எனவே இந்நாட்டின் பௌத்த பிக்குகள் என்ற அடிப்படையில் அதனை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம்.

இலங்கையில் சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் முதலீடுகளைச் செய்கின்றன. அதேபோன்று அபிவிருத்தி செயற்திட்டங்களில் தமது பங்களிப்பை வழங்குகின்றன. எனினும் அந்நாட்டிலுள்ள கட்சியொன்றை இங்கு ஸ்தாபிப்பதற்கு அவை முற்படவில்லை. அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளுமாயின் அதனை எம்மால் அனுமதிக்கவும் முடியாது. அதேபோன்று இந்தியாவும் எமது நாட்டில் முதலீடு மற்றும் வர்த்தகம் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடமுடியும்.

எனினும் உள்நாட்டு அரசியலில் தலையீடு செய்யும் நோக்கத்துடன் அரசியல் கட்சியொன்றை ஆரம்பிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று குறிப்பிட்டார்.



# சீனாவைக் காட்டி சுண்டங்காய் நாடான சிறிலங்கா இந்தியாவுக்குத் தண்ணி காட்டுகிறது!

**கனடா – நக்கீரன்**

ஒரு உறைக்குள் இரண்டு வாள்கள் இருக்க முடியாது. ஒரு உறைக்குள் ஒரு வாள்தான் இருக்க முடியும். ஆனால் சிறிலங்காவின் அரசியல் நிலைப்பாட்டைப் பார்க்கும் போது ஒரு உறைக்குள் இரண்டு வாள்கள் இருப்பது தெரிகிறது. ஒன்று சனாதிபதி கோட்டாபய இராசபக்ச. இரண்டு பிரதமர் மகிந்த இராசபக்ச.

கொழும்புத் துறைமுகத்தில் 3 முக்கிய முனையங்கள் இருக்கின்றன. இதில் தென்னாசியாவின் கேட்வே



முனையம் **(South Asian Gateway Container Terminal)** சீனாவுக்கு கொடுக்கப்பட்டு விட்டது. சீனாவுக்கு 80 விழுக்காடு உரிமம், சிறிலங்கா துறைமுக அபிவிருத்தி அதிகார சபைக்கு 20 விழுக்காடு உரிமம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் கடந்த மே 2019 ஆம் ஆண்டு கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையத்தை **(ECT)** மேம்படுத்த இந்தியா, ஜப்பான் மற்றும் சிறிலங்கா துறைமுக அதிகார சபை ஒன்றிணைந்து ஒரு முத்தரப்பு புரிந்துணர்வு உடன்பாட்டை **(Memorandum of Understanding)** எழுதியிருந்தன. இது முன்னைய சிறிசேனா - விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்க காலத்தில் எழுதப்பட்டது. இந்தப் புரிந்துணர்வு உடன்பாட்டின் கீழ் 51 விழுக்காடு உரிமம் சிறிலங்கா துறைமுக அதிகார சபைக்கும் எஞ்சிய 49 விழுக்காடு உரிமம் இந்தியா - ஜப்பான் இருநாடுகளுக்கும் கொடுக்கப்பட்டது. இந்தியத் தரப்பிலிருந்து அதானி நிறுவனம் இந்தத் திட்டத்தின் அபிவிருத்தியை மேற்கொள்ள இருந்தது.

இந்தப் புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு சனாதிபதி கோட்டாபய தனது ஆதரவைத் தெரிவித்திருந்தார். அதற்கான முதல் காரணம் சிறிலங்கா அரசு எற்கனவே எழுதப்பட்ட புரிந்துணர்வு உடன்பாடு ஒரு சர்வதேச உடன்பாடு என்பதால் அதனை சிறிலங்கா கவுரவிக்க வேண்டும் என்பதாகும். இரண்டாவது காரணம் இது பூகோள அரசியல் தொடர்பானது. அதாவது அண்டைநாடான இந்தியா - சிறிலங்கா உறவு தொடர்பானது என்பதாகும்.

ஆனால் கோட்டாபய இராசபக்ச அவர்கள் தெரிவித்த கருத்துக்குப் பல திசைகளில் இருந்தும் கடுமையான எதிர்ப்பு அலைகள் எழுந்தன. முக்கியமாக சிறிலங்கா துறைமுக அதிகார சபையின் கீழ் செயற்படுகிற 23 தொழிற்சங்கங்கள், சிறிலங்கா பொதுசன பெரமுன ஆட்சியில் இடம்பெற்றுள்ள 10 பங்காளிக் கட்சிகள் மற்றும் பவுத்த தேரர்கள் கொழும்பு துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையத்தை இந்தியாவுக்குக் கொடுப்பதை தீவிரமாக எதிர்த்தன. நாட்டிற்குள்ள எவ்வாறான அரசியல் கருத்து முரண்பாடுகள் காணப்பட்டாலும், நாட்டிற்குரிய சொத்துக்களை வெளிநாட்டவருக்கு தாரைவார்த்துக் கொடுக் கூடாது, நாடு அந்தச் சொத்துக்களால் உச்ச பயனை அடைய வேண்டும் என்பது எதிர்ப்பாளர்களின் கோரிக்கையாக இருந்தது. துறைமுகத் தொழிற்சங்கங்கள் சட்டப்படி வேலை செய்தல் என்ற தொழிற்சங்க நடவடிக்கையில் குதித்தன. அதற்கு முன்னோடியாக சனவரி 29, 2021 அன்று துறைமுக வளாகத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று ஊழியர்களால் நடத்தப்பட்டது. எதிர்ப்பு நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கும் வகையில் காலி துறைமுக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

ஆனால் இதே தொழிற்சங்கங்கள், பவுத்த தேரர்கள், பொதுசன அரசில் இடம்பெற்றுள்ள 10



பங்காளிக் கட்சிகள் கொழும்பு துறைமுகத்தின் முக்கிய 3 முனையங்களில் அதிமுக்கிய தென்னாசியாவின் கேட்வே முனையத்தின் (எஸ்.ஏ.ஜீ.ரி எ) அபிவிருத்தி சீனாவுக்கு கொடுக்கப்பட்ட போது வாய்மூடி மவுனமாக இருந்து விட்டன. தெற்காசியாவில் தற்போது காணப்படும் ஒரேயொரு ஆழமான முனையம் தென்னாசியாவின் கேட்வே முனையம் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னாசியாவின் கேட்வே முனையத்தின் 85 விழுக்காடு உரிமம் சீனாவுக்கும் 15 விழுக்காடு



உரிமம் கொழும்பு துறைமுக அதிகார சபைக்கும் பங்கிடப்பட்டது.

இதனால் இலங்கையிலுள்ள கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை **(ECT)** மேம்படுத்துவதற்கு இலங்கை, ஜப்பான், இந்தியா ஆகிய மூன்று நாடுகள் எழுதிக்கொண்ட முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் மூன்று நாடுகளும் நடந்து கொள்ள வேண்டும் என்று இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. சனாதிபதி கோட்டாபய இராசபக்ச கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுக்கு ஆதரவாக இருந்தாலும் நாட்டின் பிரதமர் மகிந்த இராசபக்ச அதனை முழுவீச்சில் எதிர்த்தார். இது பற்றி அவர் நாடாளுமன்றத்தில் பேசும் போது கொழும்புத்துறை முகத்தின் கிழக்கு முனையம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிநாடுகளுக்கு விற்கவோ அல்லது குத்தகைக்கோ வழங்கப்படாது என்றார்.

இவ்வாறான அறிவிப்பு விடுக்கப்பட்ட பின்னணியிலும் துறை தொழிற்சங்கங்கள் தங்களது போராட்டத்தைக் கைவிடவில்லை.

இவ்வாறான நிலையில், பெப்ரவரி 1 ஆம் தேதி மாலை கூடிய அமைச்சரவை கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் நடவடிக்கைகளை 100 விழுக்காடு இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழ் கொண்டு வருவதற்கு ஒப்புதல் வழங்கியது.

ஆனால் இந்த முடிவை உத்தியோக முறைப்படி இந்தியாவுக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எது எப்படியானாலும் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் அபிவிருத்தி இந்தியாவுக்குக்

(தொடர்ச்சி 19ம் பக்கம்)



*- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்*

# #34 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

இலங்கை-இந்திய கூட்டுத் தயாரிப்பான "பைலட் பிரேம்நாத்" திரைப்பட காட்சிகள் கொழும்பில் படமாக்கப்பட்ட போது இலங்கைக்கு சிவாஜி அவர்கள் வருகை தந்திருந்தார். அச்சமயம் நடிகர்திலகத்தின் மிக நெருங்கிய நண்பர்களில் ஒருவரும் வானொலி கலைஞருமாகிய திரு பி எச் அப்துல் ஹமீது இலங்கை வானொலிக்காக சிவாஜி அவர்களுடன் ஒரு நேர்காணலை தயாரித்திருந்தார்.

சிவாஜி அவர்களிடம் பல கேள்விகளைக் கேட்டு விட்டு, இறுதியாக ஒரு கேள்வியைக் கேட்டார். ”திரு சிவாஜி கணேசன் அவர்களே இது ஒரு சம்பிரதாய பூர்வமான கேள்வி. வழக்கமாக எல்லோரும் கேட்பது தான்! ஆனால் ரசிகர்களுக்காக சற்று வித்தியாசமாக உங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்...!

சிவாஜி அவர்களின் பதில் இப்படியாகவிருந்தது, ”என்னால் மறக்க முடியாத விடயம்... ஒரேயொரு விடயம்.. உங்களுக்குத் தெரியும், நான். பெரியார் ஈ வே ராமசாமி நாயக்கரின் பள்ளியில் பயின்ற மாணவன். அதன்பின் அண்ணாவுடன் அரசியலில் கலந்து பணிபுரிந்தேன். பின் அண்ணாவை விட்டுப்பிரிந்து பெருந்தலைவர் காமராஜருடன் இணைந்து தேசியப் பணியில் ஈடுபட்டவன். இந்நேரத்தில் என்னுடைய 125வது பட விழாவிற்கு (உயர்ந்த மனிதன்) அறிஞர் அண்ணா அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். அன்று அவர் பேசியது தான் அவருடைய கடைசி பேச்சு. அதன்பின் அவர் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். ஆனால் அவர் பேசியது இறுதியாக என்னுடைய படவிழாவில் தான்!

அன்று அவர் பேசியது இன்று நினைவுக்கு வருகிறது. ”நீ எங்கிருந்தாலும் வாழ்க! மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகையும் மணக்கும், அப்படியென்று அரசியலைக் குறிப்பிட்டார். பிறகு அவருடைய நண்பர்களுக்குச் சொன்னார் அவர்கள் முன்னேயே! சில பேருடைய உதவியால் தான் சிவாஜி அவர்கள் சினிமாவிற்குள் வந்தாரென்று எல்லோரும் கூறுகிறார்கள். பல பேருடைய உதவி இல்லாவிட்டாலும் சில நாள் கழித்து வந்திருப்பார். அவருடைய முன்னேற்றத்தை யாரும் தடுக்க முடியாது என்று அவர்களைச் சார்ந்தவர்களுக்கு புரியும்படியாக மிக அழகாக சொன்னார்கள். அன்று அவர் கூறிய இந்த பாராட்டுத்தான் என்றும் என் வாழ்வில் மறக்க முடியாதது..., மனம் திறந்து பாராட்டுவதில் அண்ணாவிற்கு நிகர் அண்ணாதான்! அப்படிப்பட்ட அண்ணாவை தோழமையாகக் கிடைத்தது சிவாஜி செய்த பெரும் பேறு! சிவாஜிகணேசனது வளர்ச்சியில் மிகுந்த கவனமும், அக்கறையும் கொண்டவர் அண்ணா அவர்களாகும்!



”கொட்டிய முரசும் கூவிய படையும் எட்டிய பரியும் எழுந்து நடந்து கோட்டை மதிலை சுற்றி வளைத்து வேட்டையாடி வெற்றி படைத்து.. வாழ்க சிவாஜி! வாழ்கவென்று வாழ்த்துரை கூறி வழங்கியபோது... ஓஹோ... என்று எதிரொலித்ததே இந்த கோட்டைதான்...", என்று அண்ணா அவர்கள் தீட்டிய வீர வசனங்களைப் பேசி "சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்", நாடகத்தின் மூலம் கணேசனை சிவாஜிகணேசன் ஆக ஆக்கியது அண்ணாவின் உயிர் துடிப்பான வசனங்களேயென்று முன்பு குறிப்பிட்டிருந்தேன். இந்நாடகத்திற்கு பிறகு சிவாஜிக்கும் அண்ணாவுக்கும் நெருக்கம் அதிகமாயிற்று! அண்ணாவின் பேச்சாற்றலாலும், எழுத்தாற்றலும், பண்பும் சிவாஜியைப் பெரிதும் கவர்ந்தது. அண்ணா அவர்களிடம் சிவாஜி குருகுலவாசம் செய்ய ஆரம்பித்தார்..அண்ணாவுடன் கூட்டங்களுக்குச் செல்வது, மேடையில் தானும் பேசுவது என்று அண்ணாவின் மாணவரானார்!
”அறிஞர் அண்ணா கட்டளையிட்டால்.. கலைஞர் கருணாநிதி அவர்கள் கட்டளையிட்டால்... எனக்குள்ள சினிமா படங்களை எல்லாம் கிழித்துப் போட்டுவிட்டு கழகம் நடத்த... இருக்கின்ற போராட்டங்களில் குதிக்க நானும் தயார்..", என்று முழங்கிய சிவாஜியினது உணர்வை என்றும் மதிப்பவர் அண்ணா அவர்கள்.

அரசியல் கட்சியானாலும் சரி, வேறெந்த பொது அமைப்புகள் ஆனாலும் சரி, உட்பூசல் பொறாமை உணர்வு இல்லாத மனிதர்கள் அங்கம் வகிப்பது என்பது இந்நாளில் கூட இல்லாத ஒன்றாகும். தமிழனுடைய வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாகும். யார் யார் எப்படிப்பட்ட குணாதிசயம் கொண்டவர்கள் என்பதை தெளிவாக தெரிந்த படியால் தான் அண்ணாவால் திமுகவை வளர்த்தெடுக்க முடிந்தது.

அண்ணாவுக்கு சிவாஜியிடம் இருந்த பாசத்தை காணப் பொறுக்காத ஒரு முக்கிய கழக உறுப்பினர் சிவாஜி பற்றி அண்ணாவிடம் தூபம் போட்ட சம்பவத்தை "நெஞ்சுக்கு நீதி" நூலில் கலைஞர் அவர்கள் மிகுந்த வேதனையுடன் எழுதியுள்ளார். ஒருமுறை "சந்திரமோகன்" நாடகம் சென்னை தியாகராஜர் கல்லூரி அரங்கில் நடைபெறுவதாகவிருந்தது. நீண்ட இடைவெளிக்குப்பிறகு சிவாஜிகணேசன் அண்ணாவுடன் நடிப்பதற்காக ஏற்பாடாயிற்று.

ஒருநாள் அண்ணா, கலைஞர், சம்பத், சிவாஜி ஆகிய நால்வரும் சென்னையிலிருந்த சைனீஸ் ரெஸ்டாரண்டுக்கு மதிய உணவுக்காக சென்றிருக்கிறார்கள். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது சிவாஜி அண்ணாவைப் பார்த்து, ”அண்ணா இப்போதெல்லாம் வயது ஆக ஆக நாடக வசனங்களை மனப்பாடம் செய்வது ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. சிவாஜி பாத்திர வசனங்களை இரவு பகலாக உருப்போடுகிறேன்", என்று கூறினார். அண்ணாவும் வேடிக்கையாக ஏதோ கூறி சாப்பிட்டு முடித்துவிட்டு சிவாஜி அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பி வைத்தார். இப்போது அண்ணா, கலைஞர், சம்பத் மூவரும் மட்டும் காரில் போய்க் கொண்டிருக்கிறார்கள். அப்போது சிவாஜியைப் பிடிக்காத சம்பத், அண்ணாவிடம் ”இந்த கணேசனுக்கு அதற்குள் எவ்வளவு ஆணவம் வந்துவிட்டது. உங்களிடமே சொல்கிறான் என்று அன்னாவின் மனதில் விஷ விதையைத் தூவினார்.

அப்போது அண்ணா அதை மறுத்து... ”இல்லை சம்பத்.. வயது ஆக ஆக மனப்பாடம் செய்வது க்'டமாக இருக்கிறது என்றுதானே கணேசன் சொன்னார். அதை தவறாக எடுத்துக்கொள்ள கூடாது என பதிலுரைத்தார். இச்சம்பவத்தை மனம் திறந்து கலைஞர் அவர்கள் எழுதியுள்ளார். இது தான் அண்ணா!

இப்படித் தவறாக புறம் கூறுபவர்களை இன்றும் நான் நேரில் பார்க்கிறேன். எனக்கே இப்படிப்பட்ட அனுபவங்கள் நேர்ந்து கொண்டுதான் இருக்கின்றன! பெரியவர்கள் வாழ்வியல் அறிவுரைகள் எங்களை வழி நடத்தட்டும்!
மேற்கூறியவாறு அண்ணாவிடமிருந்து சிவாஜியை பிரிக்க முடியாதென்று அறிந்து சந்தர்ப்பம் வந்ததும் கழகத்திலிருந்து சிவாஜியை வெளியேற வைத்தது பற்றி முன்னமேயே எழுதியிருந்தேன். கழகத்தை விட்டு பிரிந்தாலும் நேரம் கிடைக்கும் போது அண்ணா அவர்கள் சிவாஜி நடித்த படங்களைப் பார்த்து மன மகிழ்ச்சி கொள்வார். ஒரு சமயம் அண்ணா அவர்கள் கதாசிரியர் பாலமுருகனோடு இரவுக் காட்சியில் "ராணி லலிதாங்கி", படம் பார்க்கத் தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு தியேட்டருக்கு சென்றார்!

நடிகர் திலகமும் - பானுமதியும் நடித்த படம் சிவாஜி அவர்கள் ஒரு காட்சியில் மிக அருமையாக நடனம் ஆடுவார். அதைப் பார்த்து மெய்மறந்து ரசித்த அண்ணா...! நடிகன் என்றால் அது சிவாஜி தான். இந்த மாதிரி நடனமாட எவரால் முடியும் என வீடு திரும்பும்வரை சொல்லிச்சொல்லி மகிழ்ந்தாராம்!
இன்னொரு சமயம் கழகத் தோழர் ஒருவருடன் ”பாலும் பழமும்” படம் பார்க்க அண்ணா போயிருந்தார். சிவாஜி சரோஜாதேவி நடித்த அற்புதமான குடும்பப்படம் அது! "பாலும் பழமும்" படத்தில் சிவாஜி நடித்த காலத்தில் அவருடைய வயிறு சற்று பருத்திருந்தது. கதாநாயகனுக்கு தொந்தி இருப்பது அழகல்ல என்பது கூடவந்தவரின் வாதம். உடனே அண்ணா, ”நீ ஏன் தொந்தியை பார்க்கிறாய், அவருடைய பாத்திரத்திற்குரிய நடிப்பை பார். இப்படி நடிக்க இன்று யார் இருக்கிறார்கள்" என்று பதிலடி கொடுத்தார் அண்ணா!



அண்ணாவின் முன்னால் சிவாஜியை யார் இகழ்ந்தாலும் அவரால் பொறுத்துக்கொள்ள முடியாது. சிவாஜியிடத்து அவ்வளவு பேரன்பு கொண்டவர் அண்ணா! அப்படி ஒரு பாசத்தை சிவாஜி இடத்துக் கொண்டுள்ள ரசிகன் என்ற படியால் தான் என்னால் இத்தொடரை எழுத முடிகிறது் பேச முடிகிறது.

”நீ உன்னுடைய படிப்பைத்தா.. நான் என்னுடைய நடிப்பை உனக்குத் தருகிறேன்..", என்று சிவாஜி யாரிடம் கூறினார்?

*காத்திருங்கள்.. காட்சிகள் விரியும்..*
*வீணை மைந்தன்*

# சீனாவைக் காட்டி சுண்டங்காய் நாடான சிறிலங்கா இந்தியாவுக்குத் தண்ணி காட்டுகிறது!

*(18ம் பக்கத் தொடர்ச்சி)*

கொடுக்கப்பட மாட்டாது என்பது உறுதியாகியுள்ளது. அப்படிக் கொடுப்பதை சிங்கள - பவுத்த தீவிரவாத சக்திகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டா என்பதே யதார்த்தமாகும்.
இப்போது மட்டுமல்ல இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் சுமுகமான உறவு இருந்ததில்லை. தமிழீழப் போராளிகளுக்கு இந்தியா ஆயுதப் பயிற்சி கொடுத்தது, 1987 இல் எழுதப்பட்ட இந்திய - இலங்கை உடன்பாடு, முக்கியமாக தமிழர் சார்பு இந்திய வெளியுறவுக் கொள்கை போன்றவை காரணங்களாகும். ஆனால் இராசிவ் காந்தி கொலைக்குப் பின்னர் இந்தியா வி. புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொண்டது. போரில் சிறிலங்கா அரசுக்கு புலனாய்வு, உதிரிப்பாகங்கள், போர் உத்திகள் போன்றவற்றை வழங்கியிருந்தது.

இப்போது இந்தியாவுக்குச் சவால் விடுவது போல சீனாவின் பங்களிப்புடன் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சார உற்பத்தி திட்டம் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் மின்சக்தி அமைச்சருடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்து மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும இந்தியாவின் நன்கொடையுடன் இந்தக் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சார உற்பத்தி திட்டம் இந்தியாவுக்கு வழங்கப்படும் என்றும் அதற்கான முழுச் செலவான அ.டொலர் 12 மில்லியன் நிதியை இலங்கைக்கு இந்தியா நன்கொடையாக வழங்குவதாகவும் அறிவித்தார். அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப் போவதாகவும் அறிவித்தார். ஆனால் பிந்திய செய்திகள் இந்தத் திட்டத்தை சீனாவுக்குக் கொடுத்தது கொடுத்ததுதான் அதில் மாற்றம் இல்லை எனத் தெரிவிக்கின்றன. அனலைதீவு இந்தியாவின் தென்முனையிலிருந்து 49 மைல் தூரத்தில் உள்ள தீவாகும்.

இத்தகைய அவமதிப்புக்களை இந்தியா எவ்வளவு காலத்துக்குப் பொறுத்துக் கொண்டு போகும் என்பது தெரியவில்லை. இந்திய வெளியுறவு அமைச்சர், பாதுகாப்பு ஆலோசகர், இலங்கைக்கான இந்திய தூதுவர் போன்றோர் சிறிலங்கா அரசோடு நாளும் பொழுதும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவற்றைச் சிறிலங்காவின் அதிகார வர்க்கம் காதில் போடுவதாக இல்லை. நாங்கள் பேசுகிறோம் அவர்கள் செவிகொடுப்பதாக இல்லை **(We are talking but they are listening)** என்ற நிலைப்பாடே தொடர்கிறது.
இந்தியாவிடம் இருந்து இலங்கை மத்திய வங்கி அ.டொலர் 400 மில்லியனை கடனாக சென்ற ஆண்டு பெற்றிருந்தது. அந்தக் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு சிறிலங்கா அரசு அவகாசம் கேட்கும் என்றுதான் பலர் எதிர்பார்த்தார்கள். ஆனால் சொன்ன தவணைக்கு இலங்கை மத்திய வங்கி வாங்கிய கடனை அடைத்துவிட்டது. எப்படி? சிறிலங்கா சீனாவிடம் இருந்து அ.டொலர் 1.5 பில்லியனை கடனாகப் பெற்று அந்தக் கடனில் இந்திய மத்திய வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனை அடைத்துள்ளது. அதாவது கடன் வாங்கிக் கடனை அடைத்துள்ளது.

இப்படிச் சீனா கடன்களை கொடுத்து, அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றி சிறிலங்கா அரசின் மீது செல்வாக்குச் செலுத்தி வருகிறது. கடந்த சனவரி மாதத்தில் இந்தியா 5 இலட்சம் கொவிசீல்ட் தடுப்பூசிகளை அன்பளிப்பாகக் கொடுத்தால் சீனா அதே தொகை தடுப்பூசிகளை சிறிலங்காவுக்குக் கொடுக்கிறது. இப்படிச் சீனாவைக் காட்டி சுண்டங்காய் நாடான சிறிலங்கா இந்தியாவுக்குத் தண்ணி காட்டுகிறது. "சீனா இருக்கப் பயமேன்" என நினைக்கிறது. இந்திய - சீனா இரண்டுக்கும் இடையில் நிலவும் பகைமையைத் தனக்கு சாதகமாக சிறிலங்கா பயன்படுத்துகிறது. இந்த இராசதந்திரம் எவ்வளவு காலம் நீடிக்கப் போகிறது, இந்தியாவின் எதிர்வினை என்ன என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# இவ்வார ராசிபலன்

**19-02-2021 வெள்ளி தொடக்கம் 25-02-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** உபயோகமும் உன்னதமும் நிறைந்த நல்லவாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராஜவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** ஆனந்தமும், ஆதாயமும் அமைதியும் மிகுதியாகக் கூடிய அற்புதமான வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நந்தாதேவி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மிதுனம்:** தேவைகள் பூர்த்தியாகி ஆசைகள் நிறைவேறும் அற்புத வாரம். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: புட்டுச் சொக்கநாதர், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** பழக்கமான நண்பர்களால் கலக்கமான சூழ்நிலைகள் விலகும் வாரம். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வெக்காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**சிம்மம்:** இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாய் அமையக் கூடிய நல்ல வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: திருமலைராயர், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**கன்னி:** பணிவான பேச்சுக்களால் பணவரவை சேர்த்துக் கொள்ளக்கூடிய வாரம். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். மேன்மையான நாள். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஆதிவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**துலாம்:** சொல்வாக்கு மூலமாகவே செல்வாக்கு உயரக்கூடிய வாரம். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். பணியில் உயர்வு கிட்டும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். விவேகமான வாரம். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹரிஹராசுதன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**விருச்சிகம்:** உழைப்பால் மதிப்பும் உங்களால் சிறப்பும் சேரக்கூடிய பொறுப்பான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சக்திபாலகன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M





**தனுசு:** இதயத்தில் உற்சாகமும், இல்லத்தில் சந்தோஷமும் இனிமையாய் மலரக்கூடிய அற்புதமான வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சந்தான லட்சுமிகணபதி, அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
‘ராஜயோகம்’
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**மகரம்:** கைமேல் காசும், கௌரவ வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: மணக்குழ பகவதிஅம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** சந்தோஷமான நிகழ்வும் சாதகமான சூழ்நிலையும் கிடைக்ககூடிய வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தாய் முகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மீனம்:** பூமியால் லாபமும் புத்திரயோகமும் கிடைக்கக்கூடிய வாரம். மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவினரால் பாதகம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K

## வீணாவின் கவிக்கணை

விழுந்து விழுந்து எழுந்தவனுக்கு
அடுத்த அடியின் ஆழம் புரியும்,
விழுந்தால் எழ வேண்டுமென்று
மனம் தானாகவே உணர்த்தும்,
ஆழம் அறிந்து காலை வைப்பவன்
கடலையும் கடந்திடுவான்,
மலையையும் குடைந்திடுவான்,
அடுத்தவர் கூறியும் விளங்காதது,
தானாய் உணர்ந்து கற்றுக்கொள்ளும்
வாழ்க்கைப் பாடமிது!



தற்பொழுது நடைபெறுகிறது
Since 1989
சங்கர் அன் கோ
மாபெரும் மலிவு விற்பனை!
இறக்குமதியாளர்கள், மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்
அனைத்து வீட்டு உபயோகப் பொருட்களின் புதிய வரவுகள் !
இல்லத்தரசிகளின் சமையற் கலைக்கான தேர்வுகளுக்கு தன்னிகரற்ற இடம் !
SOWBAGHYA
Preethi
ULTRA
சுவாமிப் படங்கள்
உணவுப் பொருட்கள்
பசுமையான மரக்கறி
மற்றும் பழவகைகள்
பூசைப் பொருட்கள்
ஆலயத்திற்குத் தேவையான
வழிபாட்டுப் பொருட்கள்
மங்கல நிகழ்வுகளான
திருமணம், குடிமனைபுகுதல்
ஆயுர்வேத மருந்துகள்
விசேட கூந்தல் தைலங்கள்
அனைத்து மூலிகைப் பொருட்கள்....
ASIA Kitchen Machines
PREETHI Premier Mixies
ULTRA Wet Grinder
SOWBAGHYA Wet Grinder
PREMIER Wet Grinder
மண் சட்டிகள்
மட் பானைகள்
மண் அடுப்புகள்
மண் கூசாக்கள்
மின் தேங்காய் துருவி
மண்வெட்டிகள்
அப்பச்சட்டி
குளிப்பணியாரச்சட்டி
சில்வர் பானைகள்
எவர் சில்வர் பாத்திரங்கள்
எவர்சில்வர் பேணிகள்
சாப்பாட்டுத் தட்டுகள்
அலுமினி/மண் பானைகள்
அடுக்குச் சட்டிகள்
பிட்டுக் குடம், பானைகள்
தோசைக் கல்லு, உரல்
தேங்காய் துருவிகள்
கத்தி, கரண்டிகள்
இன்னும் பல!
தைப்பொங்கல் புத்தாண்டு.
மற்றும் ஆலய உற்சவங்கள். புதிய இல்லங்களின்
கிரகப் பிரவேச வைபவங்கள். திருமணங்கள் மற்றும்
விசேட வைபவங்கள் ஆகியவற்றுக்கு தேவையான அனைத்துப்
பொருட்களும் சங்கர் அன் கோவில் தவறாமல் கிடைக்கும்.
தற்போது தமிழர் புத்தாண்டை முன்னிட்டு. இல்லங்களுக்குத் தேவையான.
குறிப்பாக சமையல் அறைக்குத் தேவையான Rice Cookers. Grinding
Machines, Rotty Makers and Sumeet, Preeti, Premier Chefmaster
Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து விமானங்களின்
மூலம் இறக்குமதி செய்யப்பெற்றுள்ளன.
அனைத்து விதமான
பசுமைமிகு பூக்கள்
மல்லிகை மொட்டு
கனகாம்பரம்
தாமரைப் பூ
சாமந்தி, அலரி
ரோஜாப்பூக்கள்
அல்லிப் பூ
கார்னேஷன் பூ
வாழை இலை
மாவிலை, அறுகு
வில்வம், துளசி, அரசிலை
இன்றே தொலைபேசியில் அழைத்து உங்கள்
வருகையை உறுதி செய்த பின்னர்
முகக் கவசம் அணிந்து செல்லுங்கள்...
தற்போது காலை 8.30 மணி
தொடக்கம் இரவு 9.00 மணி
வரை திறந்திருக்கின்றது
பூச்சரம் எல்லா நாட்களும் கிடைக்கும்!
பிற்புறத்தில் தாராளமான வாகனத் தரிப்பிடமுண்டு
SHANKAR & Co.
2425 Eglinton Avenue East, Unit 6, Scarborough, ON M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916
(Kennedy & Eglinton)
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்!
OPEN
7 Days a week

அறிமுகம்...

# கல்கியின் பொன்னியின் செல்வன்


*சென்ற வார தொடர்ச்சி...*

தஞ்சை மாளிகைக்குள் உட்புகும் வழியில் கண்ட பழுவூர் மகாராணி நந்தினியிடம் தந்திரமாக முத்திரை மோதிரத்தைப் பெற்றிருந்தான். அதை அடையாளமாகக் கொண்டு தஞ்சைக் கோட்டைக்குள் உட்பிரவேசித்தான். மன்னன் சுந்தர சோழரைக் கண்டு ஓலையைக் கொடுத்துவிட்டு சோழ நாட்டிற்கு வரப்போகும் ஆபத்துக்களையும் அறியப்படுத்தினான். அப்பொழுது அவன் துரதிக்ஷ்டம் இந்தச் செய்தி கோட்டைக் காவலன் சின்னப்பழு வேட்டரையர் காதில் புகுந்து கொள்ள அவன் வந்தியத்தேவனைக் கண்காணிக்கத் தொடங்கினான். இதனை அறிந்த வந்தியத்தேவன் அங்கிருந்து தப்பிச் சென்றான். தப்பிச் செல்லும் வேளையில் அவன் ஓர் ஒற்றன் என்றும், தன் நண்பன் கந்தமாறனின் முதுகில் குத்திவிட்டுச் சென்ற பழிக்கும் ஆளாகினான். இத்தனையையும் சுமந்தபடி இளைய பிராட்டி குந்தவை தேவியைக் காண பழையாற்றைக்குச் சென்றான். அங்கு அழகு கொளிக்கும் குந்தவையைக் கண்டு ஓலையைக் கொடுத்தான். அவளிடமும் சோழ தேசத்திற்கு வர இருக்கும் ஆபத்துக்களையும், சூழ்ச்சிகளையும் விளக்கினான். தன் கடமை நிறைவேறியது என்ற பெருமிதத்துடனும், தன் கக்ஷ்டங்கள் ஒழிந்தது என்ற பெருமூச்சுடனும் விடைபெற எண்ணினான். ஆனால் குந்தவை அவள் அண்ணனான ஆதித்த கரிகாலனின் நம்பிக்கையைப் பெற்ற அவன் நண்பனிடம் மேலும் நம்பிக்கை கொண்டவளாய் அவனை ஈழத்திலிருக்கும் தன் இளைய தம்பி அருள்மொழிவர்மனுக்கு ஓலை கொண்டு செல்லுமாறு வேண்டினாள். தன்னை மதி மயக்கிய அந்த மங்கையின் மனதில் இடங்கொள்ள ஓலை கொண்டு செல்ல அவனும் ஆமோதித்தான். ஈழத்துப் பயணம் ஆரம்பமானது. கோடிக்கரையிலிருந்து படகோட்டி பூங்குழலியின் உதவியுடன் ஈழம் சென்றான். அங்கு மீண்டும் ஆழ்வார்கடியாரைச் சந்தித்தான். இறுதியாகப் பல இன்னல்களைத் தாண்டி அருள்மொழிவர்மனிடம் ஓலையைச் சமர்ப்பித்தான். அருள்மொழிவர்மன் தந்திரத்தால் வந்தியத்தேவனிடம் வாள் போர் புரிந்து அவன் வீரத்தையும் கண்டான். தன் தமக்கை மேல் கொண்ட மதிப்பினால் அவன் தூது அனுப்பிய வந்தியத்தேவனிடம் வீரமும் பொருந்தியுள்ளதென்று பெருமிதம் கொண்டு அவனிடம் நட்புப் பாராட்டினான். வந்தியத்தேவனும் அவனின் நடபினால் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான்.

அருள்மொழிவர்மனுக்கோ ஈழத்தில் முடிசூடுமாறு புத்தர் தலைமையகத்தின் வேண்டுகோள். தன் தங்கை பழையாறு வருமாறு தூது. ஈழத்தில் இருக்க வேண்டும் என்பது முதல் மந்திரி அநிருத்தரின் பணிப்பு. தன் தந்தையின் சிறைபிடித்து வா என்ற கட்டளை. காஞ்சிக்கு அழைத்து வர தன் தமையன் நண்பனான பாத்திவேந்திரன் வருகை. பாண்டிய மன்னனின் ஆபத்துதவிகளின் சூழ்ச்சி, இத்தனையையும் உந்திக் கொண்டு தன் ஆசைகளான அரச பதவி வேண்டாம், உல்லாசமாக வந்தியத்தேவனுடனும், சமுத்திரகுமாரி பூங்குழலியுடனும் சமுத்ததிரம் சுற்றிப்பார்க்க வேண்டும் என்ற ஆசை, மோகம் அத்தனையையும் புதைத்துவிட்டு முடிவாக தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்பது அவன் மனதில் வெற்றி கண்டது. அதனால் அவன் இலங்கையிலிருந்து தஞ்சை நோக்கிப் புறப்பட ஆயத்தமானான். வரும் வழியில் சுழற்காற்றின் பயங்கரத்தினால் சமுத்திரம் கலங்கிக் கிடக்க கொடூரமான மரண ஆபத்து நேர்ந்தது. இறுதியாக பூங்குழலியின் சாதுரியத்தினாலும் வந்தியத்தேவன்ின் வலிமையினாலும் இளவரசரை காத்து, கோடிக்கரையில் சதுப்பு நிலக் காடு வரை கொண்டு வந்து ஓர் புத்த விகாரையில் உடல் நலம் குன்றியபடி பூங்குழலியின் அத்தை மகனான சேந்தன் அமுதன் இளவரசரை தலைமைப் புத்த பிக்குவிடம் ஒப்படைத்தான்.

இலங்கையிலிருந்து இளவரசருடன் பயணித்த வந்தியத்தேவன் மீண்டும் பழையாற்றை நோக்கிப் பிரயாணிக்கின்றான். இந்நிலையில் இளவரசன் சமுத்திரத்தில் மாண்டான் என்ற பொய்ச்செய்தி நாடெங்கும் பரவி மக்களைத் துன்பத்தில் ஆழ்த்தியது. வந்தியத்தேவன் இப்பயணத்தின் போது பழுவூர் நந்தினி தேவியும் சோழர்களை வீழ்த்தும் இச் சூழ்ச்சிக்குக் காரணம் என்பதையும், அவள் பிறப்பின் மாயத்தைப் பற்றியும் கண்டு கொண்டு குந்தவையிடம் வருகிறான். குந்தவையிடம் யாவற்றையும் கூறிவிட்டு தன் கடமையைச் சரிவர முடித்த பெருமிதத்துடன் விடை பெற மீண்டும் எத்தனிக்கிறான். குந்தவையோ அவன் விசுவாசத்தால் காதல் கொண்டு மீண்டும் தன் அண்ணன் கரிகாலனின் பாதுகாப்புக் குறித்து ஓலை கொண்டு செல்லப் பணிக்கிறாள். வந்தியத்தேவனும் அவள் காதலில் கட்டுண்டு காஞ்சிக்குச் செல்லச் சம்மதிக்கிறான். ஆதித்த கரிகாலன் கடம்பூர் செல்ல வேண்டாம் என்று தடுப்பதற்காக ஓலை கொண்டு செல்கிறான் வந்தியத்தேவன். ஆனால் ஆதித்த கரிகாலன் தன் வீரத்தில் திமிர் கொண்டவன். பழுவூர் ராணி நந்தினியிடம் மோகம் கொண்டவன். நந்தினி தன் சகோதரி என்று தெரிந்தபின்னும் அதை நம்பாமல் நந்தினியின் வேண்டுகோளின் பெயரில் கடம்பூர் செல்கிறான். அங்கு நடந்த சதியினால் அவன் உயிர் உலகைவிட்டுச் சென்றது. வந்தியத் தேவன் அக் கொலைப் பழிக்கு ஆளாகி தஞ்சைச் சிறையில் அடைக்கப்பட்டான்.

வந்தியத்தேவன் சிறையிலிருந்து கருத்திருமன் என்பவனுடன் தப்பிச் சென்று ஈழத்திற்கு தப்பியோட முயல்கிறான். கருத்திருமனும் வந்தியத்தேவனும் தம் பயணத்திற்கு குதிரையைப் பெற்றுச் செல்வதற்காக அமுதன் வீட்டிற்குச் செல்கின்றனர் அவ்வேளை அங்கு வந்த இளவரசர் மதுராந்தகரை கருத்திருமன் சந்திக்கின்றான். அவன் அவரின் பிறப்பின் இரகசியத்தை அவருக்குக் கூறி தன்னுடன் தப்பி வருமாறு கூறினான். அந்நேரம் வந்தியத்தேவனதும், சேந்தன் அமுதனதும் எதிரியான வைத்தியரின் மகனான தினகபாணி அமுதனைக் கொல்வதற்காக குறி வைக்கப்படுகையில் தடுக்க வந்த வந்தியத் தேவன் காயப்படுகின்றான். அந்நிலையில் பூங்குழலியின் அத்தை மகன் அமுதன் வீட்டில் வந்தியத்தேவன் பராமரிக்கப்படுகிறான். இவ்வேளையில் கருத்திருமனும், இளவரசர் மதுராந்தகரும் குதிரையில் தப்பி ஓடுவதைக் கண்ட ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவன் எங்கே என்ற குழப்பத்துடன், தப்பிச் செல்லும் கருத்திருமன் மூலம் சேந்தன் அமுதன் செம்பியன் மாதவியின் உண்மை மகன் என்ற இரகசியத்தை அறிந்து கொண்டு அவன் வீட்டிற்கு வருகின்றான். அங்கு வந்தியத்தேவனைக் கண்டு அவனை காப்பாற்றுவதற்கான ஆலோசனை செய்து முடிவாக, சேந்தன் அமுதனிடம் உண்மையைக் கூறி, அவரை தஞ்சை மாளிகைக்கு அழைத்துச் செல்கிறான். அத்துடன் வந்தியத்தேவனை மூடு பல்லக்கில் வைத்து அழைத்துச் சென்று பராமரிக்கிறார். தஞ்சை மாளிகையில் இளவரசர் அருள்மொழிவர்மன் வந்தியத்தேவனை சந்திக்க நேர்கிறது. நடக்கவிருக்கும் ஆலோசனைக் கூட்டத்தில் தன் நண்பனைக் காப்பாற்றுவதற்காக தான் அரச பதவியை ஏற்றுக்கொள்வதாக தீர்மானிக்கிறான் அருள்மொழிவர்மன். நிரபராதியான வந்தியத்தேவனை விடுதலை செய்வதே அவன் நோக்கம். இதற்கு அரச பதவி துணைநிற்கும் என்று எண்ணினான். தஞ்சாவூர் மாளிகையில் மறைந்திருக்கையில் தன் ஆபத்தான சூழ்நிலையிலும் தன் நண்பனான கந்தமாறனின் தங்கை, தன் ஆபத்து நேரத்தில் உதவி செய்தவள், மணிமேகலை தன்னை நேசித்தவள் தன் உயிரை மாய்க்கப் போகிறாள் என்று தெரிந்து அவளைக் காப்பாற்ற தன்னை வெளிப்படுத்த வேண்டியதாயிற்று. இவன் வெளிப்பாட்டில் அன்று நடந்த அரசசபை ஆலோசனைக் கூட்டத்தின் முன் நிறுத்தப்பட்டான். ஆலோசனைக் கூட்டத்தில் இவன் குற்றவாளியா இல்லையா என்பது என்ற தர்க்கத்தில் முடிவாக பெரிய பழு வேட்டரையர் நந்தினியின் கணவர் தான்தான் ஆதித்த கரிகாலனைக் கொலை செய்தேன் என்று பொய் சொல்லி நிரபராதியான வந்தியத் தேவனைக் காப்பாற்றுகிறான். ஆனால் கரிகாலனின் மரணம் மர்மமாகவே இருக்கிறது. அரச ஆலோசனைக் குழுவில் அடுத்து யார் அரியணை ஏறுவது என்பதே வாதம். இறுதியாக மக்கள் விரும்பியபடி அருள்மொழிவர்மனே ஏற்க வேண்டும் என்று முடிவாயிற்று. அருள்மொழிவர்மன் தன் பட்டத்தை தன் சித்தப்பா மகன் அமுதன் மதுராந்தகனுக்கு நீதி முறை நின்று தியாகம் செய்தான். பின்னர் மதுராந்தகன் (மனுநீதிச் சோழன்) மரணம் தழுவவே அருள்மொழிவர்மன் அரசனாகி இராஜராஜ சோழன் என்ற பட்டத்துடன் மகுடம் சூடினான்.




பொன்னியின் செல்வன் கதைத் தொகுப்பு எத்தனை அற்புதம். காலம் கடந்தும் நிற்கும் ஓர் சிறந்த நாவல். 50 வருடங்களுக்குப் பின் அழியப் போகும் மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என யுனஸ்கோ அறிவித்துள்ளபோதிலும் பொன்னியின் செல்வன் நாவலுக்கு இன்னமும் வாசகர்கள் பெருகிக் கொண்டே உள்ளனர் என்றிடலாம். கல்கி உண்மை வரலாற்றுப் புதினத்தினூடாக தன் நல்லெண்ணங்களை நமக்குச் சித்தரித்துள்ளார். இந் நூலை நாவலாகப் படிக்கின்றோம், கொண்டாடுகின்றோம். வெளியாக இருக்கும் பொன்னியின் செல்வன் திரைப்படத்தின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம். ஆனால் அவர் உட்கிடக்கையைப் புரிந்ததுமில்லை அதன்படி நடந்ததுமில்லை. வாசிப்பு ஓர் பொழுது போக்காயிற்று. அல்லவா?

-----

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன**

-----

*தொடர்ச்சி அடுத்த வாரம்...*



# மாயப் பிரளயம் உங்களை வணங்கி வழிவிடும்



கொரோனா **(Covid)** பரவியதால் உலகம் முழுவதும் இதுவரை நிகழ்ந்த பல லட்சக்கணக்கான உயிர் இழப்புகள், 50**%** மேல் ஏற்பட்ட வாழ்வாதார பாதிப்புகள் **(Livelihood),** 100 மூ வாழ்க்கைமுறை மாற்றங்கள் **(Lifestyle)** பற்றியும் இன்னும் தொடரும் தாக்கங்கள் பற்றியும் அதிகமாக பார்த்து, படித்து, கேட்டு உருவான எதிர்மறை உணர்ச்சிகளால் மனிதகுலம் மிக அதிகமான களைப்பினை, சோர்வை **(Fatigue)** அனுபவித்து வருகிறது. இது சர்வதேச தொற்று **(Pandemic)** நோயாக உடலை மட்டும் பாதிக்கவில்லை, மனச்சோர்வாக படிந்து வாழ்வின் மீதான நம்பிக்கையையே குறைத்து, தன்னைதான் கைவிடும் மனப்பாங்கை **(Giving Up)** கிளறிவிட்டுள்ளது.

ஆழ்ந்து புரிந்துக்கொள்ளுங்கள்...

நடந்து கொண்டிருப்பது பரமசிவனின் அகோர தாண்டவம். இந்த பிரளயத்தினை **(Deluge)** சாதாரண தர்க்க அறிவாற்றல் **(Logic)** கொண்டு புரிந்து கொள்ள முடியாது. இது மாயப்பிரளயம் **(Delusionary Deluge).** இதுவரை எவையெல்லாம் வாழ்க்கையின் ஆதாரமாய் இருந்தனவோ அவை எல்லாம் நிலையானவை அல்ல என்பதை கண்கூடாக காண்பிக்கப்படும் காலம் இது.

மனித குலமே நிஜத்தை எதிர்கொள்ளும் தருணம் இது. இதுவரை மனிதனால் உருவாக்கம் அடைந்த மிகச்சிறந்த மருத்துவம், நவீன கட்டமைப்புகள், அறிய அறிவியல் ஆய்வுகள் என எதுவுமே இறுதியானது அல்ல என்பதை தெளிவாக வெளிச்சம் போட்டு காண்பித்தது. மனித குலம் பாடம் கற்றுக்கொண்டே தீர வேண்டிய சூழல் எங்கும் உருவாக்கப்பட்டுள்ளது.

மொத்த மனித குலமும், ஒவ்வொரு தனி மனிதனும் இதற்கு ஞான விசாரத்தை தவிர்த்து வேறு எந்த மார்க்கத்தாலும் காரணத்தை உணர முடியாது. நிகழ்வுகளை அணுகும்முறை உச்சமான நேர்மறையாக இருப்பது **(Extreme Life Positivity)** என்பது இந்த மாயப் பிரளயத்தை கடப்பதற்கான நேரடி ஆன்ம சாதனமாகும். இது வாழ்வை வளப்படுத்தும் சத்தியமாகும். இதை உணர முற்பட்டால் மாயையின் மறைப்பினால் நிலையற்றவைகளை ஆதாரமாக கருதி இதுவரை மயக்கமுற்று வாழ்ந்த வாழ்வினை மாற்றியமைக்கலாம். ஆனால் இந்த மாற்றங்களை எதிர்க்கும் மனநிலையிலிருந்து அணுகினால் அது ஒருவருக்குள் தன்னைத்தானே கைவிடுதலை, மருட்சி ஆணவத்தை **( Delusionary Arrogance)** உருவாக்கும். இது வாழ்க்கைக்கு எதிரான முடிவுகளையே எடுக்க வைக்கும்

நம்மிடம் இரண்டு சாத்தியங்கள் இந்த பிரளயத்தில் வரமாக அளிக்கப்படுகிறது.

இதில் எதை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் ஜீவர்களுக்கு வழங்கப்படுகிறது.

ஒன்று: நிலையான பரமசிவபதத்தைப்பற்றி வாழ்வதற்காகத்தான் வாழ்க்கை பரிசாக அளிக்கப்பட்டு உள்ளது என்பதை உணர்ந்து 'ஜீவன் முக்தனாக' வாழ்வின் நோக்கத்தை மாற்றி அமைக்கலாம், மோட்சம் அடையலாம்.

அல்லது: நிலையற்ற பருப்பொருளின்மீது பற்று வைத்து 'பந்த ஜீவனாக' வாழ்ந்து பிறப்பு-இறப்பு சுழற்சியை தொடரலாம்.

இதை உடனே புரிந்துணரும், ஏற்றுக்கொள்ளும், முடிவெடுக்கும் பரிபக்குவம் தற்போது இல்லை என்றால் அதற்காக வருத்தமுறாதீர்கள். உங்களை நீங்களே தாழ்த்திக்கொள்ளாதீர்கள், மேலும் மேலும் சக்தியற்றவர்களாக்காதீர்கள்.

சக்தியற்ற நிலையிலிருந்து ஒருவரால் எடுக்கப்படும் முடிவாக எதுவாக இருந்தாலும், அது தவறான ஒன்றாகத்தான் இருக்கும். தவறான விளைவுகளையே தரும். இந்த பிரளய வேளையில் கொரோனா தொற்றை காட்டிலும் சர்வதேச பிரச்சினையாக பெருவாரியான தொற்றாக இருப்பது பயம், பதற்றம் **(Panic),** பாதுகாப்பற்றத்தன்மை (ஐளெநஉரசவைல) போன்ற சக்தியற்ற நிலைகளே. மனித குலமே சந்தித்து வரும் இந்த சக்தியற்ற நிலையை சமாளிக்க வழித்தெரியாமல் உலக நாடுகள் தவித்து வருகின்றன.

கைலாஸா இதற்கு பொறுப்பேற்று பிரளயம் துவங்கும் முன்னரே ஆன்மிக தீர்வுகள் அளித்து, அதன்பிறகும் தொடர்ந்து ஆன்மிக தீர்வளித்து வழிகாட்டி வருகிறது. பரமசிவன் உலகிற்கு வெளிப்படுத்தும் சத்தியங்களை, சக்தி வாய்ந்த புரிந்துணர்வுகளை அனைத்துலக சமூக வளைத்தளங்கள், இணையத்தளம் வழியாக நாள்தோறும் பகிர்ந்து வருகிறது. அதை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரும் ஆனந்தம் அடைகின்றோம்

மாயப் பிரளயத்தை கடக்க பரமசிவன் அருளும் நேரடியான தீர்வுகள்:

1. சக்தியற்ற நிலையில் எந்த தீர்வையும், முடிவையும் எடுக்காதீர்கள். அவ்வாறு செய்வது தவறான பலனையே தரும்.
2. தன்னைத்தான் கைவிடுகின்ற உணர்விலிருந்து (மருட்சி ஆணவத்தால்) தெரிந்தே தவறான முடிவுகளை எடுக்காதீர்கள். 'இதற்கு மேல் என்ன?' - எனும் மருட்சி ஆணவத்திலிருந்து வேண்டுமென்றே எதிர்மறையாக எந்த ஒரு முடிவையும் எடுக்காதீர்கள்.
3. இதுவரை பிடித்த ஒன்று திடீரென்று பிடிக்காமல் போகலாம். அதுவரை வெறுத்த ஒன்று திடீரென்று விருப்பமான ஒன்றாக மாறலாம். இவ்வாறு திடீரென மாற்றம் அடையும் நிலை ஏற்பட்டால், அதனால் தடுமாற்றமடைந்து - நிலை குலைந்து தற்கொலை முடிவுற்கு செல்லாதீர்கள். தற்கொலை தீர்வு தராது. இந்த பாதிப்பு உங்கள் உயிரில் பதிந்து அது இந்த உடலையும், உயிரையும் மட்டுமல்லாது அடுத்தடுத்து எடுக்கப்போகும் பல ஜென்ம வாழ்க்கையையும் நாசம் செய்யும்.
4. உடலை யோகா மூலம் பலமாக்குங்கள்.
5. முடிந்தவரை திரவ உணவை எடுத்துக்கொள்ளுங்கள். மூலிகை சாறுகளை உட்கொண்டு உடலில் இருக்கும் நச்சுத்தன்மைகளை வெளியேற்றுங்கள் **(Detoxification).**
6. இந்து மத சாஸ்திரங்களை படித்து மனதிற்கு சக்தி வாய்ந்த புரிதல்களை தாருங்கள்.
7. எண்ணங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு அற்றவை. நாம்தான் அதை கோர்த்து பார்க்கின்றோம். நமது எண்ணங்களை உணர்ச்சிகளை கோர்த்துப்பார்ப்பதால், இணைத்து பார்ப்பதால்தான் மாயையின் வலையில், மயக்கத்தின் முடிச்சுகளில் சிக்கிக்கொள்கிறோம். நம்முடைய காரணங்கள், தர்க்கங்கள், தீர்மானங்கள், முடிவுகள், நம்பிக்கைகள், அனுபவங்கள் ஆகியவற்றின் மீது இருக்கும் பற்றால் **(Attachment)** - எண்ணங்களை கோர்த்து பார்க்கின்றோம். ஒவ்வொரு முறை கோர்த்து பார்க்கப்பட்ட எண்ணமானது, முடிச்சாக உணர்வில் சிக்கலை உருவாக்க துவங்கும். கோர்த்து பார்த்தல் தொடர தொடர அது ஒரு நீளமான தண்டு போன்ற மாயத் தோற்றத்தை உருவாக்கும். அது உங்களை கட்டுப்படுத்த துவங்கும். சுகமான எண்ணமாக இருந்தாலும், துக்கமான எண்ணமாக இருந்தாலும் - இரண்டுமே - எந்த எண்ணமாக இருந்தாலும் கோர்த்துப்பார்க்கப்படும்போது அது உங்களை பந்தப்படுத்தும், கட்டுப்படுத்தும். இதனால் உங்கள் உயிர் (பந்தப்பட்ட ஜீவனாக சிக்கித் தவிக்கும்).

கோர்த்துப்பார்பதை நிறுத்துங்கள். உங்கள் ஜீவன் சிவமாகும். எண்ணங்களை கோர்த்துப் பார்க்காமல் - 'அன்கிளட்சு' **(Unclutch)** செய்யுங்கள். பரமசிவ நிலையில் நிலைப்பெறத் துவங்குவீர்கள். இது உங்கள் உயிரை **(Consciousness)** பந்தப்படுத்தும் மயக்கத்திலிருந்து விடுதலை தரும். உடலையும், உயிரையும் பலப்படுத்தும் ஆத்ம ஞானம் அன்கிளட்சு ஆகும். இது பரம்பொருளாம் பரமசிவன் பரம கருணையால் அருணகிரி யோகீஸ்வரராய் அவதரித்து எனக்கு நேரடியாக உபதேசித்ததாகும்.

8. உடலையும், மனதையும், உயிரையும் பலப்படுத்தி தினந்தோறும் சிவபூஜை செய்து பரம்பொருளோடு இணைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குள் உயர் உயிர் விழிப்புணர்வு **(Super Conscious Breakthrough)** நிகழும்.

பரமசினின் கிருபையால் உங்களுக்குள் உயர் உயிர் விழிப்பு நடைபெற்றவுடன் எந்த மாயப் பிரளயமும் பாதிப்பை நிகழ்த்த முடியாது. மாறாக வணங்கி வழிவிடும். நீங்கள் அனைவரும் பரமசிவ பரம்பொருளின் நிலையில் நிலைப்பெற்று, பரமசிவ உணர்வையும், பரமசிவ சக்திகளையும், பரமசிவ இருப்பையும், பரமசிவ உயர் விழிப்புணர்வையும் பெற்று, கைலாஸத்தை அடைந்து, நித்யானந்தத்தில் திளைத்திட ஆசிர்வதிக்கின்றோம்.

ஆனந்தமாக இருங்கள்.

- பகவான் - நித்யானந்த பரமசிவம்



# கிரகங்களும், மனித வாழ்க்கையும்



கிரகங்கட்கும், நட்சத்திரங்கட்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று நாம் அறிய ஆவலாயிருக்கும் வேளையில் சில தகவல்கள் எம்மை சுற்றிவருகின்றன. நவக்கிரகங்கள் 9, ராசி சக்கரம் 12, நட்சத்திரங்கள் 27 என்பன இம் மண்டபத்தில் இடம் பெற்றுள்ளன. காஞ்சிப் பெரியவர் சொல்கின்றார். நம்முடன் சூரியனைச் சுற்றி வருபவையே கிரகங்கள். சூரிய மண்டலத்தைச் சேராதவை நட்சத்திரங்கள். நம்முடைய கண்ணுக்குத் தெரிகிற அடையாளம் ஒன்று இருக்கிறது. வைரத்தை ஆட்டிக் கொண்டே இருந்தால் அது பளபளவென்று அசைந்து ஜொலித்துக் கொண்டே இருக்கும். அதைப்போல நட்சத்திரங்கள் அசைவோட ஜொலித்துக் கொண்டிருக்கும். கிரகங்கள் அசையாமல் ஜொலிக்கும்.

சூரியனும் ஒரு நட்சத்திரம்தான். நட்சத்திரங்கள் சுயமாகப் பிரகாசிப்பவை. கிரகங்கள் மற்ற ஒளியைப் பெற்றுப் பிரகாசிப்பவை. உதாரணம் சந்திரன் சூரியனது ஒளியைப் பெற்றே பிரகாசிக்கின்றான். அதற்குச் சுய ஒளி இல்லை. சூரிய ஒளி ஒரே வெண்மை. நிவ்ளக்ஸ் என்ற ஒளிச் சிதறலில் ஏழு வர்ணமாகின்றது.

கிரகங்களின் மாற்றத்தினால் கஷ்டம், சௌக்கியம், துக்கம். சந்தோசம் உன்னத பதவி. தாழ்ந்த பதவி என்று இப்படி எல்லோருடைய நிலையும் மாறி மாறி வருகின்றது.

உலகத்தில் வரும் சுகதுக்கங்கட்கும். கிரகங்களுக்கும் சம்பந்தம் உண்டென்று மகரிஷிகள் கண்டறிந்தள்ளார்கள். ஒரு காரியம் ஆரம்பித்தால் அதன் ஆரம்பகால கிரகங்களின் இருப்பை வைத்து. மேலே நடக்கும் சுக துக்கப்பலன்களைச் சொல்லும் என்று கூறுகின்றார் காஞ்சிப்பெரியவர்.

பல உறுப்புகள் கொண்ட ஒற்றுமையுடன் இயங்கும் ஓர் உடல். இதில் எதுவும் தனியாக இல்லை. ஒரு நட்சத்திரம் எவ்வளவோ தொலைவில் இருந்தாலும் சரி அது நிலை மாறும் போது நமது இதயத் துடிப்பையும் மாற்றுகின்றது. பூமிக்கு மேல் 200 மைல் தூரத்திற்கு கவசம் போல் அமைந்திருக்கும் ஒரு பகுதி ஓசோன் மண்டலம். நமக்குத் தீங்கு தரும் எத்தனையோ பொருள்களை, அம்சங்களை. பூமியின் மேல் விழாதபடித் தத்துக் கொண்டிருக்கிறது. ராக்கெட்டுகளையும், செயற்கைக் கோள்களையும் அனுப்பி விஞ்ஞானிகள் அதை ஓட்டை விழும்படி செய்து விட்டார்கள். சூரியனில் கரும் புள்ளிகள் தோன்றும் போதெல்லாம் பூமியில் நோய் நொடிகள் பரவுகின்றன. பெருகுகின்றன. அந்தப் புள்ளிகள் குறைந்தால் நோய்கள் குறைகின்றன.

ஓர் சோதிட நாத்திகன் பல ஆராச்சிகளை செய்து சோதிட ஆய்வாளனாகின்றார். பல சோதிட ஆராச்சியில் குறிப்பிட்ட இராசியில் பிறந்தவர்கள் மட்டுமே குறிப்பிட்ட தொழில் செய்கின்றார்கள். கிரகங்கள் மாறுபாட்டால் மனிதனுடைய வாழ்க்கை வளர்ச்சி மாறுபடைகின்றது. செவ்வாயின் ஆதிக்கத்தில் இருந்தவர்களே தளபதிகளாக இருந்தார்கள். பிரகாசத்தார்கள்.கல்வியாளர்களுக்குச் செவ்வாயின் பாதிப்பே இல்லை. படைத் தளபதிகள் பிறக்கும் போது செவ்வாய் உச்சத்தில் இருக்கின்றது. போர் எதிர்பாளர்கள் எவருமே செவ்வாய் உச்சத்தில் இருக்கும்போது பிறந்தவர்கள் இல்லை. ஒருவனது மனம் மூளை. சிந்தனை. உணர்வு, உடல் ஆகிய அனைத்தையும் கிரகங்கள் கட்டப்படுத்தி அவற்றுக்குச் சக்தியை அளித்து அல்லது பலவீனமாக்கி மனிதரின் கர்மவிதியைச் செயல்படுத்துகின்றன.

இல்வாழ்க்கை அல்லது துறவு, விருப்பு அல்லது வெறுப்பு, புகழ் அல்லது இகழ். செல்வம் அல்லது வறுமை, நலம் அல்லது நோய். ஆதரவு அல்லது வீழ்ச்சி மறு பிறப்பு அல்லது முக்தி ஆகிய அனைத்தையும் நுட்பமாக மனிதர்களில் உருவாக்கும் திறமை உடையன இந்தக் கிரகங்கள். கிரகங்களின் மாற்றத்தின் தூண்டுதலின் பேரில் மனிதர்கள் செயல்பட்ட அதன் மூலம் இன்பத்தையோ துன்பத்தையோ அடையவேண்டும் என்பதான் விதி.

## சக்திஸ்ரீ கோபாலனின் புதிய படைப்பு 'நீ போதுமே' காதலர் தினத்தன்று வெளியாகியது

ஃபிலிம் ஃபேர் உள்ளிட்ட பல்வேறு விருதுகளை வென்றுள்ள இசைக் கலைஞரான சக்திஸ்ரீ கோபாலனிடம் இருந்து காதலர் தினத்தன்று ஒரு சிறப்பு பாடல் வெளியாகியுள்ளது. "நீ போதுமே" என்று பெயரிடப்பட்டுள்ள எளிமையான, மென்மையான இந்த தமிழ் பாப் சிங்கிள், காதலை கொண்டாடும் வகையில் அமைந்துள்ளது.

இப்பாடலை சக்திஸ்ரீ கோபலனே எழுதி, இசையமைத்து தயாரித்துள்ளார். கிடார் கலைஞரும் பாடகருமான அக்ஷய் யசோதரன் இதில் தோன்றுகிறார். 2021 பிப்ரவரி 14 அன்று வெளியாகியுள்ள "நீ போதுமே", காதலில் இருப்பவர்களின் உணர்வுகளையும், காதலின் மென்மை மற்றும் வலிமையையும் இசை வடிவில் வெளிப்படுத்துகிறது. 2020-ம் வருடம் வீடுகளே உலகமாக மாறியிருந்த வேளையில் எழுதி, இசையமைக்கப்பட்ட இப்பாடல், நேசத்துக்குரியவர்களின் பாசம் குறித்து பாசாங்கில்லாமல் பதிவு செய்துள்ளது.

சிறந்த பாடகியும், இசை ஏற்பாட்டாளருமான கல்யாணி நாயரின் உணர்வுப்பூர்வமான இசைக் கோர்வைகளுடனும், ரித்து வைசாக், ஹர்ஷா சாஸ்திரி மற்றும் டோபி ஜோசப்பின் பங்களிப்புடனும் "நீ போதுமே" உருவாகியுள்ளது. அக்ஷய் யசோதரனும் தனது கிடார் மூலாம் சிறப்பு சேர்த்துள்ளார். பல்வேறு மொழிகளில் 100 பாடல்களுக்கும் மேல் பாடியுள்ள சக்திஸ்ரீ கோபாலன், ஏ ஆர் ரஹ்மான், அனிருத் ஆகியோருடன் பணியாற்றியுள்ளார். 2008-ம் ஆண்டிலிருந்தே பாடல்களை எழுதி, இசையமைத்தும் வருகிறார்.

சென்னையை சேர்ந்த பிக் சாம் மற்றும் சென்னை ஸ்ட்ரீட் பேண்ட் ஆகிய இசைக்குழுக்களில் அங்கம் வகிக்கும் அக்ஷய் யசோதரன், ரஹ்மானுடன் இசைப் பயணம் மேற்கொண்ட அனுபவம் கொண்டவராவார். இவர்களின் கூட்டு முயற்சியில் உருவாகியுள்ள "நீ போதுமே", இந்த இசை இன்னும் வேண்டுமென்று ரசிகர்களை சொல்ல வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- மக்கள் தொடர்பு: நிகில்.

## தமிழ்-தெலுங்கு இருமொழி படம் மூலம் மறுபிரவேசம் செய்யும் தூத்துக்குடி கார்த்திகா



தமிழில் தூத்துக்குடி என்கிற படத்தில் கதாநாயகியாக அறிமுகமானவர் கார்த்திகா. அந்தப்படத்திற்கு பிறகு "தூத்துக்குடி கார்த்திகா" என்று அழைக்கப்படும் அளவுக்கு அந்தப்படம் அவருக்கு திருப்பு முனையை ஏற்படுத்தி கொடுத்தது. குறிப்பாக அந்தப்படத்தின் "கருவாப்பையா" என்கிற பாடலை கேட்கும்போதே, இப்போதும் கார்த்திகாவின் முகம் தான் ஞாபகத்துக்கு வரும். அதேபோல "பிறப்பு" படத்தில் அவர் ஆடிப்பாடிய, "உலக அழகி நான் தான்" பாடல், அந்த சமயத்தில் பள்ளிக் குழந்தைகளின் மேடை நடனத்துக்கான பொருத்தமான பாடலாக அமைந்தது. இடையில் சில நாட்கள் திரையுலகை விட்டு ஒதுங்கி மும்பை சென்று விட்ட கார்த்திகா தற்போது மீண்டும் திரையுலகில் மறுபிரவேசம் செய்கிறார் என்பதுதான் லேட்டஸ்ட் தகவல். இதுபற்றி கார்த்திகா பகிர்ந்து கொண்டதாவது.

தமிழில் படங்களில் நடித்துக் கொண்டிருந்த சமயத்தில் தான், திடீரென தங்கையின் படிப்புக்காக மும்பை சென்று தங்க வேண்டிய சூழல் உருவானது. அப்போதும் கூட சில படங்களில் நடிக்க அழைப்பு வந்தும் ஏற்க முடியாத நிலையில் இருந்தேன். இடையில் சென்னை வந்தபோது, வெளியில் சென்ற இடங்களில் ரசிகர்கள் பலரும், "இத்தனை நாளாக "எங்கே சென்றீர்கள்..? நீங்கள் ஏன் மீண்டும் நடிக்க கூடாது?" என தவறாமல் கேட்டனர். உடன் இருந்த உறவினர்கள் கூட, உன்னை எவ்வளவு பேர் மறக்காமல் ஞாபகம் வைத்திருக்கிறார்கள். அதற்காகவது மீண்டும் நீ நடிக்க வேண்டும் என கூறினார்கள். அப்போதுதான் ரசிகர்களின் அன்பை இவ்வளவு நாள் நான் மிஸ் பண்ணியிருக்கிறேன் என புரிந்தது. அந்தசமயத்தில் தான் தெலுங்கு, தமிழ் என இருமொழிகளில் உருவாகும் படம் ஒன்றில் நடிக்கும் வாய்ப்பு தேடி வந்தது. இதுதான் சரியான தருணம் என அந்தப் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டேன். அதில் ஒப்பந்தமான நேரம், அந்தப்படங்கள் மூலமாக இன்னும் இரண்டு தெலுங்கு படங்களிலும் நடிக்க அழைப்பு வந்துள்ளது. அதேபோல இங்கே தமிழிலும் இரண்டு படங்களில் நடிக்க பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. இனி வெள்ளித் திரையில் என்னை அடிக்கடி நீங்கள் பார்க்கலாம்" என்கிறார் கார்த்திகா. இந்த இடைப்பட்ட காலத்தில் நிறைய சீரியல்களில் நடிக்கவும் கார்த்திகாவுக்கு அழைப்பு வந்தது. அந்த சமயத்தில்தான் தமிழ், தெலுங்கு என இருமொழி படத்தில் நடிக்கும் வாய்ப்பும் வந்தது. அதுமட்டுமல்ல, அனுஷ்கா நடித்த அருந்ததி படம் போல இன்னொரு கதையில் நடிக்க இருக்கிறார். அதனால் இப்போதைக்கு தொடர்ந்து வெள்ளித் திரையிலேயே கவனம் செலுத்தலாம் என முடிவு செய்துள்ளார் கார்த்திகா.

- மக்கள் தொடர்பு: ஜான்.

## சேவியர் பிரிட்டோ தயாரிக்கும் 'அழகிய கண்ணே' படத்தின் படப்பிடிப்பு துவங்கியது



பிரபல தயாரிப்பாளர் சேவியர் பிரிட்டோ அவர்கள் "எஸ்தல் எண்டர்டெய்னர்" நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கும் திரைப்படம் "அழகிய கண்ணே". இத்திரைப்படத்தை இயக்குநர் சீனு ராமசாமியின் துணை இயக்குனர் சு.விஜயகுமார் இயக்குகிறார். சட்டம் ஒரு இருட்டறை படத்தை இயக்கியவர் மாஸ்டர் படத்தின் தயாரிப்பாளர் சேவியர் பிரிட்டோவின் மகள் ஸ்னேஹா பிரிட்டோ. இவருடைய பிறந்த நாளான பிப்ரவரி 12 தேதி அழகிய கண்ணே படத்தின் பூஜை போடப்பட்டது.பிரிட்டோ அவர்களின் மனைவி விமலா பிரிட்டோ அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 15 அன்று இந்த படத்தின் படப்பிடிப்பு துவங்கியது. பிரபல பட்டிமன்ற நடுவர் திண்டுக்கல் ஐ.லியோனி அவர்களின் மகன் லியோ சிவக்குமார் கதாநாயகனாக அறிமுகமாகிறார். கதாநாயகியாக சஞ்சிதா ஷெட்டி நடிக்கிறார். மேலும் பல முன்னணி நடிகர்கள் நடிக்கின்றனர்.

நடிகர்கள்: லியோ சிவக்குமார், சஞ்சிதா ஷெட்டி

தொழில்நுட்பக்குழு:

| | |
|---|---|
| இயக்கம் | - சு. விஜயகுமார் |
| தயாரிப்பு | - சேவியர் பிரிட்டோ (எஸ்தல் எண்டர்டெய்னர்) |
| பாடல்கள் | - வைரமுத்து |
| இசை | - ே. சு. ரகுநந்தன் |
| ஒளிப்பதிவு | - யு. சு. அசோக் குமார் |
| படத்தொகுப்பு | - சங்கத் தமிழன் |
| நடனம் | - ராதிகா |
| தயாரிப்பு மேற்பார்வை | - இளையராஜா செல்வம் |
| மக்கள் தொடர்பு | - ரியாஸ் கே அஹ்மத் |

# ஈழத்துத் திருக்கோவில்கள் 934



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## தம்பலகமம், ஆதிகோணநாயகர் கோயில்

### திருகோணமலை

**"சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து**
**தரணியொடு வானாளத் தருவரேனும்**
**மங்குவார் அவர்செல்வம் மதிப் போமல்லோம்**
**மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்**
**அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயராய்**
**ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்**
**கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்**
**அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே."**

விஜயன் காலத்தின் பின்பு, மநுநீதிகண்டசோழன் மகன் குளக்கோட்டு மகாராஜன் யாத்திரையின் நிமித்தம் திருகோணமலையை வந்தடைந்து, கோணேசப்பெருமானைத் தரிசித்துப் பின் தம்பலகமத்திலே பழுதுபட்டுக்கிடந்த கோணேசர் சிவாலயத்தைப் பழுதுபார்த்து, அக்கிரகாரம் முதலிய வேலைகள் அனைத்தையும் திருத்தினான் என்றும், யாழ்ப்பாணவைபவமாலை கூறியுள்ளது. மநுநீதிகண்டசோழனின் பட்டப்பெயரைத் தட்சிணகைலாயபுராணம் வரராமதேவர் எனக் குறிப்பிட்டுள்ளது.

கோணேசர் கோயில் கல்வெட்டின்படி, பரங்கியர் கோணைநகரை அழிக்குமுன்பு கோணைநாதர், தம்மையும், தமது பரிவார தேவர்களையும், ஆபரணங்களையும், பொக்கிஷங்கள் முதலான திரவியங்களையும், கழனிமலைக்குக் கொண்டுசெல்லும்படி, கோயில் அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்ததால், அவர்கள் அவ்வாறே செய்தனர் என்று சில குறிப்புக்களிலே கூறப்பட்டுள்ளது. சிலகாலம் சென்ற பின் வரராசசிங்கன் எனப் புராணங்கள் கூறும் முதலாம் இராசசிங்கனால், கழனிமலைக்கு அருகாகத் தம்பைநகர் எனப்படும் ஒரு நகரமும் கோணைநாதருக்குக் கோயிலும் புதிதாகக் கட்டப்பட்டது என்று திருக்கோணாசல புராணத்தின் தம்பைநகர்ப்படலத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இதனை

**"கன்னல்வேலி வரம்புடுத்த**
**கழனிசூழும் தம்பைநகர்**
**என்னும் நாட்டின் அன்பினொடும்**
**இலங்கும் மணிப்பொன்னாலயமும்**
**சொன்ன முறையிற் றானமைத்துத்**
**தூய பூசைத் தேர்த்திருநாள்**
**முன்ன அவன்செய் கெனஅருளி**
**மறைந்தான் கோண மலைநாதன்"**

என்று கூறப்பட்டுள்ளது.

**"சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்**
**திருந்துசாத் துவிகமே ஆக**
**இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த**
**ஏல்லையில் தனிப்பெருங் கூத்தின்**
**வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து**
**மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."**

தற்பொழுது ஆதிகோணநாயகர் ஆலயம் இருக்கும் இடத்திற்குச் சற்றுத் தூரத்தில், தீனேரி, பாண்டியூற்று ஆகிய இடங்கள் இருக்கின்றன. திருநகர், பாண்டியன் ஊற்று என்ற பெயர்கள் பிற்காலத்தில் இவ்வாறு திரிபுபட்டிருக்க வேண்டும். இங்கும் சிவாலயங்கள் இருந்தமைக்கான அழிபாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இங்கிருந்த சிவலிங்கம், நந்தி என்பன பலகாலங்களுக்கு முன்னர் கொண்டு வரப்பட்டு, தம்பலகமம் ஆதிகோணைநாதர் கோயிலில் வைக்கப்பட்டிருந்தது.

திருக்கோணேஸ்வரத்தோடு தொடர்புபட்டுக் காணப்படும் வரலாறுகள், மரபுகள் யாவும் தம்பலகமம் ஆதிகோணைநாயகர் ஆலயத்தோடும் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. கோணேசர் கல்வெட்டுக் கூற்றின்படி குளக்கோட்டுமன்னன் கலியப்தம் 512 ஆம் ஆண்டில் கோணேசர் கோயில் திருப்பணியையும், 526 ஆம் ஆண்டில் கந்தளாய்க் குளத்தைக் கட்டும் பெரும்பணியையும், நிறைவேற்றியதாகச் சான்றுகள் கூறியுள்ளன. கி.மு 1300 வருட பழமை வாய்ந்தது திருக்கோணேஸ்வரம். இக்கோயில் திருப்பணியை கி.பி 5 ஆம் நூற்றாண்டளவில் சோழ அரசனாகிய குளக்கோட்டு மன்னன் புனருத்தாரணம் செய்துள்ளான். குளமும், கோட்டமும் கட்டியதால் குளக்கோட்டன் எனப் பெயர் பெற்றான் எனவும் கூறுவர். குளக்கோட்டு
மன்னன் திருக்கோணேஸ்வரத்திற்குச் செய்த திருப்பணிகள், மானியங்கள், நிபந்தனைகள், நிர்வாக ஆணைகள் யாவும் கோணேசர் கல்வெட்டிலே தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. கோணேசர் கல்வெட்டிலுள்ள ஆணைகளை ஆதி கோணநாயகர் ஆலயம் இன்றுவரை கடைப்பிடித்து வருகின்றது.

பாலம்போட்டாறு என்னும் இடம், திருகோணமலையிலிருந்து பதினாறு கிலோமீற்றர் தூரத்தில் காணப்படுகின்றது. இங்கு வருடமொருமுறை பொங்கல்பெருவிழா வெகு சிறப்பாக நடைபெறும். பாலம்போட்டாறு பத்தினிஅம்மன் கோவிலிலுள்ள எழுந்தருளி அம்பாளைப் பாதுகாப்பின் நிமித்தம், தம்பலகமம் ஆதிகோணநாயகர் கோவிலில் வைத்திருப்பார்கள். வைகாசித் திங்களன்று மங்களவாத்தியங்களோடு பத்தினியம்மனை எழுந்தருளச் செய்து, பாலம்போட்டாற்றுக் கோவிலுக்கு எழுந்தருளச் செய்து பொங்கல் பூசைகள் செய்வார்கள். மறுநாள் மீண்டும் பாலம்போட்டாறு எழுந்தருளி அம்மனை, ஆதி-கோணேசர் ஆலயத்திற்கு எழுந்தருளச் செய்வார்கள். வருடாவருடம் இந்நிகழ்வு வெகு கோலாகலமாக நடைபெற்று வருகின்றது. தம்பலகமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில், ஸ்நபன மண்டபத்தில் சிவகாமியம்பாள் சமேத நடராஜப்பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். ஆதிகோணைநாதருக்குத் தனிக் கோவில் காணப்படுகின்றது. வைரவர், நாகதம்பிரான் ஆகியோரும் இங்கு காணப்படுகின்றனர்.

இவ்வாலயத்தில் ஆனி உத்தரத்தில் கொடியேறிப் பதினெட்டுநாட்கள் திருவிழா விமரிசையாக நடைபெறும். ஆடியமாவாசையன்று சுவாமி, மகாவலிகங்கை முகத்துவாரத்திற்குச் சென்று தீர்த்தமாடுவார். இவ்வாறு தீர்தமாடச் செல்லும்பொழுது, அருள்மிகு ஆலங்கேணி விநாயகர் ஆலயத்தில் தங்கி இளைப்பாறிச் சென்று, பின்னரே கங்கைத்துறையில் தீர்த்தமாடும் வழமை காணப்படுகின்றது. கங்கைத் துறையிலே நடைபெறும் தீர்த்தததைக் காண, பல கிராமங்களிலிருந்தும் மக்கள் திரளாக வந்து கூடுவர். இவ்வாறு கூடும் மக்கள், கடற்கரையோரமாகவுள்ள பரந்த மணற்பரப்பிலே தங்கியிருப்பார்கள். இக்காலத்தில் இவ்விடத்திலுள்ள சிறிய கோவிலொன்றில் திருக்கரசைப் புராணப்படிப்பு நடைபெறும். கோவிலுக்கருகில் அமைக்கப்பட்ட மேடையில் சமய கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறும். அதிகாலையில் கங்கைச் சங்கமத்தில் சுவாமி தீர்த்தமாடி, ஆலங்கேணியூடாகத் தம்பலகாமத்தைச் சென்றடைவார். *வளரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




ALL DEBT SOLUTIONS C R PLAN
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# அன்பின் தொனி - 600

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**கர்த்தாவே, திரும்பிவாரும், எதுவரைக்கும் கோபமாயிருப்பீர்?**

ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர். பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர். நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி, மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர். உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம்போலவும் இருக்கிறது. அவர்களை வெள்ளம்போல் வாரிக்கொண்டுபோகிறீர், நித்திரைக்கு ஒத்திருக்கிறார்கள், காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அது காலையிலே முளைத்துப் பூத்து, மாலையிலே அறுப்புண்டு உலர்ந்துபோம். நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து, உமது உக்கிரத்தினால் கலங்கி ப்போகிறோம். எங்கள் அக்கிரமங்களை உமக்கு முன்பாகவும், எங்கள் அந்தரங்க பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர். எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது, ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம். எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமேளூ அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்துபோகிறோம். உமது கோபத்தின் வல்லமையையும், உமக்குப் பயப்படத்தக்க விதமாய் உமது உக்கிரத்தையும் அறிந்து கொள்ளுகிறவன் யார்? நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும். கர்த்தாவே, திரும்பிவாரும், எதுவரைக்கும் கோபமாயிருப்பீர்? உமது அடியா ருக்காகப் பரிதபியும். நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும். தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷ ங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும். உமது கிரியை உமது ஊழியக்காரருக்கும், உமது மகிமை அவர்கள் பிள்ளைகளுக்கும் விளங்குவதாக. எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக, எங்கள் கைகளின் கிரிையயை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும், ஆம், எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத் தியருளும். **- சங்கீதம் 90: 1-17**

**உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய்.**

உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான். நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன். அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார். அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார், அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய், அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும். இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய். உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயி ரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது. உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய். எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள். சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய். அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிற படியால் அவனை விடுவிப்பேன், என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன். அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன், ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். நீடித்த நாட்களால் அவனைத் திருப்தி யாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன். **- சங்கீதம் 91: 1-16**

**கர்த்தாவே, உமது செய்கைகளால் என்னை மகிழ்ச்சியாக்கினீர்,**

கர்த்தரைத் துதிப்பதும், உன்னதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவதும், பத்துநரம்பு வீணையினாலும், தம்புருவினாலும், தியானத்தோடு வாசிக்கும் சுரமண்டலத்தினாலும், காலையிலே உமது கிருபையையும், இரவிலே உமது சத்தியத்தையும் அறிவிப்பதும் நலமாயிருக்கும். கர்த்தாவே, உமது செய்கைகளால் என்னை மகிழ்ச்சியாக்கினீர், உமது கரத்தின் கிரியைகளினிமித்தம் ஆனந்தசத்தமிடுவேன். கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு மகத்து வமானவைகள்! உமது யோசனைகள் மகா ஆழமானவைகள். மிருககுணமுள்ள மனுஷன் அதை அறியான், மூடன் அதை உணரான். துன்மார்க்கர் புல்லைப்போலே தழைத்து, அக்கிரமக்காரர் யாவரும் செழிக்கும்போது, அது அவர்கள் என்றென்றைக்கும் அழிந்துபோவதற்கே ஏதுவாகும். கர்த்தாவே, நீர் என்றென்றைக்கும் உன்னதமானவராயிருக்கிறீர். கர்த்தாவே, உமது சத்துருக்கள் அழிவார்கள், உமது சத்துருக்கள் அழிந்தே போவார்கள், சகல அக்கிரமக்காரரும் சிதறுண்டுபோவார்கள். என் கொம்பைக் காண்டாமிருகத்தின் கொம்பைப்போல உயர்த்துவீர், புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறேன். என் சத்துருக்களுக்கு நேரிடுவதை என் கண்காணும், எனக்கு விரோதமாய் எழும்புகிற துன்மார்க்கருக்கு நேரிடுவதை என் காது கேட்கும். நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுரு வைப்போல் வளருவான். கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழி த்திருப்பார்கள். கர்த்தர் உத்தமரென்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும், விளங்கப்பண்ணும்படி, அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள். **- சங்கீதம் 92: 1-15**

கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், மகத்துவத்தை அணிந்து கொண்டிருக்கிறார், கர்த்தர் பராக்கிரமத்தை அணிந்து, அவர் அதைக் கச்சையாகக் கட்டிக்கொண்டிருக்கிறார், ஆதலால் பூச்சக்கரம் அசையாதபடி நிலைபெற்றிருக்கிறது. உமது சிங்காசனம் பூர்வமுதல் உறுதியானது, நீர் அநாதியாயிருக்கிறீர். கர்த்தாவே, நதிகள் எழும்பின, நதிகள் இரைச்சலிட்டு எழும்பின, நதிகள் அலைதிரண்டு எழும்பின. திரளான தண்ணீர்களின் இரைச்சலைப்பார்க்கிலும், சமுத்திரத்தின் வலுமையான அலைகளைப்பார்க்கிலும், கர்த்தர் உன்னதத்திலே வல்லமையுள்ளவர். உமது சாட்சிகள் மிகவும் உண் மையுள்ளன, கர்த்தாவே, பரிசுத்தம் நித்தியநாளாக உமது ஆலயத்தின் அலங்காரமாயிருக்கிறது. **- சங்கீதம் 93: 1-5**

*தொடரும்*

SHIVA SAI DURGA ASTROLOGICAL CENTER

Pandit: Kumara swamy





Most Powerful Spiritual Healer

We can Handle any Problem

25 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 8 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்

உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே

இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்

Remove Black Magic,Witchcraft, Obeya,Evil Spirits

Bad Luck & Jadoo & Give 100%,Life Long Protection

கை பார்த்து. முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். Photo பார்த்து

ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,

இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.

செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி, நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம், காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்

எந்தப் பிரச்னையாக இருந்தாலும் 9 நாட்களில் தீர்வு காண்பார்

100% SATISFACTION GUARANTEED

Are you depressed & Lonely? All Religions welcome. 100% Guaranteed Result

Call for Appointments/Walk ins Welcomed 647-766-9775

2607 Eglinton Ave E Scarborough, M1K 2S2,

UPSTAIRS ERRA MARKET, EGLINTON & BRIMLEY

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- ✦ தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ✦ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- ✦ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- ✦ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- ✦ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- ✦ நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).




5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

25 வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்

ADVICE FROM SOMEONE YOU CAN TRUST
Life insurance • Critical illness insurance • RESP
Kosalai Kumaraguruthasan*
647-981-1041
kosalai.kumaraguruthasan@sunlife.com
www.sunlife.ca/kosalai.kumaraguruthasan
*Mutual funds distributed by Sun Life Financial Investment Services (Canada) Inc. Sun Life Assurance Company of Canada is a member of the Sun Life group of companies. © Sun Life Assurance Company of Canada, 2021.
Sun Life
Life's brighter under the sun

உதயம் 1298 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 19, 2021

# சென்னையில் பாரதப் பிரதமரை வரவேற்றவர்களில் ஒருவர் நடிகர் திலகத்தின் புதல்வர் ராம்குமார்



அண்மையில் சென்னைக்கு வருகை தந்த பாரதப் பிரதமரை விமான நிலையத்திற்குச் சென்று நேரடியாக வரவேற்றவர்களில் ஒருவர் நடிகர் திலகத்தின் புதல்வர் ராம்குமார் என்பதை பலரும் பாராட்டியுள்ளார்கள்.

பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை அன்புச்சகோதரர் தளபதி ராம்குமார் அவர்கள் சென்று வரவேற்றபோது, தன்னிடம் இசைக்குயில் தீதீ (ஹிந்தியில் சகோதரி) லதா மங்கேஸ்கர் அவர்கள், என் சகோதரர் சிவாஜி அவர்களின் புதல்வர் திரு ராம்குமார் அவர்கள் தங்களை வரவேற்க காத்திருக்கிறார் என்று மோடி அவர்களிடம் சொன்னதாக அவரே சொல்லி, ராம்குமார் அவர்களை அன்புடன் தோளில் தட்டிக்கொடுத்தார். சிவாஜி கணேசன் அவர்கள் மறைந்தும் இன்றும் கூட அணையா விளக்காய் ஒளி வீசுகிறார் நடிகர் திலகம் என்று சிவாஜி ரசிகர் ஒருவர் இந்த செய்தியைப் படி த்துவிட்டு பாராட்டினார்.

*(செய்தியும் படமும்: சிவா பரமானந்தராஜா-கனடா)*

# தமிழ் மக்கள் வாக்களிக்கும் கட்சிகள் இரண்டு முக்கியமான பிரிவுகளாகப் பிரிந்து நிற்கின்றன

### பாராளுமன்ற உறுப்பினர் -விக்னேஸ்வரன்



சுவிற்சர்லாந்து தூதுவருடனான சந்திப்பு தொடர்பாக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், நீதியரசருமான க.வி.விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் புதன்கிழமைம மாலை ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

-குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,,,

இன்று இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் டொமினிக் ஃபேர்கலருடன் முதற் செயலாளர், அரசியல், சிடோனியா கேபிரியல் அத்துடன் நிகழ்ச்சிகள் இணைப்பாளர் சுசந்தி கோபாலகிருஸ்ணன் மூவரும் என்னை வந்து சந்தித்தார்கள். புதிய சுவிஸ் தூதுவரின் வடக்கை நோக்கிய முதற் பயணம் இதுவாகும். வவுனியாவில் தரித்து நின்று, இன்று மாலை இங்கு வந்து என்னைச் சந்தித்த பின்னர் நல்லூர்க் கந்தனைத் தரிசிக்கச் செல்கின்றார்கள்.

*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கம்)*

# ”என்னைப் பழி வாங்க தன் பிள்ளையைக் கொன்றவர் என்னையே கொன்றிருக்கலாம்”

### தன் ஒரே மகளை தந்தையின் துப்பாக்கிச் சன்னத்திற்கு இரை கொடுத்த தாயின் துயரம் இரு வருடங்கள் கடந்தும் தொடர்கிறது



கனடாவில் இரண்டு வருடங்கள் முன்னர் தன் ஒரே மகளை தன் கணவரின் கரங்களுக்குள் ஒப்படைத்து சில மணி நேரத்திற்கும் அவளை அதே தந்தையே சுட்டுக் கொன்ற சோகம் தாங்காது இன்னும் கண்ணீர் வடிக்கும் ஒரு பெண்ணின் கதை இது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் தனது மகள் தந்தையால் சுட்டுக்கொலைசெய்யப்பட்ட இதே நாளான பெப்ரவரி 8ம் திகதி தான் தனது மகளது பாடசாலை அருகே வழமையாக சென்று அமர்ந்திருந்து மகிழும் அதே வாங்கொன்றில் தான் பறிகொடுத்த தனது மகளின் புகைப்படத்தை வைத்துக் கொண்டு கணணீர் வடிக்கின்றார் தயார் பிரியா. தன்னிடம் பேசுவதற்கு வந்த ஒரு பத்திரிகையாளரிடம் பிரியா தன் கதையைக் கூறத் தொடங்குகின்றார்.

*(உள்ளே விபரமான செய்தி 12ம் பக்கம்)*

# ஆஸ்திரேலியாவில் இலங்கைக்கு நாடு கடத்தப்படவிருந்த தமிழ்க் குடும்பம் நடத்திய சட்டப் போராட்டம் வெற்றி




இலங்கைக்கு நாடு கடத்தப்படுவதை எதிர்த்து ஒரு தமிழ்க் குடும்பம் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும் ஆஸ்திரேலியாவிலேயே தொடர்ந்து தங்கலாம் என்று ஆஸ்திரேலிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஈழத் தமிழர் நடேசலிங்கம், அவரின் மனைவி பிரியா இருவரும் கடந்த 2012 மற்றும் 2013-ம் ஆண்டில் தனித்தனியாக ஆஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் அகதியாக வந்தனர். இவர்கள் இருவரும் மெல்போர்னில் உள்ள அகதிகள் முகாமில் தங்கி இருந்தபோது காதலித்துத் திருமணம் செய்து கொண்டனர்.

*(உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கம்)*

# கடந்த ஆண்டு கனடாவில் அளவிற்கு அதிகமான போதை வஸ்த்து காரணமான மரணங்கள் 5000 க்கும் அதிகம்



தற்போதைய கோவிட்-19 நோய்த்தொற்று காரணமாக மரணங்கள் தினமும் சம்பவிக்கின்றன. கனடாவின் பிரதமரும் மற்றும் மாகாணங்களின் முதல்வர்களும் மருத்துவ அதிகாரிகளும் நகரங்களின் நகர பிதாக்களும் தினமும் இந்த மரணங்கள் தொடர்பாக அறிக்கைகளை வெளியிட்ட வண்ணம் உள்ளார்கள். ஆனால் கோவிட்-19 அகன்று செல்வதாகத் தெரியவில்லை.

ஆனால் இன்னொரு பக்கத்தில் கடந்த கால் அரைநூற்றாண்டுகளுக்கு மேலாக உலகெங்கும் போதை வஸ்த்து பாவனை அதிகரித்து தினமும் உலகெங்கும் இளைஞர்களும் யுவதிகளும் மரணித்த வண்ணம் உள்ளார்கள்.

*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கம்)*

# ”தனி ஈழம் உருவாகணும்கிறது எல்லோருடைய ஆசை” என்கிறார் இயக்குநர் விக்ரமன்



அண்மையில் சென்னையில் இடம்பெற்ற ஒரு படப்பூசையின் போது ஈழத்தமிழர்களை நேசிக்கும் ஒரு இயக்குநரான விக்ரமன் அவர்கள் பேசும்போது, ”என்னோட பல படங்களுக்கு இசையமைச்ச நண்பர் எஸ்.ஏ. ராஜ்குமார் இந்த படத்துக்கு இசையமைச்சிருக்கிறது மகிழ்ச்சியா இருக்கு. சமூக அக்கறையை மையமா வெச்சு உருவாகியிருக்கிற இந்த படத்தோட ஒரு பாட்டுல ‘தமிழர்களோட சினத்தால் தனி ஈழம் உருவெடுக்கும்’ என்பது போல ஒரு வரி வருகிறது. இயக்குநரோட அந்த கனவு நனவாகணும். அதுதான் நம் எல்லோருடைய விருப்பமும் ஆசையும்கூட” என பெருமிதத்துடன் கூறினார்.

*(உள்ளே விபரமான செய்தி 10 ம் பக்கம்)*